ஸ்ரீ

உத்தரகாண்ட ஸங்கிரகம்

ஒவ்வொரு ஸர்கமும் சுருக்கி
எழுதப்பட்டுள்ளது.

எழுதி வெளியிட்டது:
ஸாஹித்திய சிரோமணி
ஸ்தாநீகம் பார்த்தஸாரதி அய்யங்கார்
"திருவரங்கம் பெரிய கோயில்" பத்திராதிபர், ஸ்ரீரங்கம்.

இம்பீரியல் பிரஸ், திருச்சி
ஸ்ரீமுக, ஐப்பசி

1933

விலை அணா. 0-8-0] [தபால் செலவு தனி

ஸ்ரீ

உத்தரகாண்டஸங்கிரகம்

எழுதி வெளியிட்டது:
ஸாஹித்திய சிரோமணி
ஸ்தாநீகம் பார்த்தஸாரதி அய்யங்கார்
"திருவரங்கம் பெரிய கோயில்" பத்திராதிபர், ஸ்ரீரங்கம்.

இம்பீரியல் பிரஸ், திருச்சி
ஸ்ரீமுக, ஐப்பசி
1933

விலை அணா 8] — [தபால் செலவு தனி

முகவுரை

நாவல்படிப்பினால் புத்தியும் யோசனையும் ஸாஹஸ மார்க்கங்களில் பாய்ந்து ரஸானுபவத்துக்கு வேண்டிய பகுத்தறிவுகூட இல்லாமற் போகிறது. நம்முடைய புராணேதிஹாஸங்களின் கதாபாகமாவது தெரிந்தால் புராணேதிஹாஸங்கள் நாவலைவிட மனோஹரங்களென்றும், ஸன்மார்கோபதேசங்களென்றும் தெரியலாகும். நம் தேசத்தின் பூருவசரித்திரம், ராஜவம்சங்கள், நாகரீகம், வேதாந்த தத்துவம் முதலியவற்றை எளிதாய் விளக்கவல்ல புராணேதிஹாஸங்கள் முற்றிலும் தேசபாஷையில் வெளியாகி யாவராலும் படிக்கப் படுவதுதான்—முக்கியமான தேசியக் கல்வியேயன்றி, இங்கிலீஷ் கதைகளை தேசபாஷையில் ப்ரசாரப்படுத்துவதும் நம்முடைய புஸ்தகங்களை இங்கிலீஷில் எழுதுவதும் தேசியக் கல்வியாகாது.

புராணேதிஹாஸங்களை சுலோகம் தவிராமல் மொழிபெயர்த்து வெளியிடுவது பணக்கஷ்டத்தினால் அஸாத்தியமாயிருப்பதுபற்றி ஸர்கம் தவிராமல் கதாபாகத்தை மட்டும் வெளியிட ஏற்பாடாயிருக்கிறது. இப்படிச் செய்வது ஆராய்ச்சிக்காரர்களுக்கும் பெரிய உபகாரம்.

கதாபாகத்துக்கு அவசியமாய் வேண்டிய பல ஆராய்ச்சிகளையும் ஆங்காங்கு குறிப்பிட்டுக் கூடியவரையில் ஸந்தேஹங்களையும் தீர்மானித்தெழுதுவது எக்காலத்திலும் யாருக்கும் கைக்கண்ணாடிபோல உதவும்.

பிரஸித்தமான ராமாயணத்தில் நம்முடைய அனுதரவினால் ஒதுக்கப்பட்ட உத்தரகாண்டமே முதல்முதலாக எடுத்துப் பலருடைய உதவியினால் பூர்த்தி செய்யப்பட்டது. ராமாயணம் முதலியவற்றை நாகரீக ரீதியில் கதையாகப்பண்ணினாலும், பழைய ரீதியில் புராணமாகச்சொன்னாலும் ஆராய்ச்சிக் குறைவினால் அவற்றின் கதாபாகங்களைக்கூடத் தீர்மானிப்பது கஷ்டமாயிருக்கிறது.

ஆராய்ச்சியிலுள்ள குதூஹலமும் முயற்சியும் எவ்வளவு அதிகமாயிருந்தாலும், அச்சிட்ட புஸ்தகரூபமாய் வெளியாவது மனுஷ்ய ஸஹாயம், பொருளுதவி, பலபுஸ்தகங்களின் ஸௌகரியம் முதலியவற்றுக்குத் தக்கவாறுதான் அமைகிறது. ஆகையால், எடுத்துக் காட்டும் குற்றங்கள் களிப்புடன் திருத்தப்படும்.

ஸ்ரீமுக—ஐப்பசி. —கிரந்த கர்த்தா.

ஸ்ரீ

உத்தரகாண்ட அட்டவணை

[ஸர்கம்]

1. ராவணன் முதலிய ராக்ஷஸர்களையும் விட இந்திரஜித்தை வதம் செய்ததுதான் பெரும் வீரச்செயலென்று அகஸ்தியர் சொல்ல, ராமன் அவனுடைய வரலாற்றைக் கேட்டார்.

2. திருணபிந்துவினுடைய பெண்ணுக்குப் புலஸ்தியரால் விச்ரவஸ் பிறந்தார்.

3. விச்ரவஸ்ஸுக்குக் குபேரன் பிறந்து இலங்கையைத் தனக்கிருப்பிடமாய்ப் பெற்றான்.

4. ராக்ஷஸர்களின் உத்பத்தி. ஹேதியினுடைய பிள்ளை வித்யுத்கேசனுக்கு ஸுகேசன் பிறந்தான்.

5. ஸுகேசனுக்கு மால்யவான், ஸுமாலி, மாலி—என்று மூன்று பிள்ளைகள். இலங்கை அவர்களுக்காகக் கட்டப்பட்டது.

6. மால்யவான் முதலியவர்களின் உபத்திரவத்தை மஹரிஷிகள் விஷ்ணுவினிடம் முறையிட, விஷ்ணு அபயமளித்தார். விஷ்ணுவுக்கும் ராக்ஷஸர்களுக்கும் யுத்தம் நடந்தது.

7. மாலி வதம் செய்யப்பட்டான்.

8. ராக்ஷஸர்கள் இலங்கையைவிட்டுப் பாதாளம் போயினர்.

9. ஸுமாலியின் பெண் கைகஸிக்கு விச்ரவஸ் மஹரிஷியினால் ராவணாதிகள் பிறந்தனர்.

10. ராவணாதிகள் பிரம்மாவினிடமிருந்து வரம் பெற்றார்கள்.

11. குபேரன் இலங்கைவிட்டுக் கைலாஸம் சென்றதும், ராக்ஷஸர்கள் ராவணனுக்கு லங்காராஜ்ய பட்டாபிஷேகம் செய்து வைத்தனர்.

12. ராவண, கும்பகர்ண, விபீஷணர்களுக்கும், சூர்ப்பநகைக்கும் கலியாணம் நடந்தது.

13. உலகத்தை மிகவும் ஹிம்ஸித்துக்கொண்டிருந்த ராவணனுக்குக் குபேரன் ஹிதம் சொல்லி யனுப்ப, ராவணன் குபேரனோடு சண்டைக்குப் புறப்பட்டான்.

14. ராவணாதிகளோடு சண்டை செய்து ஏராளமான யக்ஷர்கள் மடிந்தனர்.

15. ராவணன் குபேரனை வென்று புஷ்பக விமானத்தை அபஹரித்துக்கொண்டு போய்விட்டான்.

[ஸர்கம்]

16. சிவனை அவமதித்துக் கைலாஸத்தை அசைத்ததால் கைகள் நசுங்கப் பெற்ற ராவணன் சிவனை ஸ்தோத்திரம் செய்து அவருடைய அனுக்ரஹத்தைப் பெற்றான்.

17. ராவணன் வேதவதியின் கற்பையழிக்கத் தொடங்கி அவளால் சபிக்கப்பட்டான்.

18. யாகத்தினிடையே சண்டைக்கு வரமுடியாதிருந்த மருத்தனை ஜயித்ததாக ராவணன் உத்கோஷித்துக்கொண்டு போனான்.

19. ராவணன் அநரண்யனைக் கொன்று அவனால் சபிக்கப்பட்டான்.

20. யமனை ஜயித்து வருமாறு நாரதர் ராவணனை அனுப்பினார்.

21. யமபுரத்தில் யமதூதர்களுக்கும் ராவணனுக்கும் யுத்தம் நடந்தது.

22. யமன் யுத்தத்துக்கு வந்து ராவணனைக் கொல்லக் காலதண்டத்தை எடுக்கையில், பிரம்மா தம்முடைய வரம் பொய்யாகாம லிருக்குமாறு யமனைத் தடுத்துவிட்டார்.

23. ராவணன் பாதாளம் போய்,—நாக, நிவாதகவச, காலகேயர்களையும் ஜயித்து இலங்கைக்குத் திரும்பினான்.

[அ. ஸ. 1. ராவணன் மஹாபலியிடம் சண்டைக்குப் போய்த் திரும்பி வந்தான்.

அ. ஸ. 2. ராவணன் ஸூரியனை ஜயிக்கப் போனான்.

அ. ஸ. 3. ராவணனும் மாந்தாதாவும் நெடுநேரம் போர் புரிகையில் புலஸ்தியரும் காலவரும் வந்து ஸமாதானம் செய்து வைத்தார்கள்.

அ. ஸ. 4. சந்திரனை அழிக்கப்போன ராவணனைப் பிரம்மா தடுத்தார்.

அ. ஸ. 5. ராவணன் கபிலரூபியாய்ப் பாதாளத்திலிருக்கும் விஷ்ணுவை எதிர்த்து அவர் கையினால் தனக்கு மரணத்தை விரும்பினான்.]

24. ஸ்திரீ மூலமாய் மரணமுண்டாகும்படி ராவணனுக்கு சாபம் நேரிட்டது. ராவணன் தன்னால் விதவையாக்கப்பட்ட சூர்ப்பநகையைப் பதினாலாயிரம் ராக்ஷஸர்களோடு தண்டகாரணியத்தில் மனம்போல ஸஞ்சரிக்க வைத்து சாந்தப்படுத்தினான்.

25. ராவணன் இந்திரஜித்தின் யாகத்தைத்தடுத்து, கும்பீனஸியைக் கவர்ந்து சென்ற மதுவைக் கொன்று, தேவலோகத்தையும் ஜயிப்பதற்காக சேனையைத் திரட்டிக்கொண்டு மதுபுரம் போனான்.

26. நளகூபரனிடம் போய்க்கொண்டிருந்த ரம்பையை பலாத்காரமாய் அனுபவித்து ராவணன் நளகூபரனால் சபிக்கப்பட்டான்.

27. தேவர்களுடைய யுத்தத்தில் ஸுமாலி மாண்டான்.

[ஸர்கம்]

28. இந்திரஜித்துக்கும் ஜயந்தனுக்கும்,—ராவணனுக்கும் இந்திரனுக்கும் யுத்தம் நடந்தது.

29. இந்திரஜித்து தேவேந்திரனை ஜயித்து இலங்கைக்குக் கொண்டு போய் கோபுரவாசலில் கட்டி வைத்தான்.

30. பிரம்மா இந்திரனை விடுவித்து அவனுக்கு இந்த ஆபத்து நேர்ந்த காரணத்தை விவரித்தார்.

31. ராவணன் கார்த்த வீரியார்ஜுனனை ஜயிக்கப் போய் வழியே நர்மதா தீரத்தில் லிங்கபூஜை செய்தான்.

32. கார்த்த வீரியார்ஜுனன் ராவணனை ஜயித்துக் கட்டித் தன் பட்டணத்துக்குக் கொண்டு போனான்.

33. புலஸ்தியர் வந்து ராவணனை விடுவித்தார்.

34. ராவணன் வாலியை ஜயிக்கப் போய் அவமானப்பட்டான்.

35. ஹனுமானுடைய பராக்கிரமத்தைக் கேட்க விரும்பிய ராமனுக்கு அகஸ்தியர் ஹனுமான் பிறந்து ஸூரியனை விழுங்கப்போன விவரத்தைச் சொன்னார்.

36. பிரம்மாவினால் பிழைப்பிக்கப்பட்ட ஹனுமான் தேவர்களிடமிருந்து வரத்தையும், ரிஷிகளிடமிருந்து சாபத்தையும் பெற்றார்.

37. ராமன் பட்டாபிஷேகத்துக்கு மறுநாள் ஸபையில் வீற்றிருந்து விநோதமாய்க் காலம் கழித்தார்.

[அ. ஸ. 1. ருக்ஷரஜஸ் பெண்ணாய் மாறியபோது இந்திரனும் ஸூரியனும் அப்பெண்ணிடம் வாலி ஸுக்ரீவர்களைப் பிறப்பித்தார்கள்.

அ. ஸ. 2. ஸநத்குமாரர் ராவணனுக்கு விஷ்ணுவின் மஹிமையைச் சொன்னார்.

அ. ஸ. 3. ஸநத்குமாரர் ராவணனுக்கு விஷ்ணுவின் லக்ஷணத்தைச் சொன்னார்.

அ. ஸ. 4. விஷ்ணுவின் கையினால் வதம் பெறுவதற்காகவே ராவணன் ஸீதையைக் கவர்ந்தான்.

அ. ஸ. 5. ராவணன் சுவேத த்வீபம் போய் அவமானப்பட்டான்.]

38. பட்டாபிஷேகத்துக்கு வந்த வேந்தர்களை ராமன் உபசரித்து அனுப்பினார்.

39. ராமன் ராக்ஷஸர்களோடும் வானரர்களோடும் விநோதமாய்க் காலம் கழித்தார்.

40. ராமன் வானரர்களையும் ராக்ஷஸர்களையும் உபசரித்தனுப்பினார்.

41. ராமன் புஷ்பகத்தை நினைத்தபோது வரச்சொல்லி யனுப்பினார்.

42. ஸீதை கர்ப்பமானாள்.

43. ராமனைப் பற்றி ராஜ்யத்தில் பரவிய நிந்தை ராமன் காதுக் கெட்டியது.

44. ராமன் தனக்கு நேரிட்ட அபவாதத்தைத் தெரிவிப்பதற்காகத் லக்ஷ்மணன் முதலியவர்களை வரவழைத்தார்.

45. ராமன் தனக்கு நேர்ந்த அபவாதத்தைத் தம்பிகளுக் கறிவித்து ஸீதையை அப்புறப்படுத்தச் சொன்னார்.

46. லக்ஷ்மணன் ஸீதையை கங்கைக் கரைக்கு அழைத்துக்கொண்டு போனான்.

47. லக்ஷ்மணன் ராமனுடைய கட்டளையை ஸீதைக்குத் தெரிவித்தான்.

48. லக்ஷ்மணன் ஸீதையைக் காட்டில் விட்டுத் திரும்பினான்.

49. வால்மீகி ஸீதையைத் தம்முடைய ஆச்ரமத்துக்கு அழைத்துக் கொண்டு போனார்.

50. ராமன் ஸீதையையும் ஸஹோதரரையும் பரித்தியாகம் செய்து விடுவார்—என்று பூர்வம் துர்வாஸர் சொன்னதை ஸுமந்திரன் லக்ஷ்மணனுக்குத் தெரிவித்தான்.

51. விஷ்ணுவுக்குப் பத்னீவியோகம் நேரிடுமாறு ப்ருகு சபித்ததை துர்வாஸர் தசரதனுக்கு விவரித்தப் பிரகாரம் ஸுமந்திரன் லக்ஷ்மணனுக் கறிவித்தான்.

52. ஸீதையை விட்டு வந்த செய்தியை லக்ஷ்மணன் ராமனுக்கறிவித்தான்.

53. வந்தவர்களைக் காக்கவைக்காமல் ராஜ்யகாரியம் பார்க்கவேண்டுமென்று ராமன் லக்ஷ்மணனுக்கு ந்ருகோபாக்கியான மூலமாய் எடுத்துரைத்தார்.

54. ந்ருகன் சாபத்தை அனுபவித்த விதம்.

55. வஸிஷ்டர் நிமிச் சக்ரவர்த்தியைப் பார்க்கக் காத்திருந்தும் அவன் வராததால், அவன் சரீரத்தை இழந்து திரியும்படி சபித்தார். நிமியும் அப்படியே வஸிஷ்டரை சபித்தான்.

56. நிமியின் சாபத்தினால் சரீரமிழந்த வஸிஷ்டர் சரீரம் பெறுவதற்கு முயற்சி செய்தார்.

57. நிமி வஸிஷ்டர்கள் சரீரம் பெற்ற விவரம்.

58. நிமிச் சக்ரவர்த்தி பொறுமையில்லா திருந்ததற்கு லக்ஷ்மணன் வியப்

[ஸர்கம்]

புற்றது கண்டு, சுக்ராசாரியரால் சபிக்கப்பட்ட யயாதி பொறுமை யோடிருந்த கதையைச் சொன்னார் ராமன்.

59. யயாதி கிழட்டுத்தனத்தைப் பூருவிடம் வைத்து, அவனுடைய யௌவனத்தை வாங்கிக்கொண்டு நெடுநாள் ஸுகித்திருந்து, பூருவுக்கு ராஜ்யத்தைக் கொடுத்து, யதுவை சபித்தான்.

[அ. ஸ. 1. அரண்மனை வாயிலில் காரியமாக வந்திருந்த ஒரு நாயை ராமன் உள்ளே அனுமதித்தார்.

அ. ஸ. 2. தன்னை யடித்த ஸர்வார்த்த ஸித்தன் என்ற பிராம்மணனுக்கு நாய் கோயில் மணியம் வேலையை ராமன் மூலமாய் வாங்கிக் கொடுத்தது.

அ. ஸ. 3. க்ருத்ரோலூக உபாக்யானம்—கோட்டான் கழுகு கதை. கோட்டானுடைய கூட்டைக் கழுகு ஆக்ரமித்து இரண்டும் சண்டையிட்டு ராமனிடம் தெரிவிக்க, கூடு கோட்டானுடைய தென்று ராமன் நிர்ணயித்துக் கழுகை தண்டித்தார்]

60. யமுனாதீரத்தில் வஸிக்கும் ரிஷிகள் ராமனைப் பார்க்க வந்தார்கள்.

61. மதுவின் மைந்தனான லவணாஸுரனிடமிருந்து தங்களைக் காக்கும்படி ரிஷிகள் வேண்டினர்.

62. சத்ருக்னன் லவணாஸுரனை வதம் செய்வதாய் ஒப்புக்கொண்டான்.

63. ராமன் சத்ருக்னனுக்கு மதுராஜ்யத்தைப் பட்டாபிஷேகம் செய்து லவணாஸுர வதத்துக்கு வேண்டிய மர்மங்களை உபதேசித்து திவ்யாஸ்த்ரத்தையும் கொடுத்தார்.

64. சத்துருக்னன் மதுபுரத்துக்குப் பிரயாணப்பட்டான்.

65. சத்ருக்னன் வால்மீகி ஆச்ரமத்துக்குப் போனான். வால்மீகி கல்மாஷபாதன் என்ற ராஜனுடைய சரித்திரத்தைச் சொன்னார்.

66. ஸீதைக்குக் குசலவர்கள் பிறந்தார்கள். சத்ருக்னன் யமுனாதீரம் போனான்.

67. சத்ருக்னன் லவணாஸுரனுடைய பராக்ரமம் எவ்வாறெனக் கேட்க, அவனுடைய சூலத்தினால் மாந்தாதா சாம்பலான விதத்தைச் சொன்னார் ச்யவனர்.

68. சத்ருக்னன் லவணனோடு சண்டைக்கு ஸித்தமானான்.

69. லவணாஸுரவதம்.

70. சத்ருக்னன் மதுராபுரியை நிர்மாணம் செய்தான்.

[ஸர்கம்]

71. சத்ருக்னன் அயோத்திக்குத் திரும்புகையில் வால்மீகி ஆச்ரமத்தில் தங்கி அங்கு கானம் செய்யப்படும் ராமாயணத்தைக் கேட்டான்.

72. சத்ருக்னன் அயோத்தியில் ராமனைப் பார்த்து விட்டு மதுரா புரிக்குப் போனான்.

73. ராம ராஜ்யத்தில் ஒரு பிராம்மணக் குழந்தை அல்பாயுஸாய் இறந்தது.

74. நாரதர் யுகதர்மங்களை எடுத்துரைத்து சூத்ரன் தபஸ் செய்ததால் பிராம்மணக் குழந்தை இறந்ததென்றார்.

75. ராமன் தபஸ் செய்யும் சூத்ரனைத் தேடிச் சென்றார்.

76. ராமன் தபஸ் செய்த சம்புகனை வதம் செய்து, தேவர்களின் உதவியால் பிராம்மணக் குழந்தையைப் பிழைப்பித்து, அகஸ்தியாச்ரமம் போய் ஓர் ஆபரணத்தைப் பெற்றுக்கொண்டார்.

77. அகஸ்தியர் குளத்தில் பிணம் தின்னுமொரு திவ்ய புருஷனைப் பார்த்தார்.

78. பிணம் தின்னும்படி சாபம் பெற்ற சுவேத ராஜன் அகஸ்தியரால் விமோசன மடைந்தான்.

79. தண்டகாரணிய விருத்தாந்தம் : இக்ஷ்வாகுவின் பிள்ளையான தண்டனுடைய கதை.

80. தண்டன் ஆசாரிய புத்திரியான அரஜையை பலாத்காரமாய்ப் புணர்ந்தான்.

81. சுக்ராசாரியர் தண்டன் சாம்பலாகுமாறும் அவனுடைய ராஜ்யம் மண்மாரியால் அழியுமாறும் சபித்தார்.

82. ராமன் அகஸ்தியரிடம் விடை பெற்று அயோத்தி சேர்ந்தார்.

83. ராமன் ராஜஸூய யாகம் செய்ய விரும்பினார். பரதன் ராஜஸூய யாகம் வேண்டாமென்று அறிவித்தான்.

84. லக்ஷ்மணன் அசுவமேத யாகத்தின் பெருமையைச்சொன்னான்: தவம் செய்து கொண்டிருந்த விருத்திராஸுரனை இந்திரன் வதம் செய்ய முயன்றான்.

85. விருத்திராஸுரனை வதம் செய்ததால் இந்திரனைப் பிரம்மஹத்தி தோஷம் பிடித்துக்கொண்டது.

86. இந்திரன் அசுவமேதயாகம் செய்து பிரம்மஹத்தி தோஷத்தி லிருந்து விடுபட்டான்.

[ஸர்கம்]

87. இளோபாக்கியானம்: சிவபெருமானுடைய சக்தியால் ஸ்திரீயாக மாறிய இளனை ஒரு மாஸம் ஸ்திரீயாகவும் ஒரு மாஸம் புருஷனாகவும் இருக்கும்படி பார்வதி அனுக்ரஹித்தாள்.

88. புதன் இளையைக் கண்டு மோஹித்தான்.

89. இளை புதனுடைய ஸம்பந்தத்தால் புரூரவஸ்ஸைப் பெற்றாள்.

90. அசுவமேத யாகத்தினால் இளனுக்குப் பெண்மை நீங்கிற்று.

91. ராமன் கோமதீ தீரத்தில் அசுவமேத யாகம் நடத்த ஏற்பாடு செய்தார்.

92. ராமன் அசுவமேத யாகம் செய்தார்.

93. யாகம் நடக்குமிடத்தில் ராமாயணத்தை கானம் செய்யும்படி வால்மீகி குசலவர்களுக்குச் சொன்னார்.

94. ராமன் ராமாயண கானம் கேட்டார்.

95. உலகத்தாருடைய நம்பிக்கைக்காக ராமன் ஸீதையை சபதம் செய்யச் சொன்னார்.

96. ஸீதை சபதம் பண்ணுவதற்காக வால்மீகியோடு ஸபைக்கு வந்தாள்.

97. ஸீதை சபதம் செய்து பாதாளத்தில் பிரவேசித்தாள்.

98. ஸீதையைக் கவர்ந்ததுபற்றி பூமியை அழிக்கப்போன ராமனைப் பிரம்மா ஸமாதானம் செய்தார்.

99. ராமன் ராமாயணத்தின் மிச்ச பாகத்தைக் கேட்டு, அயோத்திபோய் வஸித்திருந்தார்.

100. கந்தவர்களை வதம் பண்ணுவதற்காக ராமன் பரதனை அனுப்பினார்.

101. பரதன் கந்தர்வர்களைக் கொன்று தன் பிள்ளைகளை காந்தாரதேசத்துக் கரசர்களாக்கித் திரும்பிவந்தான்.

102. லக்ஷ்மணனுடைய பிள்ளைகளுக்குக் காருபத தேசத்தை முடிசூட்டப்பட்டது.

103. ராமனைக் காண்பதற்காகப் பிரம்மாவினால் அனுப்பப்பட்ட காலன் ரிஷிவேஷத்தோடு ராமனிடம் வந்தான்.

104. ராமன் இனி தேவலோகத்துக்கு வரவேண்டுமென்று காலன் மூலமாய் பிரம்மா சொல்லி யனுப்பினார்.

105. ராமனும் காலனும் பேசிக்கொண்டிருக்கையில் லக்ஷ்மணன் அருகில்

[ஸர்கம்]

போய் வாசலில் துர்வாஸ மஹரிஷி காத்திருப்பதைத் தெரிவித்தான்.

106 ராமன் லக்ஷ்மணனைப் பரித்தியாகம் செய்தார்.

107. ராமன் குசலவர்களுக்குக் கோஸல தேசத்தைப் பட்டாபிஷேகம் செய்து வைத்தார்.

108. விபீஷணன், ஹனுமான்—முதலியவர்களை ராமன் பூலோகத்திலேயே இருக்குமாறு அனுக்ரஹித்தார்.

109. ராமன் மஹாப்ரஸ்தானம் செய்தார்.

110. ராமன் விஷ்ணுசரீரத்தில் பிரவேசித்தார். ராமனைப் பின் தொடர்ந்தோர் யாவரும ஸாந்தானிக லோகம் சேர்ந்தார்கள்.

111. ஸ்ரீராமாயண மஹிமை.

முக்கியமான கிளைக் கதைகள்

ஸர்கம்

2. விச்ரவஸ் சரித்திரம்.
3. குபேரஜனனம்.
4. ராவணனுக்கு முற்பட்ட ராக்ஷஸர்களின் கதை.
35. ஹநுமதுபாக்கியானம். வாலி ஸுக்ரீவோத்பத்தி.
53. ந்ருகோபாக்கியானம். நிமிவஸிஷ்டர்களின்கதை.
59. யயாதி சரித்திரம்.
77. சுவேதராஜோபாக்கியானம்.
79. தண்டோபாக்கியானம்.
84. அசுவமேதப்ரபாவம்.
85. விருத்திராஸுரவதம்.
87. இளோபாக்கியானம்.

உத்தரகாண்டத்தில் பிரதான கட்டங்கள்

1.	ராவண சரித்திரம்.	ஸர். 1—34
2.	ஸீதாபரித்தியாகம்.	42—52
3.	லவணாஸுரவதம்.	60—72
4.	சம்புகவதம்.	73—76
5.	அசுவமேதயாகம்.	83—99
6.	கந்தர்வவதம்.	100—101
7.	காலவிருத்தாந்தம்.	103—106
8.	ராமநிர்யாணம்.	107—111

உத்தரகாண்ட ஸங்கிரஹம்.

1—ம் ஸர்கம்.

ராவணன் முதலிய ராக்ஷஸர்களையும் விட இந்திரஜித்தை வதம் செய்ததுதான் பெரும் வீரச்செயலென்று அகஸ்தியர் சொல்ல, ராமன் அவனுடைய வரலாற்றைக் கேட்டார்.

ஸ்ரீராமனுக்கு பட்டாபிஷேகமானவுடன் அவரைக் காண்பதற்காக கிழக்கு திக்கிலுள்ள கௌசிகர்[1] முதலிய ரிஷிகளும், தெற்கிலுள்ள அகஸ்தியர் முதலானோரும் மேற்கிலுள்ள ந்ருஷத்கு முதலியவர்களும், எப்பொழுதும் வடக்கு திக்கிலேயே வஸிக்கும் வஸிஷ்டர்[2] முதலான ஸப்த ரிஷிகளும், ராமனுடைய அரண்மனைக்கு வந்தனர். ராமனால் ஸத்கரிக்கப்பட்ட ரிஷிகள் ராவண கும்பகர்ணர்கள் முதலிய வீர ராக்ஷஸர்களைக்கொன்ற ராமனைப் புகழும்போது இந்திரஜித்தை வதம் செய்ததுதான் பெரிதும் வியக்கத்தக்கது என்றனர்.

ராவணன், கும்பகர்ணன், மஹோதரன், பிரஹஸ்தன் முதலான மஹா வீரர்களை விட்டு இந்திரஜித்தைப்பற்றி அதிகமாய்ச்சொல்லக் காரணமென்ன? அவனுடைய பராக்கிரமம் முதலியவை எவ்விதம்? என்று ராமன் அகஸ்தியரைக் கேட்டார்.

2—ம் ஸர்கம்.

திருணபிந்துவினுடைய பெண்ணுக்கு புலஸ்தியரால் விச்ரவஸ் பிறந்தார்.

அகஸ்தியர் சொல்லுகிறார் :—

"பிரம்மபுத்திரரான புலஸ்தியர் முன்பு கிருதயுகத்தில் மஹா மேருவிலுள்ள திருணபிந்துவின் ஆச்ரமம் போய் தவம் செய்து கொண்டிருந்தார். மிக்க இனிதாயிருந்த அவ்வாச்ரமத்தில் தேவ

---

1. இந்த கௌசிகர் விச்வாமித்திரரன்றி வேறொருவர்—என்று கோவிந்தராஜ வியாக்கியானம்.

2. நக்ஷத்திரமண்டலத்திலுள்ள ஸப்தரிஷிகளில் சேர்ந்த வஸிஷ்டரும் அயோத்தியில் தசரதபுரோஹிதரான வஸிஷ்டரும் ஒருவரே; தனித்தனி சரீரத்தோடு அவர் இரண்டிடத்திலும் இருந்தார். இப்போது அயோத்திக்கு ராமனிடம் வந்தது நக்ஷத்திர மண்டலத்திலுள்ள வஸிஷ்டரேயன்றி புரோஹித வஸிஷ்டரல்ல—என்று கோவிந்தராஜ வியாக்கியானம்.

கன்னிகை முதலிய யாவரும் ஆடல் பாடல் செய்ததால் ரிஷியின் தபஸ்ஸுக்கு இடையூறு நேரிட்டது. தன்கண்ணில் படும்பெண் கர்பமாவாள்—என்று புலஸ்தியர் சபிக்க, பெண்கள் எல்லோரும் அவ்விடம் விட்டகன்றனர். திருணபிந்துவினுடைய பெண்ணுக்கு[1] மட்டும் இந்த சாபம் காதில் விழவில்லை. தன் தோழியைத் தேடிப் போன அவள் வேதாத்தியயனம் செய்துகொண்டிருந்த புலஸ்தியரால் பார்க்கப்பட்டதும், அவளுடைய மேனி வெளுத்து வயிறு கனத்தது. திருணபிந்துவியான திருஷ்டியால் இதையறிந்து தன் பெண்ணைப் புலஸ்தியருக்கே கொடுத்துவிட்டான். அவளுக்கு வேத ச்ருதியைக் கேட்டவாறே உத்பத்தியானதால் விச்ரவஸ் என்று பெயர்கொண்ட பிள்ளை பிறந்தது.

3—ம் ஸர்கம்.

விச்ரவஸ்ஸுக்கு குபேரன் பிறந்து இலங்கையைத் தனக்கிருப்பிடமாய்ப் பெற்றான்.

"நாளடைவில் விச்ரவஸ் பெரிய ரிஷியாகி பரத்துவாஜருடைய பெண் தேவவர்ணியைக் கலியாணம் செய்துகொண்டார். இவருக்கு வைச்ரவணன் என்ற பிள்ளை பிறந்தது. இவன் லோகபாலனும் தனபதியாயுமிருக்க விரும்பி ஆயிரம் வருஷம் தபஸ் செய்கையில், இந்திரன், வருணன், யமன்—மூவரையும் ஸ்ருஷ்டித்து நான்காம் லோகபாலரை ஸ்ருஷ்டிக்க இருந்த[2] பிரம்மா பிரத்தியக்ஷமாகி விரும்பிய வரத்தையும் புஷ்பக விமானத்தையும் கொடுத்தார். பிரம்மா தனக்கோர் இருப்பிடம் கொடாததால் தான் எங்கிருப்பதென்று குபேரன் தன்பிதாவைக் கேட்டான்.

தெற்கு ஸமுத்திரக்கரையில் திரிகூட பர்வத சிகரத்தில் ராக்ஷஸர்களுக்காக விச்வகர்மாவினால் ஸ்ருஷ்டிக்கப்பட்டு, ராக்ஷஸர்கள் விஷ்ணுவுக்கு பயந்து பாதாளம் போய்விட்டதால் காலியாயிருந்த இலங்கையில் விச்ரவஸ் தன் பிள்ளையை வஸிக்கச் சொன்னார். குபேரன் நைருதர்களுக்கு அதிபதியாய் இலங்கையில் வஸித்துக் கொண்டு அடிக்கடி புஷ்பகத்திலேறி தாய்தந்தையர்களிடம் வந்து கொண்டிருந்தான்."

---

1. இங்கு இவளுடைய பெயரைக்காணோம்.

2. லோகபாலர்கள் ஒரே தடவையில் ஸ்ருஷ்டிக்கப்படவில்லையென்று இதனால் தெரிகிறது.

4—ம் ஸர்கம்.

ராக்ஷஸர்களின் உத்பத்தி. ஹேதியினுடைய பிள்ளை வித்யுத்கேசனுக்கு ஸுகேசன் பிறந்தான்.

ஆதி முதல் இலங்கை ராக்ஷஸர்களுடைய தாயிருந்ததென்றும் புலஸ்திய வம்சம் தவிர வேறு மூலமாயும் ராக்ஷஸர்களிருந்தார்களென்றும் கேள்விப்பட்ட ராமன் ராக்ஷஸர்களுடைய உத்பத்தியையும் அவர்கள் விஷ்ணுவால் விரட்டப்பட்ட விவரத்தையும் சொல்லுமாறு கேட்க, அகஸ்தியர் சொல்லுகிறார் :—

" பிரம்மா முதலில் ஜலத்தையும் அதைக்காப்பதற்காக பிராணிகளையும் ஸ்ருஷ்டித்தபோது,—பசிதாஹத்தால் வருந்திய சில பிராணிகள் தாங்கள் என் செய்வதென்று கேட்க,—இந்த ஜலத்தை ரக்ஷியுங்கள் என்றார். சில பிராணிகள் யக்ஷிக்கிறோம் (பக்ஷிக்கிறோம்) என்றும், சில ரக்ஷிக்கிறோம் என்றும் சொல்ல, உங்களில் யக்ஷிப்பவர் யக்ஷர்களாயும், ரக்ஷிப்பவர் ராக்ஷஸராயுமாவீர்[1] என்றார் பிரம்மா.

" ராக்ஷஸர்களுக்கு அதிபதிகளாயிருந்த ஹேதி ப்ரஹேதி—என்ற இரு ஸஹோதரர்களில் ப்ரஹேதி விரக்தனாய்த்தபோவனம் போனான். யமனுடைய ஸஹோதரி பயை என்பவளைக் கலியாணம் செய்து கொண்ட ஹேதிக்கு வித்யுத்கேசன் என்ற பிள்ளை பிறந்தது. ஸந்தியையின் பெண் ஸாலகடங்கடைக்கும் வித்யுத்கேசனுக்கும் கலியாணமாயிற்று. ஸாலகடங்கடை கர்பமாகி மந்தரபர்வதம் போய் பிரஸவித்து, புருஷனோடு ஸுகித்திருப்பதற்காக குழந்தையை அவ்விடத்திலேயே விட்டு வந்து, குழந்தையின் நினைவில்லாமலே காலம் கழித்தாள். குழந்தை வாயில் கையைப்புதைத்து அழுது கொண்டிருந்தபோது, விருஷபவாஹனத்தில் பார்வதியோடு வாயுமார்கமாய்ப் போய்க்கொண்டிருந்த பரமசிவன் பார்வதியின் திருப்திக்காக—தாய்க்கு ஸமமான வயஸையும். ஆகாயத்தில் ஸஞ்சரிக்க வல்லதொரு பட்டணத்தையும் அக்குழந்தைக்குக் கொடுத்தார். ராக்ஷஸர்களுக்கு உடனே கர்பம், உடனே பிரஸவம், பிறக்கும் போதே தாய்க்கு ஸமமான வயஸு—என்று பார்வதி வரம்

---

1. *ரக்ஷிப்பதால் ராக்ஷஸர் என்று பெயர்பெற்றவர்களே ரக்ஷியாமல் பக்ஷிப்பவராய் விளங்கினார்கள்! யக்ஷர்கள் ராக்ஷஸர்கள் என்ற பெயர் இந்தக் காரணத்தினால்தான் வந்ததா என்று புராணாந்தரங்களிலும் கவனிக்க வேண்டும்.*

கொடுத்தாள்.[1] ஸுகேசன் சிவபிரானுடைய வரத்தையும் ஆகாயக் கோட்டையையும் பெற்று விளங்கினான்.

5—ம் ஸர்கம்.

ஸுகேசனுக்கு மாலியவான், ஸுமாலி, மாலி—என்று மூன்று பிள்ளைகள். இலங்கை அவர்களுக்காக கட்டப்பட்டது.

"கிராமணி என்ற கந்தர்வன்[2] ஸுகேசனுக்கு தன்னுடைய பெண் தேவவதியைக் கலியாணம் செய்துகொடுத்தான். மாலியவான் ஸுமாலி, மாலி—என்று ஸுகேசனுக்கு மூன்று பிள்ளைகள் பிறந்து, மேருபர்வதம் போய்த்தவம் செய்து, தாங்கள் யாராலும் ஜயிக்க முடியாதவர்களாயும், பிறரை ஜயிப்பவர்களாயும், சிரஞ்சீவிகளாயும், ஸஹோதர ஒற்றுமையுள்ளவர்களாயுமிருக்குமாறு பிரம்மாவினிடமிருந்து வரம் பெற்று உலகத்தை மிகவும் ஹிம்ஸித்துக்கொண்டிருந்தார்கள். தங்களுக்கோர் இருப்பிடம் அமைக்குமாறு அவர்கள் விச்வகர்மாவிடம் சொல்ல,—தென் ஸமுத்திரக்கரையில் திரிகூட பர்வதத்தைச் சேர்ந்த ஸுவேல மலையின்மேல் இலங்கை கட்டப்பட்டது. நர்மதை என்னும் கந்தர்வி தன்னுடைய மூன்று பெண்களையும் அம்மூவருக்கும் கலியாணம் செய்து கொடுத்தாள்.[3]

6—ம் ஸர்கம்.

மாலியவான் முதலியவர்களின் உபத்திரவத்தை மஹரிஷிகள் விஷ்ணுவிடம் முறையிட, விஷ்ணு அபயமளித்தார். விஷ்ணுவுக்கும் ராக்ஷஸர்களுக்கும் யுத்தம் நடந்தது.

---

1. சிவன் ஸுகேசனொருவனுக்கு மட்டுமே வரம் கொடுத்தார். பார்வதி ராக்ஷஸர் யாவருக்கும் வரம் கொடுத்தாள். ராக்ஷஸக் குழந்தைகளுக்கு இப்படி பார்வதி வரம் கொடுத்த விஷயத்தைப் புராணாந்தரங்களிலும் கவனிக்கவேண்டும்.

2. கந்தர்வர்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும் விவாஹ ஸம்பந்தமிருப்பதாய்த் தெரிகிறது.

3. மால்யவானுடைய மனைவி ஸுந்தரி; வஜ்ரமுஷ்டி, விரூபாக்ஷன், துர்முகன், ஸுப்தக்னன், யக்ஞகோபன், மத்தன், உன்மத்தன்—என்று ஏழு பிள்ளைகள்; அனலே யென்று ஒரு பெண். ஸுமாலியின் மனைவி கேதுமதி; ப்ரஹஸ்தன், அகம்பனன், விகடன், காலகார்முகன், தூம்ராக்ஷன், தண்டன், ஸுபார்சுவன், ஸம்ஹ்ராதி, ப்ரகஸன், பாஸகர்ணன்—என்று ஒன்பது பிள்ளைகள்; ராகை, புஷ்போத்கடை, கைகஸி, கும்பீனஸி—என்று நாலு பெண்கள். மாலியின் மனைவி வஸுதை; அநிலன், அநலன், ஹரன், ஸம்பாதி—என்று நாலு பிள்ளைகள். இந்நால்வரும் விபீஷண மந்திரிகளாயிருந்தனர்.

"மால்யவான் முதலிய ராக்ஷஸர்களால் மிகவும் ஹிம்ஸிக்கப்பட்ட மஹரிஷிகள் தம்மை ரக்ஷிக்குமாறு சிவனைப்பிரார்த்திக்க, அவர் ஸுகேசனுக்கு தான் வரம் கொடுத்த தாக்ஷிண்யத்தினால் மறுத்து விஷ்ணுவை சரணாகதி பண்ணச்சொன்னார். மஹரிஷிகள் விஷ்ணுவிடம் போய் பிரார்த்தித்தார்கள். விஷ்ணு அவர்களுக்கு அபயம் கொடுத்தார். மால்யவான் இந்த செய்தியையறிந்து விஷ்ணுவின் பராக்கிரமத்தையும், அவரிடம் விரோதம் கொண்ட ஹிரண்யகசிபு முதலானோர் வாழாமல் மடிந்ததையும் தன் ஸஹோதரர்களுக்கு எடுத்துரைத்தான். பிரம்மா கொடுத்த வரத்திலும், தாங்கள் செய்துவரும் தான தர்மங்களிலும், ஸுமாலி, மாலி—இருவரும் மிகுந்த நம்பிக்கை கொண்டு,—விஷ்ணு தங்களிடம் விரோதப்படக் காரணமில்லை; தேவர்களின் தூண்டுதலாலேயே விரோதம் கொள்கிறார்—என்று சொல்லி, தேவர்களின்மீது படையெடுப்பதற்காக ஏராளமான ராக்ஷஸர்களையும் ஆயுதங்களையும் சேர்த்து மால்யவானையும் அழைத்துக்கொண்டு தேவலோகம் போய்ச்சேர்ந்தார்கள். புறப்படும்போதே பல அபசகுனங்கள் நேர்ந்தன. தேவதூதன்[1] மூலமாய் யாவற்றையுமறிந்து கொண்டு விஷ்ணு அநேகம் ஆயுதங்களோடு கருடன்மீதேறி வந்தார். யுத்தம் ஆரம்பமாயிற்று.

7—ம் ஸர்கம்.

மாலி வதம் செய்யப்பட்டான்.

"விஷ்ணு சங்க நாதத்தினால் ராக்ஷஸர்களைக் கலங்கச்செய்து பாணங்களைப் பொழிந்தார். ராக்ஷஸர்கள் விஷ்ணு பாணத்தின் அடி பொறுக்கமாட்டாமல் இலங்கைக்கு ஓட்டம் பிடித்தார்கள். அவர்களை தைரியப்படுத்தி அழைத்துவந்து யுத்தம் செய்த ஸுமாலியினுடைய ஸாரதியின் தலை விஷ்ணு பாணத்தினால் அறுந்தது. ஸாரதியில்லாததால் குதிரைகள் தேரை இழுத்துக்கொண்டு ஓடிப்போயின. பிறகு, மாலி யுத்தத்துக்கு வந்தபோது, விஷ்ணு அவனுடைய கிரீடம், வில், கொடி, ரதம்—யாவற்றையும் முறித்துத் தள்ளினார். மாலி தடியை யெடுத்து கருடனைத்தலையிலடிக்க, வலி பொறுக்காமல் புறங்காட்டியோடிய கருடனை விஷ்ணு மிகவும் சினந்து, அதன் மீதிருந்தவாறே மாலியைக்குறித்து சக்கரத்தை

1. இங்கு தேவதூதனுடைய பெயரைக்காணோம்.

வீசவும் மாலி தலையறுந்து மாண்டான். மாலியவானும் ஸுமாலி யும் இலங்கைக்கு[1] ஓட்டம் பிடித்தனர். கருடன் சற்று இளையாறிய தும் விஷ்ணு அநேகம் ராக்ஷஸர்களை அடித்து வதம் செய்தார்.

8—ம் ஸர்கம்.

ராக்ஷஸர்கள் இலங்கையைவிட்டு பாதாளம் போயினர்.

"மாலியவான திரும்பிவந்து,—யுத்தம் செய்ய மனமில்லாமல் ஓட்டம் பிடிப்பவர்களை அடிப்பது நியாயமில்லை; யுத்தத்தை நிறுத்த மனமில்லையாகில், நானும் சித்தமாயிருக்கிறேன்—என்று சொல்ல,— உங்களால் துன்புற்ற தேவர்களுக்கு நான் அபயமளித்ததால் எங்கு போனாலும் உங்களை விடுகிறதில்லை—என்றார் விஷ்ணு. மாலிய வான் சக்தியை எடுத்து விஷ்ணுவின் மார்பிலடித்தான். அந்த சக்தி யைக்கொண்டே விஷ்ணு மாலியவானை அடித்தார். அவன் முள் நிறைந்த இரும்பு சூலத்தையெடுத்து, விஷ்ணுவை யடித்துக்குத்தி, கருடனையும் அடிக்கையில், கருடன் தன் சிறகை வீசிப் பேய்க்காற்று கிளப்பி மாலியவானை விரட்டியதும், அவன் ஓட்டம் பிடித்து இலங்கை போய்ச்சேர்ந்தான். ஸுமாலியும் மிஞ்சிய ஸைனியத்தை அழைத்துக்கொண்டு இலங்கைக்குப் போனான். அவ்விடத்திலும் விஷ்ணுவால் அடிக்கடி ஹிம்ஸிக்கப்பட்டு ராக்ஷஸர்கள் யாவரும் பாதாளம் போய்ச் சேர்ந்து, ஸுமாலியின்[1] கட்டளைப்படி காலம் கழித்தார்கள்.

"ராமா! மாலியவான் முதலிய மூவரும் புலஸ்திய வம்சத்தவ ரான ராவணனைவிட மிகுந்த பராக்கிரமசாலிகள். இவர்களை ஸ்ரீமந் நாராயணன் தவிர யாரும் வெல்லமுடியாது. தர்மத்தை ஸ்தாபிப் பதற்காக அவதாரங்களெடுக்கும் அந்த நாராயணனே நீயாகிறாய்.

"ராக்ஷஸர்களுடைய உத்பத்தி சொல்லப்பட்டது. ராவண னுடைய பிறப்பு முதலியவற்றைச் சொல்லுகிறேன்:—

"ஸுமாலி நெடுநாளாய்ப் பாதாளத்தில் வாஸம் செய்துகொண் டிருக்கையில், குபேரன் பிறந்து புத்திர பௌத்திரர்களோடு இலங்கை யில் வஸித்து வந்தான்.

---

1. மாலியவான் யாதாயினன்? 27-ம் ஸர்கத்தில் ஸுமாலி தேவ லோகத்தில் அடிபட்டு மாண்டான் என்று—சொல்லும் வரையில் மாலிய வானைப்பற்றிய ப்ரஸ்தவமே இல்லை. மாலியவான் யாதாயினன் என்பது கவனிக்கத்தக்கது.

9—ம் ஸர்கம்.

ஸுமாலியின் பெண் கைகஸிக்கு விச்ரவஸ் மஹரிஷியினால் ராவணாதிகள் பிறந்தனர்.

"சில நாள் கழித்து, ஸுமாலி கைகஸியோடு பூமண்டலம் முழுவதும் சுற்றுகையில், புஷ்பகத்திலேறி ஸஞ்சரிக்கும் குபேரனைக் கண்டான். இலங்கையை இழந்ததாலும், தக்க பருவம் வந்தும் கைகஸிக்கு கலியாணமாகாததாலும் அவனுக்கு துக்கம்[1] மேலிட்டது; அவளுக்கு குபேரன் போல பிள்ளை பிறக்கவேண்டுமென்று அவளை விச்ரவஸ் மஹரிஷியிடம் அனுப்பினான். அப்பொழுது கொடிய மாலை நேரமாதலால் கொடிய ராக்ஷஸர்கள் பிறப்பார்களென்று ரிஷி சொல்ல, அவள் நல்ல பிள்ளைதான் வேண்டுமென்று வருந்த, கடைசி பிள்ளை மிகுந்த தர்மசீலனாயிருப்பான்—என்றார் ரிஷி. அவளுக்கு பத்துதலையுள்ள ராவணனும், கும்பகர்ணன், சூர்ப்பநகை, விபீஷணர்களும பிறந்தார்கள்.[2] விச்ரவஸ் தவம் செய்த அக்காட்டிலேயே எல்லோரும் வளர்கையில் கும்பகர்ணன் மஹரிஷிகளைக் கொன்றுதின்று ஸஞ்சரித்தான். பிதாவைப் பார்ப்பதற்காக இலங்கையிலிருந்து புஷ்பகத்திலேறி வரும் குபேரனை கைகஸி ராவணனுக்குக்[3] காண்பித்து,—தமையன்போல பாக்கியசாலியாயிருக்கப் பிரயத்தினம் செய்—என்றாள். அவன் இசைந்து தபஸ் செய்ய, மற்றைய இருவரும் தபஸ் செய்தார்கள். மூவரும தங்களுக்கிஷ்டமான வரத்தைப் பெற்றனர்."

10—ம் ஸர்கம்.

ராவணாதிகள் பிரம்மாவினிடமிருந்து வரம் பெற்றார்கள்.

---

1. *நினைத்தவாறு செய்யவல்ல ராக்ஷஸர்கள்கூட பெண்ணுக்குக் கலியாணம் செய்யும் பொறுப்பைப் பெரிதாகக் கருதுவதாய்த் தெரிகிறது.*

மூன்றாமவளான கைகஸியைப்பற்றி வருந்துவதால் அவளுக்கு முற்பட்ட ராகை புஷ்போத்கடைகளுக்கு கலியாணம் ஆயிருக்கவேண்டும். நான்காமவளான கும்பீனஸிக்கு கலியாணம் நடந்த விவரம் பின்னால் எங்கும் சொல்லப்படவில்லை.

2. *கைகஸி விசரவஸ் மஹரிஷிக்கு கலியாணம் செய்து கொடுக்கப் பட்டதாயும் விச்ரவஸ்ஸினுடைய சரீர ஸம்பந்தத்தினால் ராவணாதிகள் பிறந்ததாயும் தெரியவில்லை.*

3. *நல்லபிள்ளை பிறக்க வேண்டுமென்று மட்டும் விரும்பினாளேயன்றி தன் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு நல்லபிள்ளையை விட்டு ராவணனை நாடுகிறாள்.*

ராவணன் முதலானோர் வரம்பெற்ற விவரத்தைச் சொல்லுமாறு ராமன் வேண்டவும், அகஸ்தியர் சொல்லுகிறார்:—

"மூவரும நியமம் - விராமல் பதினாயிரம் வருஷம் தவம் செய்தார்கள். ராவணன் ஆயிரம் வருஷத்துக்கொரு தலையாய் அறுத்து ஹோமம செய்து, பத்தாவது தலையையும் அறுக்க ஆரம்பித்த போது, பிரம்மா பிரத்தியக்ஷமானார். தனக்கு மரணமில்லாதிருக்குமாறு அவன் வரம் கேட்க, மரணமில்லாத பிராணியே கிடையாதாகையால் அப்படி வரம் கொடுக்க முடியாதென்று பிரம்மா சொல்ல, அல்பர்களான மனிதர்களிடம் தனக்குபயமில்லையாகையால் மற்றவர்களால் மரணம் நேரிடக்கூடாதென்று கேட்டான். பிரம்மா அந்த வரத்தையும் கொடுத்து, அவனுடைய தலைகள் முளைக்கவும், நினைத்தவாறு உருவெடுக்கவும சக்தியைக் கொடுத்தார்.

"எந்த ஆபத்திலும் தன்மனம் தர்மத்தைத் தவிரக்கூடாதென்றும், சிக்ஷயிலலாமலே தனக்கு பிரம்மாஸ்திரம் பிரத்தியக்ஷமாக வேண்டுமென்றும் விரும்பிய விபீஷணனுக்கு சிரஞ்சீவியாயிருக்கும பாக்கியமும் அதிகமாய்க் கிடைத்தது.

"கும்பகர்ணனுக்கு வரம் கொடுக்கையில், வரம் பெறுமேல் உலகத்தை ஹிம்ஸிப்பவனை வரம் கொடாமல் வஞ்சிக்கவேண்டும் என்று தேவர்கள் பிரார்த்தித்தார்கள். கும்பகர்ணனை வஞ்சிப்பதற்காக பிரம்மாவின் கட்டளைப்படி ஸரஸ்வதி அவனுடைய நாவில் நின்றதும், அவன் பல்லாண்டு பல்லாண்டாய் நித்திரை செய்யும் வரத்தைப்பெற்றான். பிரம்மா மறைந்தார். ஸரஸ்வதி கும்பகர்ணனை விட்டகன்றாள். கும்பகர்ணன் தன் நினைவு பெற்று, தேவர்களின் தந்திரத்தினால இப்படி வரம் கிடைத்ததற்கு வருந்தினான். ஸஹோதரர்கள மூவரும் ச்லேஷ்மாதகவனம்[1] போய் வஸித்தார்கள்.

11—ம் ஸர்கம்.

குபேரன் இலங்கையைவிட்டு கைலாஸம் சென்றதும், ராக்ஷஸர்கள் ராவணனுக்கு லங்காராஜ்ய பட்டாபிஷேகம செய்து வைத்தனர்.

"ராவணாதிகள் வரம் பெற்றதால் ஸுமாலி தைரியம் கொண்டு இலங்கையைக் கைப்பற்றும்படி மிகவும் ராவணனைத் தூண்டினான்.

1. ச்லேஷ்மாதகமென்று ஒருவித மரம். அம்மரம் நிறைந்த காடு என்று பொருள்.

குபேரன் தனக்கு தமையனென்று ராவணன் சற்று இசையா திருக்க,—திதி, அதிதி—என்ற கச்யபரின் மனைவிகளுக்குப்பிறந்த தேவர்களும் அஸுரர்களும் விரோதமாகவே யிருப்பதால்; சூரர் களுக்கு ஸஹோதரபாவம் கூடாதென்று பிரஹஸ்தன் சொன்னதன் பேரில், ராவணனுடைய மனம் மாறிற்று. உடனே ராவணன் ராக்ஷஸர்களோடு திரிகூட பர்வதம்போய், குபேரனிடம் பிரஹஸ்தனை அனுப்பி இலங்கையை ஒப்பிக்கும்படி கேட்டான். இலங்கை தனக்கு பிதா கொடுத்த ஸொத்தாதலால் ராவணனும் சேர்ந்து அனுபவிக்கட்டுமென்று சொல்லி, குபேரன் பிதாவிடம் போய்த் தெரிவிக்க, ராவணன் மிகக்கொடியவனாதலால் இலங்கையை விட்டுக் கைலாஸத்தில் போய் வஸிக்குமாறு அவர் யோசனை கூறினார். குபேரன் இலங்கையைக் காலி செய்ததும், ராக்ஷஸர்கள் அங்கு குடியேறி ராவணனுக்கு முடிசூட்டினார்கள்.[1]

12—ம் ஸர்கம்.

ராவண, கும்பகர்ண, விபீஷணர்களுக்கும் சூர்பநகைக்கும் கலியாணம் நடந்தது.

"ராவணன் தன்னுடைய தங்கை சூர்பநகையை காலகேயர் களில் சேர்ந்த வித்யுஜ்ஜிஹ்வன் என்ற ராக்ஷஸனுக்கு கலியாணம் செய்து கொடுத்தான்.

"தேவர்கள் பிரியமாகக் கொடுத்த ஹேமை யென்ற அப்ஸரஸ் ஸுக்காக அழகிய பட்டணம் கட்டி அவளோடு 500 வருஷம் ஸுகித்திருந்த திதிபுத்திரனை மயனுக்கு மாயாவி, துந்துபி,— என்ற பிள்ளைகளும், மண்டோதரி யென்ற பெண்ணும் பிறந்தார்கள். தேவகாரியமாக ஹேமை தன்னைவிட்டுப் பதினாலுவருஷமாய்ப் பிரிந்திருக்கும் துயரம் தாங்காமல் மயன் ஊரைவிட்டு வெளியேறி, பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடப் பெண்ணையும் அழைத்துக் கொண்டே அலைந்துதிரிந்தான். காட்டுக்கு வேட்டையாடப்போன ராவணனும் மயனும் சந்தித்தார்கள். ஒருவரையொருவர் விசாரித்து பூர்வோத்தரங்களைத் தெரிந்துகொண்டதும் மயன் மண்டோதரியை

---

1. இலங்கை ஸுமாலியினுடையதாகையால் அவனுடைய பிள்ளை பிரஹஸ்தனுக்கு பட்டம் கட்டவேண்டியது; ராவணனுக்கு பட்டம் கட்டுவதில் பிரஹஸ்தனும் ஸம்மதித்திருந்தான். ராவணனுக்கு இத்தனை கௌரவமும் வரத்தினால் வந்தது.

ராவணனுக்கு அக்காட்டிலேயே அக்னிஸாக்ஷிகமாய்க் கலியாணம் செய்து கொடுத்து, தான் தவம் கிடந்து பெற்ற[1] சக்தியையும் கொடுத்தான். ராவணன் மண்டோதரியை அழைத்துக்கொண்டு இலங்கைக்குப்போய் கும்பகர்ணனுக்கு வைரோசனனுடைய பேத்தி வஜ்ரஜ்வாலையையும், விபீஷணனுக்கு கந்தர்வராஜனான சைலூஷனுடைய பெண் ஸரமாவையும் கலியாணம் செய்து வைத்தான். ராவணனுக்கு மண்டோதரியிடத்தில் ஓர் பிள்ளை பிறந்தது. அது மேகம் இடிப்பதுபோல அழுததால் மேகநாதன் என்று ராவணன் பெயரிட்டான். உங்களால் இந்திரஜித்து என்று சொல்லப்படுகிறவன் அந்தப் பிள்ளையே.

13—ம் ஸர்கம்.

> உலகத்தை மிகவும் ஹிம்ஸித்துக்கொண்டிருந்த ராவணனுக்கு குபேரன் ஹிதம் சொல்லியனுப்ப, ராவணன் குபேரனோடு சண்டைக்குப் புறப்பட்டான்.

"கும்பகர்ணனை நித்திரை பிடிக்க ஆரம்பித்தது. அவன் இடையூறில்லாமல் தூங்குவதற்காக தனியாய் ஓரிடம் கட்டிக் கொடுக்கப்பட்டது. அவன் அநேக ஆயிரம் வருஷமாகியும் தூங்கி யெழுந்திருக்கவில்லை. ராவணன் தேவ ரிஷி யக்ஷ கந்தர்வர்கள் முதலான யாவரையும் ஹிம்ஸித்துக்கொண்டிருந்தான். குபேரன் கைலாஸத்தில் வஸிக்கப்போனதும், அங்கு ஆச்சரியமான ரூபத்துடன் விளங்கும் பார்வதியைக் கெட்ட எண்ணமில்லாமலே சற்று இடது கண்ணால் பார்த்ததால் அவன் கண் ஒளி மங்கியது.[2] அவன் அம்மலையிலேயே ஓரிடம் போய் நூற்றெட்டு வருஷம் ருத்ர விரதத்தை அனுஷ்டித்து சிவனுடைய அனுக்ரஹத்தைப் பெற்று வெளிவருகையில், ராவணன் ஜகத்தை ஹிம்ஸிப்பதையும், அவனை வதம் செய்ய யாவரும் வழிதேடுவதையும் அறிந்து, அவனுக்கு தூதன் மூலமாய் ஹிதம் சொல்லி யனுப்பினான். தூதனுடைய உயிர் ராவணனுடைய கத்திக்கு இரையாயிற்று. ராவணன்

---

1. லக்ஷ்மணனிடம் பிரயோகிக்கப்பட்டதால் இப்பொழுது உலகத்தில் லக்ஷ்மண சக்தி யென்று சொல்லப்படுவது இதுவே.

2. குபேரனுடைய கண் மங்கியது மாறவேயில்லை. அவனுக்கு ஏகாக்ஷிபிங்களன் என்றும் பெயர் வந்ததாக இந்த ஸர்கத்தில் சொல்லப் பட்டிருக்கிறது.

குபேரனிடம் கோபம் கொண்டு அவனொருவன் பொருட்டே[1] லோக பாலர்கள் நால்வரையும் கொன்று த்ரிலோகத்தையும் ஜயிக்கத் தீர் மானித்து, முதலில் குபேரனிருக்கு மிடத்துக்கே புறப்பட்டான்.

14—ம் ஸர்கம்.

ராவணாதிகளோடு சண்டை செய்து ஏராளமான யக்ஷர்கள் மடிந்தனர்.

"மஹோதரன் பிரஹஸ்தன் முதலிய[2] ஆறு மந்திரிகளோடு புறப்பட்டு ராவணன் கைலாஸம் வந்து சேர்ந்தான். குபேரனுடைய கட்டளைப்படி ராக்ஷஸர்களோடு[3] யுத்தம் செய்து ஆயிரக்கணக் கான யக்ஷர்கள் மடிந்தனர். ஸம்யோதகண்டகன் என்ற யக்ஷன் மாரீசனோடு கொடுமையாய்ப் போர் செய்து தோல்வியுற்றோடினான். குபேரனுடைய மாளிகையில் பிரவேசித்த ராவணனை ஸூரியபானு என்ற துவாரபாலன் தூணைப்பிடுங்கி தலையிலிருந்து ரக்தம் பெருகுமாறு அடித்தான். அந்தத் தூணைக்கொண்டே ஸூரியபானு ராவணனால் அடிக்கப்பட்டு உயிர்துறக்க, யக்ஷர்கள் யாவரும் உயிருக்கு அஞ்சி குகைகளில் பதுங்கினார்கள்.

---

1. லோகபாலர் என்பது திக்பாலர்களையே குறிக்கிறது. அஷ்ட திக்பாலர்கள் என்று நாம் வியவஹரிக்கிறோம். இங்கு நாலு திக்பாலர்க ளென்று சொல்லுவதால், அக்காலத்தில் நால்வரே யென்று தெரிகிறது. யாருடைய காலத்தில் எட்டாகக் கணக்கிடப்பட்டதென்பதை கவனிக்க வேண்டும்.

2. மஹோதரன், பிரஹஸ்தன், மாரீசன், சுகன், ஸாரணன், தூம் ராக்ஷன்—இந்த ஆறுபேர்களும் ராவணமந்திரிகள் என்று இந்த ஸர்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

3. ஆறு மந்திரிகளும் ராவணனும் ஆக ஏழு பேர்கள் தான் ஆயிரக் கணக்கான யக்ஷர்களோடு போர்புரிந்து ஜயித்தது. இவர்கள் தவிர ராக்ஷஸஸைன்யம் வரவேயில்லை. இந்த ஸர்கத்தில் 7, 8வது சுலோகங்கள் ராக்ஷஸ ஸைன்யமென்று பொருள்படும் போல அமைந்திருக்கின்றன. முன் பின் நன்கு ஆராய்ச்சி செய்தால் ராக்ஷஸ ஸைனியமே வரவில்லை யென்பது நிச்சயம்.

குபேரனை மூன்றும் ஸர்கத்தில் நைருதராஜன் என்றும் இந்த ஸர்கத்தில் யக்ஷராஜன் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. குபேரன் விச்ரவஸ் மஹரிஷிக்கும் பரத்துவாஜ புத்திரியான தேவவர்ணிக்கும் பிறந்தவனாதலால் அவன் ராக்ஷஸனல்ல; யக்ஷனுமல்ல. இலங்கையில் ராக்ஷஸர்களுக்கு அதிபதியாயிருந்ததால் நைருதராஜனென்றும், கைலாஸத் தில யக்ஷர்களுக்கு அதிபதியாயிருந்ததால், யக்ஷராஜன் என்றும் சொல்லப் பட்டதாகத் தீர்மானிக்கவேண்டியது.

15—ம ஸாகம்.

ராவணன் குபேரனை வென்று புஷ்பக விமானத்தை அபஹரித்துக்கொண்டு போய்விட்டான்.

"ராக்ஷஸர்களோடு யுத்தம் செய்வதற்காக குபேரனால் மாணிபத்திரனுடன் அனுப்பப்பட்ட நாலாயிரம் யக்ஷர்களும் மடிந்தனர். மாணிபத்திரன் தூம்ராக்ஷனைத் தடியாலடித்துப் புறங்காட்டியோடச் செய்தான். சுக்ர ப்ரோஷ்டபதர்—என்ற மந்திரிகளையும், சங்கநிதி பதுமநிதிகளையும் அழைத்துக்கொண்டு யுத்தத்துக்கு வந்த குபேரன் ராவணனைப் பலவாறு நிந்தித்துப் போர்புரிகையில் பிரயோகித்த ஆக்நேயாஸ்திரம் ராவணனுடைய வாருணாஸ்திரத்தினால் வெல்லப்பட்டது. கடைசியாய் ராவணன் மாயா யுத்தம் செய்து குபேரனை வீழ்த்தினான். மந்திரிகளும், நிதிகளும் குபேரனை மூர்ச்சை தெளிவிக்க அப்பால் அழைத்துச் சென்றதும், ராவணன் புஷ்பக விமானத்தை அபஹரித்து ஜயகோஷம் செய்து கொண்டு போனான்.

16—ம் ஸர்கம்.

சிவனை அவமதித்து கைலாஸத்தை அசைத்ததால் கைகள் நசுங்கப்பெற்ற ராவணன் சிவனை ஸ்தோத்திரம் செய்து அவருடைய அனுக்ரஹத்தைப் பெற்றான்.

"ராவணன் புஷ்பகத்திலேறி ஸுப்ரம்மணியன் பிறந்த சரவணத்துக்குப் போனதும், புஷ்பகம் நகரவில்லை. அருகே கோயில் கொண்டு விளையாடும் சிவனுடைய சக்தியால் புஷ்பகம் தடைபட்டதென்றறிவித்த வானரமுக[1] நந்திகேசுவரரைக் குரங்குமுகா! என்று பரிஹஸித்ததால், நகங்களையும் பற்களையும் ஆயுதமாகக்கொண்ட குரங்குகளாலேயே ராவணகுலம் அழியும் என்று நந்தி சபித்தார்.[2] ராவணன் சிவனைத்தோற்கடிக்க நிச்சயித்து கைலாஸத்தின் கீழ் இருபது கைகளையும் வீசி மலையை அசைக்க, சிவகணங்கள் நடுங்கின; பார்வதி திகைத்து சிவனைக்கட்டிக்கொண்டாள். சிவன் கால் கட்டை விரலால் மலையை அழுத்தியதும் ராவணன் கைகளை எடுக்கமுடியாமல்

---

1. சிவாலயத்துக்கு முன்புறமுள்ள விருஷபத்துக்கு நந்தியென்று பிரஸித்தியிருந்தாலும், சிவனுடைய துவாரபாலகருக்கே நந்தியென்று பெயர். அவருக்கு வானரமுகமல்ல. ஆயினும் ராவணன் அப்படி பரிஹஸித்தான்.

2. ராவணனுக்கு இதுதான் முதல் சாபம். ஸுந்தரகாண்டம் 50—ம் ஸர்கம், 2—ம் சுலோகத்தில் ஹனுமானைப் பார்த்து ராவணன் இந்த சாபத்தை நினைப்பது காண்க.

ஆயிரம் வருஷம் கதறினன். மந்திரிகளுடைய யோசனையின்பேரில் ராவணன் ஸாமஸ்துதிகளால்[1] சிவனை ஸ்தோத்திரம் செய்யவும், அவர் மகிழ்ந்து, உலகம் நடுங்கும்படி கதறியதால் அவனுக்கு ராவணன் என்று பெயரிட்டார்.[2] இதுவரையில் கழிந்த ஆயுஸ்ஸையும் சந்திரஹாஸம் என்ற சிவனுடைய கத்தியையும் அவருடைய அனுக்ரஹத்தால் பெற்று, ராவணன் புஷ்பகமேறிச் சென்றான்.

17—ம் ஸர்கம்.

ராவணன் வேதவதியின் கற்பையழிக்கத் தொடங்கி அவளால் சபிக்கப்பட்டான்.

"பிருஹஸ்பதி புத்திரரான குசத்துவஜரிஷி வேதாப்பியாஸம் செய்கையில் தனக்குப்பிறந்த வேதரூபியான வேதவதியை விஷ்ணுவுக்குக் கலியாணம் செய்துகொடுக்க விரும்பினார். அவளை மனைவியாகக்கருதிய தம்பு என்னும் அஸுரன் குசத்துவஜரைக் கொன்றதால் அவருடைய மனைவி உயிர்துறந்தாள். பிதா விரும்பியவாறே விஷ்ணுவை மணந்துகொள்ள இமயமலைச் சிகரத்தில் தவம் செய்துகொண்டிருந்த வேதவதியை ராவணன் காமுற்று கூந்தலைப்பற்றி இழுத்தான். அவனைக்கொல்லுவதற்கு மறு ஜன்மமெடுப்பதாய் சபதம் கூறி,[3] அவள் தாமரையிலோர் சிறுமியாய்த் தோன்றினாள். அவளை ராவணன் இலங்கைக்குக் கொண்டுபோனதும், அவளால் ஆபத்து விளையுமெனக் கண்டு மந்திரிகள் அவளை ஸமுத்திரத்தில் விட்டனர். ராமா! கிருதயுகத்தில்[4] வேதவதியாய், திரேதாயுகத்தில் ஜனகனுடைய யாகவேதியில் ஸீதையாய் ஆவிர்பவித்து[5] ராவணவிதத்துக்கு முக்கிய நிமித்தமாயிருந்த உன் பத்தினி உன்னுடைய மற்றைய அவதாரத்திலும் ஆவிர்பவிப்பாள்.

---

1. ஸாமவேத ஸ்துதியா, அல்லது சாந்தியை உண்டுபண்ணும் ஸ்துதியா என்று மூலத்தில் விளங்கவில்லை. ஸாமவேதத்தினல் ஸ்தோத்திரம் செய்ததாக கர்ண பரம்பரை.

2. தசகண்டன் தசக்ரீவன் என்பதெல்லாம் பிதாவான விச்ரவஸ்ஸினல் வைக்கப்பட்டன. கதறியதால் ஏற்பட்டது ராவணன் என்றபெயர். இந்தப்பெயரே அவனுக்குப் பிரஸித்தமாம்படி சிவன் அனுக்ரஹித்தார்.

3. இது ராவணனுக்கு நேர்ந்த இரண்டாம் சாபம்.

4. இதனல் ராவணன் கிருதயுகத்தில்பிறந்தவனென்று தெரிகிறது.

5. வைசாக சுக்ல நவமியில் ஸீதை ஆவிர்பவித்தாள் என்று மஹாஸுந்தரீ தந்தரத்திலுள்ள சுலோகங்களை எடுத்துக் காட்டுகிறது திலக வியாக்கியானம்.

18—ம் ஸர்கம்.

யாகத்தினிடையே சண்டைக்கு வரமுடியாதிருந்த மருத்தனை ஜயித்ததாக ராவணன் உத்கோஷித்துக் கொண்டு போனான்.

"உசிர பீஜதேசத்தில் மருத்தன்[1] என்ற ராஜன் மாஹேச்வர யாகம் செய்து கொண்டிருக்கையில் ராவணன் அவனை யுத்தத்துக்கு அழைத்தான். யாகதேவதைகளான இந்திரன், யமன், வருணன், குபேரன்—நால்வரும் ராவணனுக்கு பயந்து, மயில், காகம், ஓணான், ஹம்ஸம்—இவைகளில் மறைந்துகொண்டு யாகத்தைக் காத்தனர். மருத்தன் மிகுந்த கோபத்தோடு வில்லை யெடுத்துக் கிளம்பியதும், யாகத்தினிடையே யுத்தம் கூடாதென்று புரோஹிதரான ஸம்வர்த்தகர் (பிருஹஸ்பதியின் ஸஹோதரர்) தடுத்தார். ராவணன் மருத்தனை ஜயித்ததாக உத்கோஷித்துக்கொண்டு சென்றான்.

"இந்திரன் தனக்கு இடம் கொடுத்த மயிலுக்கு பாம்பினால் பயமில்லாதிருக்கவும், கருப்பாயிருந்த அதன் தோகையில் விசித்திரமான தன்னுடைய கண்கள் உண்டாகவும் வரம் கொடுத்தான்.

"காக்கைக்கு வியாதியும், அடித்துக் கொன்றாலன்றி மரணமும் கிடையாதென்றும், அதற்கு அன்னமிட்டால் தன் ராஜ்யத்தில் பசியோடிருக்கும் பிதுருக்கள் திருப்தியடைவார்களென்றும் யமனால் வரம் கொடுக்கப்பட்டது.

"கருப்பாயிருந்த ஹம்ஸம் சுத்த வெண்ணிறமாயிருக்குமாறு வருணன் வரம் கொடுத்தான்.

"ஓணானுக்கு உடல் முழுவதும் பொன்னிறமாம்படி குபேரனால் வரம் கிடைத்தது.[2]

19—ம் ஸர்கம்.

ராவணன் அரண்யனைக்கொன்று அவனால் சபிக்கப்பட்டான்.

"ராவணன் பூமண்டலத்தரசர் யாவரையும்—சண்டைக்கு வரவேண்டும், தோல்வியடைந்ததாகவாவது ஒப்புக்கொள்ளவேண்டும் என்று ஹிம்ஸித்தான். மிகுந்த பராக்கிரமசாலிகளான துஷ்யந்தன்,

---

1. இவன் எந்த வம்சத்து ராஜன் என்று தெரியவில்லை. தேடிப் பார்க்கவேண்டும்.

2. இந்த வரங்களைப்பற்றி புராணாந்தரங்களிலும் கவனிக்க வேண்டும்.

ஸ்வாரதன், காதி, கயன், புரூரவன்[1] — இவ்வைவரும் வரம்பெற்ற ராவணனோடு போர்புரிந்து பயனில்லையென்று நிச்சயித்து, தோல்வி யடைந்ததாகவே ஒப்புக்கொண்டனர். அயோத்தியை ஆண்டு கொண்டிருந்த இக்ஷ்வாகு வம்சத்தவனான அநரண்யன்[2] மட்டும் ராவணனோடு கடுமையாய்ப் போர்புரிந்து மாண்டான். ராவணன் இக்ஷ்வாகு வம்சத்தை அவமதித்துப் பேசியது பொறுக்காமல் தன் வம்சத்தில் தசரதபுத்திரனாய்ப் பிறக்கும் ராமனால் ராவணனுக்கு வதம் நேரிடுமென்று சபித்து[3] ஸ்வர்கம் சேர்ந்தான் அநரண்யன்.

20—ம் ஸர்கம்.

யமனை ஜயித்து வருமாறு நாரதர் ராவணனை யனுப்பினார்.

"ராவணன் புஷ்பகத்திலமர்ந்து ஸஞ்சரிக்கையில் மேகத்தின் மீதேறிப் போய்க்கொண்டிருந்த நாரதரைக்கண்டு வணங்கினான். நாரதர் அவனை நிறுத்தி, அவனுடைய வீரச்செயலை மெச்சி,— பிணி, பசி, மூப்பு—முதலியவற்றால் வருந்திக்கொண்டும், ஓரிடத்தில் கொந்தளிப்பாயும், மற்றோரிடத்தில் அழுகையாயும் உழல்கிற மனுஷ்யலோகத்தை தேவர்களாலும் ஜயிக்கவொண்ணாத நீ பிடித்து என்ன பயன்? மானிடர்க்கு மரணத்தை விளக்கும் யமனையன்றோ நீ வெல்லவேண்டும்—என்றார்.

"சண்டை பார்ப்பதில் பிரியமுள்ளவரே! யமனை ஜயிப்பதற் காகவே புறப்பட்டிருக்கிறேன்—என்று சொல்லித் தெற்குமுகமாய் போனான் ராவணன். அவன் யமனோடு எப்படி போர்புரிகிறான்— என்று பார்ப்பதற்காக நாரதரும் அங்கு போய்ச் சேர்ந்தார்.

21—ம் ஸர்கம்.

யமபுரத்தில் யமதூதர்களுக்கும் ராவணனுக்கும் யுத்தம் நடந்தது.

---

1. இந்த அரசர்கள் ஒரே காலத்தில் இருந்தவர்களல்ல. ராவணன் நெடுநாள் உயிரோடிருந்ததால் அநேகம் அரசர்களை வென்றான். துஷ்யந் தன் புரூரவன்-என்பது சகுந்தலையின் பர்த்தாவையும் புதனுடைய பிள்ளை யையும் குறிப்பதாய்த் தெரியவில்லை.

2. அநரண்யன் ஸூரிய வம்சத்தில் பாணனுக்குப் பிள்ளை என்றும், பிருதுவுக்குத் தகப்பன் என்றும் பாலகாண்டம் 70ம் ஸர்கம், 21ம் சுலோகம்.

3. இது ராவணனுக்கு நேர்ந்த மூன்றும் சாபம்.

"நாரதர் அதிவேகமாய் யமனிடம் போய் ராவணன் யுத்தத்துக்கு வந்துகொண்டிருப்பதைத் தெரிவிக்கையில் அவன் புஷ்பகத்திலேறி வந்துவிட்டான். அங்கு அநேகம் ஜீவன்கள் தங்களுடைய பாப புண்ணியங்களுக்கேற்ற பலன்களை அனுபவித்துக் கொண்டிருந்தன. கோரமான நரகத்தில் மிகவும் தவித்துக்கொண்டிருந்தவர்களை ராவணன் தன்னுடைய பராக்கிரமத்தினால் விடுவித்தான். பிரேதங்களுக்குக் காவலாயிருந்த யமதூதர்கள் பலவித ஆயுதங்களைக் கொண்டு எதிர்த்து புஷ்பகத்தை அடித்தனர். ஆயினும் அது பிரம்ம தேஜஸ்ஸினால் சிறிதுகூட பின்னமாகவில்லை. யமதூதர்கள் ராவண மந்திரிகளோடு கடுமையாய்ப் போர்புரிந்து அவர்களை அப்புறப் படுத்தி ராவணனை வளைத்துக்கொண்டு பலவாறாய் ஹிம்ஸிக்கையில், அவன் புஷ்பகத்தை விட்டிறங்கி வந்து பாசுபதாஸ்திரத்தைப் பிரயோகித்து யமபடர்களைச் சிதறடித்தான்.

22—ம் ஸர்கம்.

யமன் யுத்தத்துக்கு வந்து ராவணனைக் கொல்லக் காலதண்டத்தை யெடுக்கையில், பிரம்மா தம்முடைய வரம் பொய்யாகாமலிருக்குமாறு யமனைத் தடுத்துவிட்டார்.

"தன்னுடைய ஸைனியம் சிதறுண்டது கண்ட யமன் ரதத்திலேறிக்கொண்டு ராவணனை எதிர்த்துவந்தான். ராவண மந்திரிகள் யமனைக்கண்டு பயந்தோடினர். ராவணன் சிறிதும் அஞ்சாமலே எதிர்த்து நின்று யுத்தம் செய்தான். யமனுக்கும் ராவணனுக்கும் ஏழுநாள் கடுமையாக யுத்தம் நடந்தது. மிருத்யு[1] யமனிடம் வந்து ராவணனைக் கொல்ல அனுமதி கொடுக்குமாறு கேட்க, யமன் தானே கொல்லுவதாய்ச் சொல்லி காலதண்டத்தை யெடுத்தான். உடனே பிரம்மா பிரத்தியக்ஷமாகி ராவணனுக்கு தான் கொடுத்த வரம் பொய்யாகக் கூடாதாகையால், அவனைக் கொல்ல வேண்டாமென்று தடுத்தார். யமன் பின்வாங்க மனமின்றியே காலதண்டத்தைத் திருப்பிவிட்டு மறைந்தான். ராவணன் ஜய கோஷம் செய்து கொண்டு புறப்பட்டதும் நாரதர் தேவலோகம் போய்ச் சேர்ந்தார்.

23—ம் ஸர்கம்.

ராவணன் பாதாளம் போய்,—நாக, நிவாதகவச, காலகேயர்களையும் ஜயித்து இலங்கைக்குத் திரும்பினான்.

---

1. மிருத்யு, காலன், யமன்—என்று தனித்தனி அதிகாரிகள்.

"ராவணன் மந்திரிகளோடு புஷ்பகத்திலேறிப் பாதாளம் போவதற்காக ஸமுத்திரத்தில் பிரவேசித்தான். நாகலோகத்தில வாஸுகியினால் ரக்ஷிக்கப்படும் போகவதீ பட்டணம் போய் நாக புருஷர்களை வென்று நிவாதகவசர்களிடம் போன ராவணனுக்கும் அந்த ராக்ஷஸர்களுக்கும் ஒரு வருஷம் கடும்போர் நடந்தது. ஒரு வரை யொருவர் ஜயிக்கமுடியவில்லை. பிரம்மா வந்து இருவருக்கும் ஸமாதானம் செய்து வைத்தார். ராவணன் நிவாதகவசர்களோடு ஸ்நேஹமாயிருந்து நூறுவிதமான மாயாவித்தைகளைகற்று அச்ம நகரம்போய் காலகேயர்களை வதைக்கையில, தன் தங்கை சூர்பணகை யின் பர்த்தாவான வித்யுஜ்ஜிஹ்வனையும் கொன்று வருணலோகம் போனான்

"அங்கு ருத்ரவிருஷபத்துக்கு மாதாவாயும் தன்னுடைய பாலி னால் க்ஷீராப்தியை நிரப்பிக் கொண்டிருப்பதுமான ஸுரபி[1] இருந்தது. ராவணன் அதைப் பிரதக்ஷிணம் செய்து போய் வருண னுக்குத்தன் வரவை அறிவித்தான். வருணனுடைய புத்திரர்களும் பேரன்களும் புஷ்பகத்திலிருந்த ராவணனோடு நெடுநேரம் போர் புரிந்து, பிறகு தேரிலேறி யுத்தம் செய்து ராவணனைக களைக்கச் செய்தனர். மஹோதரன் எதிர்த்து வந்து ரதங்களை முறித்து வருணபுத்திரர் முதலானோரைக் கீழே தள்ள, ராவணனும் வந்து யுத்தம் செய்து அவர்களை வென்றான். ராவணன் வருணனை யுத்தத் துக்கு அழைக்கையில பிரஹஸன் என்ற வருண மந்திரியின் மூலமாய் வருணன் பாட்டுக் கேட்க பிரம்மலோகம் போனதாய்த் தெரிந்தது. ராவணன் முதலானோர் வருணனை வென்றதாய் ஜயகோஷம் செய்து கொண்டு வந்த வழியாய் இலங்கை போய்ச் சேர்ந்தனர்.

[அதிக ஸர்கம்—1*

ராவணன் மஹாபலியிடம் சண்டைக்குப் போய்த் திரும்பி வந்தான்.

"வருண லோகத்திலிருந்து திரும்பிய ராவணன் மறுபடியும் அச்ம நகரத்தில் பிரவேசித்தான். அங்கு ரத்தின மயமான மாளிகையிருந்தது. அது யாருடையதென்றறிந்து வருமாறு அனுப்பப்பட்ட பிரஹஸ்தன்

---

1. விசுவாமித்திரருடைய தபஸ்ஸுக்குக் காரணமாய் வஸிஷ்டரிட மிருந்த காமதேனு இந்த ஸுரபியா, அல்லது வேறா என்று தெரியவில்லை.

*அதிக ஸர்க்கங்களைப்பற்றிய ஆராய்ச்சி கடைசியில் எழுதப்பட்டிருக் கிறது.

மிக்க காந்தியோடு துவாரத்திலிருந்த புருஷனைக்கண்டு நடுங்கி ஓடிவர, ராவணனே போய், சிறிது அச்சமுற்று, பிறகு தைரியம் கொண்டு, தான் யுத்தத்துக்கு வந்ததாயறிவித்து, அம்மாளிகையின் யஜமானன் யாரென்று கேட்டான். யஜமானன் மஹாபலி—என்று சொல்லி ராவணனை உள்ளே விட்டான் துவாரத்திலிருந்த புருஷன். மஹாபலி ராவணனைப் பார்த்து பரிஹஸித்து, தன் மடியிலெடுத்துப் போட்டு, வந்த காரியத்தை வினவ,—உன்னைக்கட்டிய விஷ்ணுவை வென்று உன்னை விடுவிக்க வந்தேன்—என்றான் ராவணன். மஹாபலி விஷ்ணுவின் பராக்கிரமத்தைப் பலவாறாய் எடுத்துரைத்தும் ராவணனுடைய கர்வம் அடங்கிற்றில்லை வாசலில் காத்திருக்கும் புருஷனே விஷ்ணுவென்று மஹாபலி மூலமாய்த் தெரிந்து கொண்டு ராவணன் சண்டைக்கு சித்தமானான். அவனோடு யுத்தம் செய்ய அது ஸமயமல்லவென்று விஷ்ணு மறைந்தார்.

அதிக ஸர்கம் 2.

ராவணன் ஸூரியனை ஜயிக்கப் போனான்.

"ராவணன் ஸூரியலோகம் போய், தன்னோடு யுத்தத்துக்கு வர வேண்டும்; அல்லது, தோல்வியடைந்ததாக ஒப்புக் கொள்ளவேண்டும்—என்று ஸூரியனுக்கு துவாரபாலர்களான பிங்களன், தண்டி—என்பவர் மூலமாய்ச் சொல்லியனுப்ப,—எனக்கு சண்டையிட அவகாசமே கிடையாது. நீங்கள் போய் சண்டை செய்து ஜயியுங்கள்; அல்லது, தோற்றதாக ஒப்புக்கொள்ளுங்கள்; அல்லது, என்னை ஜயித்ததாகவே சொல்லிக்கொண்டு போகும்படி ராவணனுக்குச் சொல்லுங்கள்—என்றான் ஸூரியன். ராவணன் ஜயகோஷம் செய்து கொண்டு போனான்.

அதிக ஸர்கம்—3.

ராவணனும் மாந்தாதாவும் நெடுநேரம் போர் புரிகையில் புலஸ்தியரும் காலவரும் ஸமாதானம் செய்து வைத்தார்கள்.

"ராவணன் சந்திரலோகம் போகையில் பர்வத மஹரிஷியைச் சந்தித்தான். மேலே விமானத்திலேறி அநேகம் அப்ஸரஸ்ஸுகளுடன் ஸஞ்சரிப்பவரோடு சண்டையிட விரும்பி அவர்கள் யாரென்று வினவ, அவர்கள் மோக்ஷத்துக்குப் போகிறவர்களாகையால் சண்டைக்குத் தக்கவர்களல்ல—என்றார் ரிஷி. தன்னுடைய தினவடங்கும்படி போர்புரியும் பராக்கிரமசாலி யாரென்று ராவணன் வற்புறுத்த,—பர்வத மஹரிஷி மாந்தாதாவைக் காட்டினார். அப்போது மாந்தாதா ஸப்த த்வீபங்களையும் ஜயித்து தேரிலேறித் திரும்பி வந்து கொண்டிருந்தான். ராவணனுக்கும் மாந்தாதாவுக்கும் நெடுநேரம் யுத்தம் நடந்தது. ஒருவரையொருவர் வெல்லமுடியவில்லை. ராவணன் பிரம்மாஸ்திரத்தையும்

மாந்தாதா பாசுபதாஸ்திரத்தையும் எடுத்து யுத்தம் செய்கையில் புலஸ்தியரும் காலவரும் வந்து ஸமாதானம் செய்து வைத்தார்கள்.

அதிக ஸர்கம்—4.

சந்திரனை அழிக்கப்போன ராவணனை பிரம்மா தடுத்தார்.

"ராவணன் புஷ்பகமேறி ஸப்தமருத்துக்களின் ஸ்தானத்தையும் தாண்டி சந்திரமண்டலத்தைக் கிட்டினான். அங்கு குளிர் தாங்காமல், விரைவில் கீழே போகவேண்டுமென்று பிரஹஸ்தன் வற்புறுத்த, கோபம் கொண்டு வில்லை வளைத்து சந்திரனை அழிக்கக் கிளம்பினான் ராவணன். பிரம்மா வந்து உலகத்துக்கு ஹிதம் செய்யும் சந்திரனை அழிக்கக்கூடாதென்று ராவணனை ஸமாதானப் படுத்தினார். ராவணன் தனக்கு பயமேயில்லாதிருக்குமாறு மந்திரோபதேசம் செய்யும்படி வேண்டினான். பிரம்மா சிவ அஷ்டோத்தர சத நாமத்தை உபதேசம் செய்தார்.

அதிக ஸர்கம்—5.

ராவணன் கபிலரூபியாய்ப் பாதாளத்திலிருக்கும் விஷ்ணுவை எதிர்த்து அவர் கையினால் தனக்கு மரணத்தை விரும்பினான்.

"ராவணன் மந்திரிகளோடு மேற்கு ஸமுத்திரம் போய் மஹா புருஷனொருவனோடு சண்டையிட்டுக் கீழே வீழ்ந்தான்; சிறிதுநேரம் கழித்து எழுந்ததும மஹா புருஷன் தென்படவில்லை அவன் பாதாளத்தில் பிரவேசித்ததாக மந்திரிகளால் அறிந்து கொண்டு, ராவணன் அங்குபோய் ஓரேவிதமான ரூபமும் பருவமும் வாய்ந்த மூன்று கோடி மஹா புருஷர்களைப் பார்த்து நடு நடுங்கி, சற்று தைரியத்தோடு அப்பால் செல்ல, ஓர் தீவில் ஆதிசேஷன் மீது கண்வளரும் கபிலரூபியான ஸ்ரீமந்நாராயணன் தென்பட்டார். அவர் பக்கலில் வீற்றிருந்த லக்ஷ்மியைக்காமுற்று கைப்பற்ற நினைத்த ராவணன் விஷ்ணுவின் மூச்சுப்பட்டு வீழ்ந்தான்; பிரம்மா கொடுத்த வரத்தை கௌரவிப்பதற்காக விஷ்ணு ராவணனை அச்சமயம் கொல்லாதிருந்தார். அவருடைய சரீரத்தில் சராசரமான ஜகம் முழுவதையும் கண்டு அவர்கையினாலேயே தனக்கு மரணம் நேரிடுமாறு ராவணன் வேண்டிக் கொண்டான்.]

24—ம் ஸர்கம்.

ஸ்திரீ மூலமாய் மரணமுண்டாகும்படி ராவணனுக்கு சாபம் நேரிட்டது. ராவணன் தன்னால் விதவையாக்கப்பட்ட சூர்பநகையைப் பதினாலாயிரம் ராக்ஷஸர்களோடு தண்டகாரணியத்தில் மனம்போல ஸஞ்சரிக்க வைத்து சாந்தப்படுத்தினான்.

“ராவணன் இலங்கைக்குத் திரும்பும்போது வழியில் தென்பட்ட அழகான கன்னிகைகளையும் மாதர்களையும் கவர்ந்து புஷ்பகத்திலேற்றிக்கொண்டான். அவர்களுடைய கண்ணீரினால் புஷ்பகம் நிரம்பி, துக்காக்னியினாலே அக்னிகுண்டம் போலக் கொதித்தது. ஸ்திரீகளைத் துன்புறுத்தியதால் ஸ்திரீமூலமாயே ராவணனுக்கு வதம் நேரிடுமென்று புஷ்பகத்திலிருந்தோர் யாவரும் சபித்தனர். இந்த சாபத்தைக் கேட்டுக் கொண்டே ராவணன் இலங்கையில் பிரவேசித்தான். தன்னுடைய புருஷனான வித்யுஜ்ஜிஹ்வனை வதம் செய்து தன்னை ராவணன் விதவையாக்கியதற்காக சூர்பநகை கதறிக்கொண்டு ஓடிவந்து ராவணன் காலில் அடித்து விழுந்தாள். சண்டையில் சத்துருவென்றும் பந்துவென்றும் தெரியாமல் தங்கையின் புருஷனைத்தானே கொன்றதற்காக ராவணன் மிகவும் வருந்தி, ஸஹோதர முறையிலுள்ள கரனைப்[1] பதினாலாயிரம் ராக்ஷஸர்களுக்கு அதிபதியாக்கி, தூஷணனை[2] ஸேனாபதியாக்கி, இவர்கள் யாவரும் சூர்பநகையின் கட்டளையில் தண்டகாரணியத்தி லிருந்துகொண்டு அவளுக்கு ஸந்தோஷத்தை விளைக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்து அவளை ஸமாதானப்படுத்தினான்.

25—ம் ஸர்கம்.

ராவணன் இந்திரஜித்தின் யாகத்தைத் தடுத்து, கும்பீனஸியைக் கவர்ந்து சென்ற மதுவைக் கொன்று தேவலோகத்தையும் ஜயிப்பதற்காக சேனையைத் திரட்டிக்கொண்டு மதுபுரம் போனான்.

“இலங்கைக்கு மேற்கிலுள்ள நிகும்பிலை[3] யென்னும் தோட்டத்தில் இந்திரஜித்து பல யாகங்களைச் செய்துகொண்டிருந்தான்;

---

1. ராவணனுடைய தாயாரான கைகஸிக்கு ராகா, புஷ்போத்கடை கும்பீனஸி என்ற மூன்று ஸஹோதரிகளில் கரன் இன்னாருடைய பிள்ளை யென்று தெரியவில்லை.

2. தூஷணன் ஸேனாபதியென்று மட்டும் இந்த ஸர்கத்திலும் ஆரணியகாண்டத்திலும் தெரிகிறது. ஸுபாஹு மாரீசர்கள் போல கர தூஷணர்கள் ஸஹோதரர்களென்று தெரிவில்லை

3. யு. கா. 82-ம் ஸர், 25; 84-ம் ஸர், 13; 86-ம் ஸர், 29—இந்த சுலோகங்களில் சைத்ய பதத்தோடு நிகும்பிலா பதம் காணப்படுகிறது. நிகும்பிலையென்ற தேவதையின் ஆலயமென்று கோ. தி. வியாக்கியானங்கள். வால்மீகியே வாய்விட்டு தோட்டம் என்று சொல்லுவதால் அது தோட்டமென்பதில் சந்தேஹமில்லை. அந்தத் தோட்டத்துக்கு நிகும்பிலை யென்பது ஏதோ காரணப் பெயராய் வந்ததாகும்.

மாஹேச்வர யாகத்தை ஆரம்பித்தவுடன், எங்கும் தடையின்றிச் செல்லும் ரதத்தையும், சத்ருவுக்கு அவனிருப்பது தெரியாத மாயையையும், குன்றாத அம்புறாத்தூணியையும், சிறந்த பாணங்களையும் கொடுத்தார் பரமசிவன். ராவணன் அங்கு வந்து,—இக்காரியமெல்லாம் எதற்—கென்று கேட்க, சுக்ராசாரியார் யாகங்களின் பெருமையை எடுத்துரைத்தார். சத்ருக்களான இந்திரன முதலானோரைப் பூஜிக்கும் யாகம் தகுதியல்லவென்று ராவணன் தடுத்து விட்டான்.

"ராவணன் அபஹரித்து வந்த ஸ்திரீகளின்[1] பரிதாபம் காணப் பொறாத விபீஷணன் ராவணனை நிந்தித்து,—ராவணனுடைய பாபத்தின் பயனாகவே, பெரிய பாட்டனாராம் மாலியவானுடைய பெண் அநலைக்குப் பிறந்த கும்பீனஸி[2] யென்ற கலியாணமாகாச் சிறுமியை மது[3] அபஹரித்துக் கொண்டுபோன செய்தியை அறிவித்தான். ராவணன் மதுவை வதம் செய்து தேவலோகத்தையும் ஜயித்துவர விரும்பி, கும்பகர்ணன்,[4] இந்திரஜித்து—முதலிய வீரர்களையும் ஸேனையையும் திட்டப்படுத்த,—யாவரும் மதுபுரம் போய்ச் சேர்ந்தார்கள். விபீஷணன் ராவணனுக்கு உதவியாய்ப் போகாமல் இலங்கையிலேயே தர்மங்களைச் செய்து கொண்டிருந்தான்.

"கும்பீனஸி தான் நேசித்த மதுவைக் கொல்லக்கூடாதென்று ராவணனைப் பிரார்த்தித்து சாந்தப்படுத்தினாள். ராவணன் மதுபுரத்தில் ஓரிரவு தங்கி தேவலோகத்தை ஜயிப்பதற்காக மதுவையும் அழைத்துக்கொண்டு தேவலோகத்துக்குப் பிரயாணமாயினன்.

---

1. ராவணன் நாகலோகத்திலிருந்து தக்ஷகனுடைய மனைவியைக் கூட அபஹரித்து வந்ததாக ஆ. கா. 32-ம் ஸர்கம் 14-ம் சுலோகம்.

2. ஸுமாலியின் 4-வது பெண் கும்பீனஸி வேறு, இந்த கும்பீனஸி மாலியவானுடைய பேத்தி.

3. மதுவைப்பற்றிய விவரம் இதே உத்தரகாண்டம் 61-ம் ஸர்கத்தில் சொல்லப்படுகிறது.

4. அநேக ஆயிரம் வருஷம் தூங்கினன் என்று உ. கா. 13-ம் ஸர்கத்தில் சொல்லப்பட்ட கும்பகர்ணன் எப்பொழுது எழுந்தான்—என்று புலப்படவில்லை. பிரம்மா கும்பகர்ணனைப் பிணம்போலத் தூங்கு என்று சபித்து, ஆறு மாஸம் தூங்கி ஒரு நாள் விழித்திரு—என்று மாற்றியதைச் சொலலும் யு. கா. 61-ம் ஸர்கத்தாலும், அவனை எழுப்பிய விவரத்தைச் சொல்லும் யு. கா. 60-ம் ஸர்கத்தாலும் சில தீர்மானம் கிடைக்கும். தீர்மானித்து எழுத இந்த ஸங்கிரஹத்தில் இடமில்லாததால் அங்கு கண்டு கொள்வது.

26—ம் ஸர்கம்.

நளகூபரனிடம் போய்க்கொண்டிருந்த ரம்பையை பலாத்காரமாய் அனுபவித்து ராவணன் நளகூபரனால் சபிக்கப்பட்டான்.

"ராத்ரி ராவணன் கைலாஸத்தில் தங்கியிருக்கையில், அருகே பாயும் கங்காநதியும், நறுமணம் கமழும் பல பூஞ்சோலைகளும். அருகே குபேரன் மாளிகையில் அப்ஸரஸ் ஸ்திரீகளின் பாடலும், இனிதாய் வீசி மயங்கச்செய்யும் மந்தமாருதமும், அப்போதுதித்த சந்திரனும் அவனுக்கு மன்மத விகாரத்தை யுண்டுபண்ணலாயின. ராவணன் காமவிடாய் தாங்காமல் பலகாலும் பெருமூச்செறிந்து சந்திரனைப் பார்த்தவண்ணமாயிருந்தான். அப்பொழுது ரம்பை மனோஹரமாய் அலங்கரித்துக்கொண்டு அவ்வழியே போய்க்கொண்டிருந்தாள். ராவணன் அவள் கையைப்பிடித்து வற்புறுத்தினான். உமக்கு பிள்ளை முறையாகும் நளகூபரனிடம் போய்க்கொண்டிருக்கிறேன். நீர் எனக்கு மாமனார் முறையாவதால் என்னைக் காக்க வேண்டும்—என்று சொன்னாள் ரம்பை. அப்ஸரஸ்ஸுகளுக்கு பர்த்தாவே கிடையாது. நானும் ஏக பத்தினி விரதம் கொண்டவனல்ல—என்று சொல்லி ராவணன் மத்தகஜம் நதியில் வீழ்ந்து மிதிப்பதுபோல அவளை வலிய அனுபவித்து அலங்கோலப் படுத்தினான். அவள் கதறிக்கொண்டு நளகூபரனிடம் போய்த் தெரிவித்தாள். அவன் மிகவும் சினந்து, இனி விருப்பமில்லாப் பெண்ணை வலிய அனுபவித்தால் தலை ஏழாய் வெடிக்கக்கடவது என்று ராவணனை சபித்தான்.

27—ம் ஸர்கம்.

தேவர்களுடைய யுத்தத்தில் ஸுமாலி மாண்டான்.

"ராவணன் தேவர்களை ஜயிப்பதற்காக ஸைனியத்தை அழைத்துக்கொண்டு தேவலோகம் போய்ச் சேர்ந்ததும் தேவேந்திரனுக்கு நடுக்கமுண்டாயிற்று. யுத்தத்துக்கு சித்தமாம்படி ஸகல விதமான தேவர்களுக்கும் கட்டளையிட்டு இந்திரன் விஷ்ணுவிடம் ஓடிப்போய் முன்பு பலகாலும் ராக்ஷஸர்களோடு யுத்தத்தில் தனக்கு மறைவாயிருந்து உதவி செய்ததுபோல இப்பொழுதும் செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க,—இப்பொழுது அப்படி செய்யமுடியாது; தக்க ஸமயத்தில் நானே ராவணனைக் கொல்லுகிறேன்—என்று விஷ்ணு அபயமளித்தார். இந்திரன் திரும்பி வந்ததும்

யுத்தம் ஆரம்பமாயிற்று. ஸுமாலி ராக்ஷஸ ஸைனியத்தை நடத்தி தேவர்களை அடித்து ஹிம்ஸிக்கையில், அஷ்ட வஸுக்களில் எட்டாமவனான ஸாவித்திரன் ஓடி வந்து ஸுமாலியோடு கடுமையாய் யுத்தம் செய்து அவனைத் தடியாலடித்துக் கொன்றான்.[1]

28—ம் ஸர்கம்.

இந்திரஜித்துக்கும் ஜயந்தனுக்கும்,—ராவணனுக்கும் இந்திரனுக்கும் யுத்தம் நடந்தது.

"ஸுமாலி வதம் செய்யப்பட்ட பிறகு, இந்திரஜித்து யுத்தத்துக்கு வந்து தேவர்களை மிகவும் துன்புறுத்துகையில், தேவர்கள் அவனை எதிர்த்து யுத்தம் செய்யமாட்டாமல் ஓடத்தலைப்பட்டது கண்ட இந்திரன் தன்னுடைய பிள்ளை ஜயந்தனை அனுப்பினான். தேவர்கள் சற்று தைரியம் கொண்டு யுத்தம் செய்தனர். ஆயினும், இந்திரஜித்தினால் தேவஸைனியம் அடிபட்டு சிதறுண்டது. இந்திராணியின் பிதாவான புலோமன் ஜயந்தனுடைய உயிருக்கு ஆபத்து வந்துவிடுமென்று பயந்து அவனை அழைத்துக்கொண்டு ஸமுத்திரத்தில் பிரவேசித்து விட்டான். இம்மாதிரியான ஆபத்துகளைக் கண்டு இந்திரன் ரதத்திலேறி யுத்தத்துக்குக் கிளம்பியதும், ராவணனும் தேரிலேறிப் புறப்பட்டு, இந்திரஜித்தைச் சற்று அப்பாலிருக்கச் சொல்லி, ரணகளத்துக்கு வந்தான். ஓர்புறத்தில் கும்பகர்ணனுக்கும் ஏகாதச ருத்திரர்களுக்கும் யுத்தம் நடந்து கொண்டிருந்தது. மருத்கணங்கள் யுத்தம் செய்து ஏராளமான ராக்ஷஸர்களைக் கொன்றார்கள். இதுகண்ட ராவணன் மிகுந்த கோபத்தோடு இந்திரனை எதிர்த்து வந்ததும், ஒருவர் மீதொருவர் பாணங்களைப் பொழிந்து கொண்டு யுத்தம் செய்தார்கள்.

29—ம் ஸர்கம்.

இந்திரஜித்து தேவேந்திரனை ஜயித்து இலங்கைக்குக் கொண்டு போய் கோபுரவாசலில் கட்டி வைத்தான்.

"ராக்ஷஸ ஸைனியம் முழுவதும் தேவர்களால் அடிக்கப்பட்டு பத்திலொரு பங்கு மாத்திரமே பிழைத்தது. ராவணன கோபம்

---

1. இலங்கையை வசப்படுத்தி ராக்ஷஸ வம்சத்தை வாழ வைக்க வெகு பாடுபட்டவன் ஸுமாலி. மூத்தவனான மாலியவான் விஷ்ணுவால் தோற்கடிக்கப்பட்டு இலங்கையிலிருந்து பாதாளம் போனபிறகு, யாதாயினன் என்று தெரியவில்லை.

மிருந்து தேரிலேறி, நந்தனவனம் முதல் உதய பர்வதம் வரைக்கும் பரவியுள்ள தேவ ஸைனியத்தை வடபுறமாய்ப் பிரவேசித்து நாசம் செய்கையில், தென்புறமாய்ப் பிரவேசித்து ராக்ஷஸ ஸேனையை ஹிம்ஸித்துக்கொண்டிருந்த தேவேந்திரன் திரும்பிப் பாய்ந்து ராவணனை மறித்து கட்டிப் பிடித்தான். இந்திரஜித்து பாய்ந்தோடி வந்து, தனக்கு சிவபெருமான் அருளிய மாயையைப் பிரயோகித்து, தேவர்களனைவரையும் விட்டு தேவேந்திரனொருவனையே எதிர்க்க—மாயையால் இந்திரஜித்து இருக்குமிடமே தேவேந்திரனுக்குப் புலப்படவில்லை. ஆயினும், வன்மையோடு போர் செய்த தேவேந்திரனை இந்திரஜித்து கட்டிப்பிடித்து தன் ஸேனையின் மத்தியில் நிறுத்திய போது, தேவர்கள் இந்திரனை விடுவிக்கமாட்டாமல், ராவணனைச் சூழ்ந்துகொண்டு அடித்தனர்.[1] இந்திரஜித்து ராவணனை அழைத்துக் கொண்டு அவன் விரும்பியபடியே தேவேந்திரனையும் பிடித்துக் கொண்டு இலங்கைக்குப் போய், தேவேந்திரனைக் கோட்டை வாசலில் கட்டி வைத்தான்.

30—ம் ஸர்கம்.

பிரம்மா இந்திரனை விடுவித்து அவனுக்கு இந்த ஆபத்து நேர்ந்த காரணத்தை விவரித்தார்.

"தேவர்கள் பிரம்மாவிடம் போய் இந்திரனை விடுவிக்கும்படி வேண்டினார்கள். பிரம்மா இலங்கைக்கு வந்து, லோகபாலர்களை ஜயிப்பதாகப் பிரதிக்ஞை செய்து நிறைவேற்றிய ராவணனையும், இந்திரஜித்தின் பராக்கிரமத்தையும் புகழ்ந்து, அவனுக்கு இந்திரஜித்து—என்னும் பெயரே இனி பிரஸித்தமாம்படி அநுக்ரஹித்து,—இந்திரனை விடு; அதற்காக தேவர்கள் உனக்குச் செய்ய வேண்டியதைச் சொல்—என்றார். இந்திரஜித்து தனக்கு மரணமே கூடாதென்று சொல்ல,—மரணமில்லாப் பிராணியே கிடையாதென்று பிரம்மா மறுக்க,—சத்துருவை ஜயிப்பதற்காகச் செய்யுமோர் யாகத்தின் அக்னியிலிருந்து குதிரைகள் பூட்டிய தேர் தோன்றவேண்டும்; அத்தேரிலேறி யுத்தம் செய்யும் எனக்கு மரணம் நேரிடக்கூடாது; யாகம் முடியுமுன் யுத்தம் செய்தால் மரணம் நேரிடட்டும்;[2]

---

1. ராவணனோடு இது வரையில் சண்டை செய்தவர்களைவிட தேவர்கள் மிகுந்த பராக்கிரமசாலிகளென்று ஏற்படுகிறது.

2. யு. கா. 85-ம் ஸர், 13, 14 சுலோகங்களில் விபீஷணன் ராமனுக்குச் சொன்னது இந்த வரத்தையே.

யாவரும் தபஸ்ஸினுல் பெறும் வரத்தை நான் இப்படிப் பராக்கிரமத்தினுல பெறுகிறேன்—என்முன் இந்திரஜித்து.[1] பிரம்மா இசைந்தார். இந்திரனுக்கு விடுதலையாயிற்று.

“துக்கம் தாங்காமல் தலை குனிந்திருந்த தேவேந்திரனைப் பார்த்து பிரமமா பின் வருமாறு சொல்லலானுர்:—

“நீ முன்பு என் அகிருத்யம் செய்தாய்! நான் முதலில் ஒரே ரூபம, ஒரே நிறம், ஒரே பாஷையாக பிரஜைகளை ஸிருஷ்டித்தேன். எல்லோரையும் விட அழகாக ஒரு பெண்ணை ஸிருஷ்டித்து அவளுடைய தோஷமில்லா அழகுக்கேற்ப அஹல்யை எனப் பெயரிட்டபோது,—உயர்ந்த பதவியிலிருக்கும் எனக்கே இவள் மனைவியென்று நீ நினைத்திருந்தாய். அவளை அநேக வருஷம் கௌதமரிடம் வைத்திருந்தும் அவருடைய மனம் சற்றேனும கலங்காதிருந்ததால், அவளை அவருக்கே கொடுத்தேன். நீ கோபங்கொண்டு அவருடைய ஆச்ரமம் போய் அஹல்யையை அனுபவித்து,—கௌரவத்தை இழப்பாயென்றும்; சத்துருவின் கையில் அகப்படுவாயென்றும்; உனக்கு இந்திரபதவி ஸ்திரமாயிராதென்றும சபிக்கப்பட்டாய். பரஸ்திரீ கமனம் என்ற இந்த தோஷத்தில் பாதி மனுஷ்யர்களிடத்திலுமாய், பாதி உன்னிடத்திலும் உனக்குப் பிறகு வரும் ஒவ்வொரு இந்திரனிடத்திலுமாய்ப் பிரியும் என்று கௌதமர் விதித்து,—‘இவ்வாச்ரமத்துக் கருகிலேயே அநேக கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிரு! இதுவரை நீ ஒருவளே அழகிற் சிறந்தவளா யிருந்தனை! இனி உன்னழகைப் பெற்று அநேகம் அழகிகள் உண்டாவார்கள்’—என்று அஹல்யையையும் சபித்தார்.[2] ‘நான் புத்தி பூர்வமாய்ச் செய்த தொன்றுமில்லை’—என்று அஹல்யை வேண்டியதன் பேரில்,—‘தசரதபுத்திரனுய்ப் பிறக்கும் ராமன் இவ்வாச்ரமம் வரும்போது, அவருடைய தரிசனத்தினுல் உனக்கு சுத்தி ஏற்படும். அவருக்கு அதிதி பூஜை செய்து

---

1. ஸு. கா. 47ல் ஹனுமான் வதம் செய்த ராவண புத்திரனை அக்ஷகுமாரனைப் பற்றிய பிரஸ்தாவமே இந்தக் காண்டத்தில் காணேம்.

2. பா. கா. 48ம் ஸர்கத்திலுள்ள அஹல்யா விருத்தாந்தத்துக்கு இவ்விடம் சற்று மாறுதலாயும் அதிகமாயிருப்பதுபற்றி ஒருவரே முன்பின மாறிச் சொல்லுவதாய் வால்மீகி மீது குறைகூற இடமிராது. பா. காண்டத்தில் சொன்னது விசுவாமித்திரர். இங்கு பிரம்மா சொன்னதைச் சொல்லுகிருர் அகஸ்தியர். ரஹஸ்யஞ்ச ப்ரகாசஞ்ச விதிதம் தே பவிஷ்யதி என்றபடி அவரவர்கள் பேசினபடியே யாயிற்று வால்மீகி எழுதியது.

நீ என்னிடம் வந்து சேருவாயாக'—என்று அனுக்ரஹித்துப் போனார் மஹரிஷி.

"இந்திரனே! கௌதம சாபத்தினால் உனக்கு வந்ததாயிற்று இத்தனை துன்பமும். விரைவில் நீ வைஷ்ணவ யாகம் செய், தேவலோகம் போய்ச் சேரலாம். உன் பிள்ளை ஜயந்தனுக்கு யாதொரு தீங்கும் நேரிடாது. அவன் பாட்டனால் ஸமுத்திரத்தில் ரக்ஷிக்கப்பட்டிருக்கிறான்"—என்று சொல்லி பிரம்மா மறைந்தார்.

"இந்திரனும் வைஷ்ணவ யாகத்தைச் செய்து தேவலோகம் போய் மீண்டும் தன் பதவியிலடர்ந்தான். ராமா! இந்திரஜித்தின் பிரபாவம் இப்படியுள்ளது. இந்திரன் பட்ட பாடு இப்படியானால், மற்றவர்கள் இந்திரஜித்துக்கு எம்மாத்திரம்!"—என்றார் அகஸ்தியர்.

ராம லக்ஷ்மணர்கள் முதலிய யாவரும் ஆச்சரிய மடைந்தனர். நெடுநாள் முன் நடந்த விஷயம் இப்போது ஞாபகத்துக்கு வந்ததென்று சொல்லி விபீஷணனும் ஆச்சரியப் பட்டான்.

31—ம் ஸர்கம்.

ராவணன் கார்த்த வீரியார்ஜுனனை ஜயிக்கப் போய் வழியே நர்மதா தீரத்தில் லிங்கபூஜை செய்தான்.

ராவணன் இப்படி லோகத்தை ஹிம்ஸிக்கையில் அவனை வெல்லும் அரசரே பூமண்டலத்தில் ஒருவரேனுமில்லாமற் போயினரா?—என்று ராமன் கேட்டதற்கு அகஸ்தியர் சொல்லுகிறார்.

"ராவணன் கார்த்த வீரியார்ஜுனனை ஜயிப்பதற்காகத் தன் மந்திரிகளை அழைத்துக்கொண்டு மாஹிஷ்மதீ பட்டணம் போனான். அப்போது கார்த்த வீரியார்ஜுனன் ஊரிலில்லை. 'நர்மதாநதியில் ஸ்திரீகளோடு விளையாடப் போனான்'—என்று கேள்வியுற்று, ராவணன் விந்திய பர்வதம் தாண்டி நடுப்பகலில் நர்மதா நதிக்குப் போய் புஷ்பகத்தை விட்டிறங்கினான். அப்பொழுது சூரியன் மந்தாரமாயும் காற்று குளிர்ச்சியாயு மிருந்தது கண்டு தனக்கு பயந்தே அவர்கள் அப்படி தன்னை உபசரித்தார்கள்—என்றும் சொல்லிக் கொண்டு,[1]—'அநேகம் சண்டையில் பாணங்கள் தைத்த எரிச்சல் ஆறுவதற்காக இப்புண்ணிய நதியில் நீராடிப் பாபத்தையும்

1. ஸூரியன், சந்திரன், வாயு—முதலியவர்கள் ராவணனை விநோதமாய் உபசரித்ததாக கவிகள் வர்ணிப்பதற்கு இங்கு யாதொரு ஆதாரமும் இல்லாவிடினும், ராவணன் இப்படிச் சொல்லுவதே ஆதாரமாகலாம்.

தொலேயுங்கள். நானும் இதில் நீராடி இம்மணலிலேயே சிவபெருமானைப் புஷ்பங்களால் பூஜை செய்கிறேன்'—என்ருன் ராவணன்.

"மந்திரிகள் நர்மதையில் தீர்த்தமாடி ராவணன் செய்யும் சிவ பூஜைக்காக புஷ்பங்களைக் கொண்டு வந்து மலையாய்க் குவித்தனர். ராவணனும் நீராடி ஜபம் செய்து ஈர வஸ்திரம் விழுத்து, மடிதரித்து தான் போகுமிடங்தோறும் கொண்டு போகும் ஸுவர்ணலிங்கத்தை மணல் மேடையிலேயே வைத்து பூஜை செய்தான்.

32—ம் ஸர்கம்.

கார்த்த வீரியார்ஜுனன் ராவணனை ஜயித்துக் கட்டி தன் பட்டணத்துக்குக் கொணடு போனன்.

"ராவணன் பூஜை செய்து கொண்டிருந்த இடத்துக்கு மேற்கில் கார்த்தவீரியன்[1] கைக்கொரு கட்டழகியாய்த் தன்னுடைய ஆயிரம் கைகளிலும் ஆயிரம் பெண்களைக் கட்டியணைந்து ஜலக்ரீடை செய்து கொண்டிருந்தான். அர்ஜுனன் தன் புஜபலத்தைப் பரீக்ஷிக்க விரும்பி, ஆயிரம் கைகளையும் அணைபோலப் பரப்பி நர்மதாஜலத்தை அடைக்கையில், ஜலம் முழுவதும் மேற்கே போக வழியில்லாமல் திரும்பிப் பாய்ந்து கரைமீறி ராவணனுடைய பூஜையைக் கலைத்தது. இப்படி நேரிட்ட காரணத்தை அறிந்து வரும்படி ராவணன் இடது கை விரலால் சுக ஸாரணர்களுக்கு ஸம்க்ஞை செய்ய, அவர்கள் ஆகாயத்தில் தாவி அரை யோசனை தூரம் போய்த்திரும்பி வந்து, கார்த்தவீரியன் ஜலக்ரீடை செய்து கொண்டிருந்ததை அறிவித்தார்கள். உடனே ராவணன் புறப்பட்டுப் போய் தான் யுத்தத்துக்கு வந்திருப்பதை அர்ஜுனனுக் கறிவிக்குமாறு அவனுடைய மந்திரிகளிடம் சொல்ல,—'ஸ்திரீகளோடு க்ரீடித்துக் கொண்டிருப்பவனை யுத்தத்துக் கழைப்பது சரியல்ல. இன்றிரவு கடந்து நாளை யுத்தம் செய்யலாம். சண்டையில்லாமலிருக்க மனமில்லையேல், முதலில் எங்களோடு எதிர்த்து நின்று உன் பராக்கிரமத்தைக்காட்டு.'—என்றனர் அர்ஜுன மந்திரிகள். இப்படிச் சொன்ன மந்திரிகள்

1. கிருதவீரியன் என்ற ராஜனுக்குப் பிறந்த அர்ஜுனனுதலால் கார்த்தவீரியார்ஜுனன் எனப் பெயராயிற்று. இவன் நினைத்தபோது ஆயிரம் கை உண்டாகும்படி தத்தாத்ரேயரிடம் வரம் பெற்றவன். இவனைப் பரசுராமன் வதம் செய்தார். பரசுராமா வதாரத்துக்கு கார்த்த வீரியார்ஜுன வதமே முக்கியப் பிரயோஜனம். இவனுடைய சரித்திரம் பாரதத்தில் பலவிடங்களில் விஸ்தாரமாய்க் காணப்படுகிறது.

நொடிப் பொழுதில் ராவணனுக்கும் அவன் மந்திரிகளுக்கும் இரையாயினர். இச் செய்தியறிந்த கார்த்தவீரியன் உடனே ஜலத்தினின் றெழுந்து, தன்னை மகிழ்ப்பித்த ஸ்திரீகள் யாவருக்கும் தைரியம் சொல்லி, தடியைச் சுழற்றிக் கொண்டு ஓடி வருகையில், வழியை மறித்து யுத்தத்துக்கு வந்தான் பிரஹஸ்தன். அர்ஜுனன் சிறிது நேரம் பிரஹஸ்தனோடு சண்டை செய்து அவனைத் தடியா லடித்துத் தள்ளி, ராவணனை எதிர்த்துச் சென்றான். ராவண மந்திரிகள் அர்ஜுனனுக்கு பயந்து பதுங்கிக் கொண்டனர். அர்ஜுனனுக்கும் ராவணனுக்கும் நெடுநேரம் கடுமையாய் யுத்தம் நடந்தது. அர்ஜுனன் ராவணனை ஜயித்துக் கட்டினான். பிரஹஸ்தனும் மற்றைய மந்திரிகளும் ராவணனை விடுவிக்க வந்து அர்ஜுனனை எதிர்க்க,—அவன் எல்லோரையும் அடித்து அப்புறப்படுத்தி ராவணனைக் கட்டி தன் பட்டணத்துக்குக் கொண்டு போனான்.

33—ம் ஸர்கம்.

புலஸ்தியர் வந்து ராவணனை விடுவித்தார்.

"ராவணன் கைதியான செய்தியை தேவலோகத்தில் தேவர்கள் மூலமாய்க் கேள்வியுற்ற புலஸ்தியர் மாஹிஷ்மதீ பட்டணம் வந்து சேர்ந்தார். கார்த்தவீரியன் மஹரிஷியின் வரவறிந்து தன் புரோஹிதரை முன்னிட்டுக் கொண்டு புலஸ்தியரைப் பணிந்து வந்த காரியம் வினவினான். ராவணனை வென்ற அர்ஜுனனுடைய பராக்கிரமத்தைப் பெரிதும் புகழ்ந்து புலஸ்தியர் ராவணனை விடுவிக்கச் சொன்னார்.[1] அர்ஜுனன் மறுமொழி சொல்லாமல் உடனே ராவணனை விடுவித்து அக்னி ஸாக்ஷியாய் அவனோடு ஸ்நேஹம் செய்து கொண்டான். புலஸ்தியர் தம்மிடம் போனார். ராவணன் அச்சமயம் வெட்கித் தலைகுனிந்திருந்தாலும் தன் தினவடங்காமல் அரசர்களை வெகுவாய் ஹிம்ஸித்துக்கொண்டிருந்தான.

34—ம் ஸர்கம்.

ராவணன் வாலியை ஜயிக்கப் போய் அவமானப் பட்டான்.

---

1. யு. கா. 61-ம் ஸ, 24-ம் சுலோகத்தில் லோகவிநாசத்துக்காகவே, விச்ரவஸ்ஸினால் நீ ஸிருஷ்டிக்கப்பட்டாய்—என்று பிரம்மா கும்பகர்ணனுக்குச் சொல்லும் வாக்கியம் ராவணனுக்கும் சேருமாகையால், லோகவிநாசம் பூர்த்தியாவதற்காக இப்பொழுது புலஸ்தியர் ராவணனை விடுவிக்கிறார் போலும்!

"புலஸ்தியரால் விடுவிக்கப்பட்டு தப்பிய ராவணன் மீண்டும் பலசாலிகளைச் சண்டைக்கு இழுத்துக்கொண்டே ஒரு ஸமயம் கிஷ்கிந்தைக்குப் போய் வாலியை யுத்தத்துக்கு அழைக்க,—நாலு ஸமுத்திரத்திலும் ஸந்தியாவந்தனம்[1] செய்யச்சென்ற வாலி முதலில் தெற்கு ஸமுத்திரம போயிருப்பதாய்க் கேள்விப்புற்று அவனிடம் போயினன். மந்திரங்களை ஜபித்துக்கொண்டிருந்த வாலியைப் பிடிக்க மெதுவாய்ப் பின்புறம் சென்ற ராவணனை வாலி ஒரே பிடியாய்ப் பிடித்துக் கக்ஷத்திலடக்கிக்கொண்டு ஸமுத்திரம் ஸமுத்திரமாய்த் தாண்டி இழுத்தடித்தான். தெற்கு ஸமுத்திரத்திலிருந்து வரிசையாய் ஒவ்வொரு ஸமுத்திரத்திலும் ஸந்தியாவந்தனம்[2] முடித்துத் திரும்பிய வாலி ராவணனைக் கிஷ்கிந்தைக்கு வெளியே தோட்டத்தில் தள்ள, ராவணனுக்கு வாலியின் வன்மையைப்பற்றி பெரு வியப்புண்டாயிற்று. அவன் வாலியோடு அக்னி ஸாக்ஷியாய் ஸ்நேஹம் செய்து கொண்டு ஒரு மாஸம் கிஷ்கிந்தையிலேயே இருந்து,[3] திக்விஜயத்துக்காக மந்திரிகள் வந்து கூப்பிட்டதும் புஷ்பகத்திலேறிச் சென்றான்.

---

1. காலை ஸந்தியா வந்தனமா, மாலை ஸந்தியா வந்தனமா—என்று தெரிந்து கொள்ள இந்த ஸர்கத்தில் யாதொரு பதமும் இடையாது. ஆனால், கி. கா. 11-ம ஸர், 4-ம் சுலோகத்தில் வாலி ஸூரியோதயத்துக்கு முன்னரே ஸமுத்திரங்களைத் தாண்டுவான்—என்று ராமனுக்குச் சொல்லும் ஸுக்ரீவ வாக்கியத்திலிருந்து ப்ராதஸ் ஸந்தியாவந்தனத்தை வாலி ஸமுத்திரத்தில் செய்ததாக ஊஹிக்கலாம்.

2. நாலு ஸமுத்திரத்திலும் ஸந்தியாவந்தனம் செய்வதென்றால் நாலுதரம் செய்ய சாஸ்திரமில்லையாகையால், தெற்கில் ஸந்தயாவந்தன அங்கமான சுத்தியையும், மேற்கில் ஸ்நானத்தையும், வடக்கில் ஆபோ ஹிஷ்டா என்று ப்ரோக்ஷணத் தையும் முடித்து, கிழக்கில் அர்கிய ப்ரதானத்தையும் காயத்ரீ ஜபத்தையும் செய்ததாக கோ. வியாக்கியானம். 'மந்திரங்களை ஜபித்துக் கொண்டிருந்த வாலியை'—என்றதால் தெற்கு ஸமுத்திரத்திலேயே ஸந்தியாவந்தனத்தை முடித்து ஜபத்தை ஒவ்வொரு ஸமுத்திரத்திலும் கொஞ்சம் கொஞ்சமாய்ச் செய்தான் வாலி யென்று திலகவியாக்கியானம். ராவணனைக் குலத்தோடு அழிப்பதற்காக இந்திரன் தன் பிள்ளை வாலியைக் கொண்டு இப்படி விரதத்தை நடத்துகிறான் என்றும் திலகர் சொல்லுகிறார். இவர் இப்படிச் சொல்லும் விவரத்துக்கு யாதொரு ஆதாரமும் காட்டவில்லை.

3. ராவணன் அங்கதனுடைய தொட்டிலில் அங்கதனுடைய விளையாட்டுக்காக பத்துதலைப் பூச்சியாய் கட்டுண்டு தொங்கினான்—என்று இங்கு சொல்லப்படவில்லை. இவ்விஷயம் கதைக் கூத்தர்களின் கைச் சரக்கோ! புராணாந்தரக் கதையோ!

35—ம் ஸர்கம்.

ஹனுமானுடைய பராக்கிரமத்தைக் கேட்க விரும்பிய ராமனுக்கு அகஸ்தியர் ஹனுமான் பிறந்து ஸூரியனை விழுங்கப் போன விவரத்தைச் சொன்னார்.

அகஸ்தியர் இப்படிச் சொல்லி முடித்ததும்,—'ராவணனாலும் வாலியாலும் ஹனுமானுக்கு ஈடாகார்கள். ஹனுமான் ஒருவரில்லாவிடில் ஸீதை இருக்குமிடமே நமக்குத் தெரிந்திராது. இப்படி பராக்கிரமசாலியான ஹனுமான் ஸுக்ரீவனைத் தவிக்கச்செய்த வாலியை என் கொல்லாமலிருந்தார்? இவருக்குத் தன்பலம் தெரியாது போலும்! இவருடைய விவரத்தையும் சொல்லுவீராக'— என்று ராமபிரான் கேட்டதற்கு அகஸ்தியர் சொல்லுகிறார்:—

"கேஸரி என்ற வானரன் மேருமலையை ஆண்டு கொண்டிருந்தான். அவனுடைய மனைவி அஞ்சனைக்கு வாயுபகவான் மூலமாய்ப் பிறந்தவர் ஹனுமான்.[1] பிறந்த இடத்திலேயே குழந்தையை வைத்துவிட்டு அஞ்சனை பழம் கொண்டுவருவதற்காக புறப்பட்டுப் போனதும், அழுது கொண்டிருந்த குழந்தை உதய ஸூரியனைப் பழமென்று நினைத்து பிடிக்கத் தாவிற்று. அன்று அமாவாஸையாகையால் ஸூரியனைப் பிடிக்க வந்த ராஹு ஹனுமானைக் கண்டு பயந்து இந்திரனைத் துணையாக அழைத்து வந்தான். குழந்தை ஸூரியனை விட்டு ராஹுவைப் பிடிக்கப் போகையில், ஐராவதத்தின் மீதேறி எதிர்த்து வந்தான் இந்திரன். குழந்தை ராஹுவைவிட்டு ஐராவதத்தை விரட்டிற்று. இந்திரன் குழந்தையை வஜ்ராயுதத்தினால் அடித்தான். அடிபொறுக்காமல் குழந்தை மலைமேல் விழுந்து இடது கன்னத்தில் வடுவாய்த் தாக்குண்டது. வாயுபகவான் துக்கமும் கோபமும் தாங்காமல் தம்முடைய ஸஞ்சாரத்தை அடக்கி குழந்தையை எடுத்துக்கொண்டு குகைக்குள் போய்விட்டார். ஜகத்திலுள்ள பிராணிகள் யாவும் மூச்சு விடமுடியாமல் வயிறு

---

1. ஸு. கா. 35-ம ஸர், 80-வது சுலோகத்தில் ஹநுமானே தான் கேஸரி பத்னிக்கு வாயுபகவான் மூலமாய்ப் பிறந்ததாக ஸீதையிடம் சொல்லுவது காண்க. கி. கா. 63-ம் ஸர்கம் முழுவதும ஹநுமானுடைய ஜனனம் முதலியவற்றைச் சொல்லுகிறது. புஞ்ஜிகஸ்தலை யென்ற அப்ஸரஸ் ஸ்திரீ சாபத்தினால் குஞ்சரன் என்ற வானரத்துக்கு அஞ்சனையாய்ப் பிறந்து, கேஸரிக்குப் பத்தினியாகி, வாயுபகவானால் கர்ப்பந்தமாய் அனுபவிக்கப்பட்டு ஹனுமானைப் பெற்ற விஷயம் இந்த ஸர்கத்திலும் விட அதிக விவரமாயிருக்கிறது.

பெருத்துத் தவிக்கையில் தேவர்கள் பிரம்மாவிடம் போய் பிரார்த்தித்தனர். பிரம்மா தேவர்களை அழைத்துக்கொண்டு வாயு பகவானிடம் வந்தார்.

36—ம் ஸர்கம்.

பிரம்மாவினால் பிழைப்பிக்கப்பட்ட ஹனுமான் தேவர்களிடமிருந்து வரத்தையும், ரிஷிகளிடமிருந்து சாபத்தையும் பெற்றார்.

"பிரம்மாவைக் கண்டதும் வாயு பகவான் மடியிலிருந்த குழந்தையை எடுத்துக் கொண்டு எழுந்தார். பிரம்மா தம்முடைய கையால் குழந்தையைத் தடவிக் கொடுத்தவுடன் குழந்தை உயிர் பெற்று விளையாடலாயிற்று. வாயுபகவான் மகிழ்ந்து ஸஞ்சரிக்கலானார். அந்தக் குழந்தையினால் தேவர்களுக்கு மிகுந்த நன்மையுண்டாகப் போவதால் அதற்கு வரம் கொடுக்கும்படி பிரம்மா சொல்ல,—இந்திரன் தன்னுடைய வஜ்ராயுதத்தினால் அடிபெற்று விழுந்தபோது இடது கன்னத்தில் தாக்கியதால் குழந்தைக்கு ஹனுமானென்று பெயரிட்டு, இனி தன் வஜ்ராயுதத்தினாலும் ஹனுமானுக்கு அழிவில்லையென்றும்; ஸூரியன் வித்தைகளைக் கற்று கொடுப்பதாயும்; பிரம்மாவும் விச்வகர்மாவும் ஹனுமான் சிரஞ்சீவியாயும், பிரம்மாஸ்திரத்தினாலும் ஆயுதங்களாலும் மரணமில்லாமலு மிருப்பாரென்றும் வரம் கொடுத்தார்கள். மற்றைய தேவர்களும் ஹனுமானுக்கு வரம் கொடுத்துப் போயினர். வாயு பகவான் ஹனுமானை அஞ்சனையிடம் கொண்டு போய்க் கொடுத்து நடந்த தனைத்தையும் தெரிவித்தார். ஹனுமான் ரிஷி ஆச்ரமங்களில் பிரவேசித்து மிகவும் ஹிம்ஸை செய்து கொண்டிருந்ததால் இவர் பெற்ற வரத்தையும் இவரால் லோகத்துக்கு நடக்கவேண்டிய நன்மைகளையும் பார்த்து, இவருக்குத் தன்பலம் நினைவு மூட்டினாலன்றி தெரியாதென்று ரிஷிகள் சபித்தனர்.[1]

"வாலி ஸுக்ரீவர்களுககுப் பிதாவான ருக்ஷரஜஸ் வானர ராஜனாயிருந்து இறந்ததும் வாலி ராஜாவாயும் ஸுக்ரீவன் இளவரசனாயுமிருந்தனர். ஹனுமானுக்கும் ஸுக்ரீவனுக்கும் பாலியம் முதல இணைபிரியாத ஸ்நேக மேற்பட்டது. வாலியால் ஸுக்ரீவன் மிகவும்

1. கி. கா. 63-ம் ஸர்கத்தில் ஜாம்பவான் ஞாபகப்படுத்திய பிறகு தான் ஹனுமானுக்கு ஸமுத்திரத்தைத் தாண்டு மவ்வளவு பலம் ஏற்பட்டது.

துன்பப் பட்டபோது ஹநுமானுக்குத் தன் பலம் தெரியாது. ஸுக்ரீவனுக்கும் இவருடைய விவரம் தெரியாது. ஹநுமான் ஸூரியனிடம் போய் ஸகல வித்தைகளையும் கற்றுக்கொண்டு எல்லா சாஸ்திரங்களிலும் மஹா நிபுணரானார். எல்லா சாஸ்திரங்களைவிட வியாகரணத்தில் ஹநுமான் மிகுந்த பாண்டித்தியம் பெற்றவர். ராமா! உம்முடைய அனுக்ரஹத்தினால் ஹநுமான் பிரம்மா வாகப் போகிறார்.[1] நீர் கேட்டதனைத்தையும் சொல்லியாய் விட்டது. எங்களுக்கு விடை கொடுப்பீராக"—என்றார் அகஸ்தியர்.

ராமன் மிகவும் மனமகிழ்ந்து,—"நான் இனி யாகங்கள் செய்யப் போகிறேன். அதற்கு நீங்கள் எல்லோரும் அடிக்கடி வந்திருந்து என்னை அனுக்ரஹிக்க வேண்டும்"—என்றார். ரிஷிகள் தம்மிடம் சென்றனர். ஸூரியன் அஸ்தமித்தான். ராமன் ஸந்தியா காரியங்களை முடித்து இரவில் அந்தப்புரம் பிரவேசித்தார்.

37—ம் ஸர்கம்.

ராமன் பட்டாபிஷேகத்துக்கு மறுநாள் ஸபையில் வீற்றிருந்து விநோதமாய்க் காலம் கழித்தார்.

பட்டாபிஷேகமான அன்றிரவு[2] ஸுகமாய்ச் சென்றது. மறுநாள் பொழுது விடிந்ததும், பாடகர்கள் வந்து ராமனைப்பாடி எழுப்பினர். ராமன் நித்தியகர்மானுஷ்டானம் முடித்து ஸபா மண்டப மேறி வீற்றிருந்தார். வஸிஷ்டர் முதலிய மஹரிஷிகளும், அநேகம் அரசர்களும், பரதலக்ஷ்மண சத்ருக்னர்களும், ஸுக்ரீவன் தொடக்கமான இருபது வானர வீரர்களும், நாலு மந்திரிகளோடு கூடிய விபீஷணனும், ஏராளமான வைதிக வித்துவான்களும், ஸபையில் வீற்றிருந்து ஆச்சரியமான பூர்வகால கதைகளையும் அநேகம் விஷயங்களையும் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

[அதிக ஸர்கம்—1

ருக்ஷரஜஸ் பெண்ணாய் மாறியபோது இந்திரனும் ஸூரியனும் அப்பெண்ணிடம் வாலி ஸுக்ரீவர்களைப் பிறப்பித்தார்கள்.

---

1. அடுத்த பிரம்ம பட்டம் ஹநுமானுக்குக் கிடைக்கப் போவதாய் கர்ணபரம்பரை. 'பவிஷ்யத் பிரம்மணே நம:' என்று ஹநுமானுடைய அஷ்டோத்தரத்திலும் சொல்லப்படுகிறது. இங்கு அகஸ்தியரும் இப்படிச் சொல்லுகிறார். இதை மற்ற புராணங்களிலும் கவனிக்கவும்.

2. இதனால் பட்டாபிஷேகமான அன்றைய தினமே அகஸ்தியர் முதலானோர் வந்ததாகத் தெரிகிறது.

'வாலி ஸுக்ரீவர்களுடைய பிதா ருக்ஷரஜஸ் என்பது யார்?—அவர்களுடைய தாயைப்பற்றி ஏன் சொல்லவில்லை?'—என்று ராமன் கேட்க, அகஸ்தியர் சொல்லலானார்.

"ஸகல தேவர்களாலும் பூஜிக்கப்படும் மேருபர்வத மத்திய சிகரத்தில் யோகாப்பியாசம் செய்து கொண்டிருந்த பிரம்மா தன் கண்களிலிருந்து வீழ்ந்த ஜலத்தைக் கையிலேந்தி தரையில் விட்டார். அந்த ஜலத்திலிருந்து ஓர் வானரமுண்டாயிற்று. (ருக்ஷரஜஸ் என்ற) அவ் வானரத்தை—கொஞ்ச காலம் என்னிடத்திலிரு; உனக்கு மிகுந்த சரேயஸ் உண்டாகும்—என்றார் பிரம்மா. ருக்ஷரஜஸ் தினந்தோறும் பகலெல்லாம் மலையில் அலைந்து திரிந்து பழங்களைத்தின்று மாலையில் பழங்களையும் புஷ்பங்களையும் எடுத்து வந்து பிரம்மாவை உபசரித்துக் கொண்டிருந்தான். ஒருநாள் மேருவின் வடசிகரம் போய் ஓர் குளத்தில் தன் நிழலைக்கண்டு சத்துருவென்று நினைத்து பிடிப்பதற்காக ஜலத்தில் குதித்து வெளியேறியதும் அவனுடைய மேனி ஸர்வாங்க ஸுந்தரியான பெண்ணாய் மாறிற்று. அப்பொழுது அங்கு வந்த இந்திரனும் ஸூரியனும் அப்பெண்ணின் அழகைக் கண்டு மனம் கலங்கி காமவிடாய் கொண்டனர். இந்திரனுடைய சக்தி பெண்ணின் வாலில் வீழ்ந்து ஒரு வானரமும், ஸூரியனுடைய சக்தி கழுத்தில் வீழ்ந்து மற்றொரு வானரமும் உண்டாயின. வாலினின்று உண்டானதற்கு வாலியென்றும், கிரீவத்திலிருந்து (கழுத்திலிருந்து) உண்டானதற்கு ஸுகரீவனென்றும் பெயராயிற்று. இந்திரன் மிகுந்த சக்தி வாய்ந்ததொரு ஸுவர்ண மாலையை வாலிக்கு கொடுத்துப் போனான். ஸூரியன் தன் சிஷ்யனான ஹனுமானை ஸுக்ரீவனுக்கு ஒவ்வொரு காரியத்திலும் உற்ற தோழனாகக் காட்டிக்கொடுத்தான். ருக்ஷரஜஸ் குழந்தைகளுக்கு பழங்களைக் கொடுத்துக் கொண்டு அன்றிரவு முழுவதும் அவ்விடமே யிருக்க, மறுநாள் பொழுது விடிந்ததும பெண்ணுருவம் மாறியது. ருக்ஷரஜஸ் குழந்தைகளை அழைத்துக் கொண்டு பிரம்மாவிடம் போனதும், அவர் மனமகிழ்ந்து பூலோகத்திலுள்ள கிஷ்கிந்தைக்கு ருக்ஷரஜஸை ராஜாவாக்கி, எல்லா வானரங்களையும் அவனுக்குக் கீழ்ப்படிந்திருக்குமாறு கட்டளையிட்டார். வாலி ஸுக்ரீவர்களுக்குத் தாயார் பகவான் தான்.

அதிக ஸர்கம்—2.

ஸநத்குமாரர் ராவணனுக்கு விஷ்ணுவின் மஹிமையைச் சொன்னார்.

வாலி ஸுக்ரீவர்களின் உத்பத்தியைக் கேட்டு ராமன் மிகவும் ஆச்சரியப்படுகையில், ஸீதையை ராவணன் அபஹரித்த காரணத்தையும் விவரிப்பதாக அகஸ்தியர் சொல்லலானார்.

"முன்பு கிருத யுகத்தில் ராவணன் பிரம்ம புத்திரரான ஸநத்குமாரரைக் கண்டு,—தேவர்கள் யாருடைய பலத்தைக் கொண்டு ஜயிக்கிறார்கள்? யாகம் யாரை உத்தேசித்து செய்யப்படுகிறது? யோகிகள் யாரை தியானம் செய்கிறார்கள்? என்று கேட்க விஷ்ணுவையே குறிப்பிட்டார் ஸநத்குமாரர். யுத்தத்தில் தேவர்களாலும் விஷ்ணுவாலும் வதம் செய்யப்பட்டவர்களின் கதி யாதென்று ராவணன் கேட்டான். தேவர்களால் வதம் செய்யப் பட்டவர்கள் வீர ஸ்வர்கம் போய் கொஞ்ச காலம் வஸித்து மீண்டும் பூமியிலேயே பிறக்கிறார்கள்; விஷ்ணுவினிடத்திலேயே லயிக்கிறார்கள்—என்று சொன்னார் ஸநத்குமாரர். ராவணன் தனக்கு விஷ்ணுவின் கையினால் எப்படி வதம் கிடைக்குமென்று கவலைப்பட்டான்.

அதிக ஸர்கம்—3.

ஸநத்குமாரர் ராவணனுக்கு விஷ்ணுவின் லக்ஷணத்தைச் சொன்னார்.

"இப்படி கவலைப்பட்டிருந்த ராவணனைப் பார்த்து ஸநத்குமாரர்—கொஞ்சம் பொறுத்துக்கொள்; நீ நினைத்தபடியே கிடைக்குமென்றார். ராவணன் விஷ்ணுவின் லக்ஷணம் யாதென்று கேட்க,—'ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரகர்த்தாவாயும், சராசராத்மகமான ஜகத்தாயும், பக்தர்களுக்கு மட்டும் தென்படுபவராயுமுள்ளவர். நீ அவரைக் காண்பதற்கு ஒருபாயமுண்டு. கிருதயுகம் போய் திரேதாயுகம் ஆரமபிக்கையில்' இக்ஷ்வாகு வம்சத்தில் தசரதனிடம் ராமனாய் அவதரித்து பித்ருவாக்கிய பரிபாலனமாக தண்டகாரணியத்தில் ஸஞ்சரிப்பார். லக்ஷ்மியும் தன்னுடைய அழகனைத்தையும் சேர்த்து ஸீதையாய்ப் பிறந்து ராமனுக்கு மனைவியாகி அவரைப் பின்தொடருவாள்.' என்றார் ஸநத்குமாரர்.

அதிக ஸர்கம்—4.

விஷ்ணுவின் கையினால் வதம் பெறுவதற்காகவே ராவணன் ஸீதையைக் கவர்ந்தான்.

"ராமா! விஷ்ணுவினாலேயே தனக்கு மரணம் வேண்டுமென்று விரும்பி ராவணன் ஸீதையை அபஹரித்தான்—என்று எனக்கு மேரு பர்வதத்தில் நாரதர் சொல்லியுள்ளார். அவர் சொன்ன கதை முழுவதையும் உனக்குச் சொல்லுகிறேன்.

அதிக ஸர்கம்—5.

ராவணன் சுவேத த்வீபம் போய் அவமானப் பட்டான்.

"ராவணன் நாரதரைக் கண்டு தன்னோடு போர் புரியவல்ல வீரர் யாரென்று கேட்க,—க்ஷீராப்திக்கருகில் சுவேத த்வீபததிலுள்ளோர்

யாவரும் மஹா பலசாலிகளென்றார் நாரதர். அவர்கள் சுவேத த்வீபத்தி லெப்படிப் பிறந்தனரென்று கேட்ட ராவணனுக்கு,—ஸ்ரீமந் நாராயணனை யே அண்டியவர்களுக்கு சுவேத த்வீபத்தில் வாஸம் கிடைக்கும்; விஷ்ணு வால் வதம் செய்யப்பட்டவர்களுக்கும் ஸ்வர்க ப்ராப்தி யுண்டு—என்று நாரதர் சொல்ல, ராவணன் சுவேத த்வீபம் போய்ச் சேர்ந்தான். அங்கு நடக்கும் விநோதத்தைப் பார்க்க நாரதரும் போனார். சுவேத த்வீபத்தின் பிரபாவத்தினால் ராக்ஷஸர்கள் நிற்க முடியாமல் தவித்ததால் ராவணன் அவர்களைப் புஷ்பகத்திலேற்றி அனுப்பி விட்டான்.

"அங்குள்ள பெண்கள் ராவணனைப் பத்துதலைப்பூச்சி யென்று பரிஹஸித்து, வந்த காரியம் வினவ,—ராவணன் தன் பெருமையைப் பரக்கச் சொல்லி யுத்தத்துக்காக வீரரைத் தேடி வந்ததாயறிவித்தான். ஒருத்தி அவனை விரலால் அலக்ஷியமா யெடுத்து அம்மானை யாடினாள். அவளுடைய கையை ராவணன் கடித்து வீசியெறியப் பட்டு ஸமுத்திரத் தில் வீழ்ந்தான். சுவேத த்வீபத்திலுள்ள பெண்களின் பராக்கிரமமே இப்படியானால் ஆண்மக்களின் பராக்கிரமம் யாதாமோ!—என்று ராவணன் வெட்கித் திரிகையில் ஸநத்குமாரரைக் கண்டு இந்த ஜகத்தை ஸிருஷ்டித் தது யாரென்று கேட்டான். ஸநத்குமாரர் ஸ்ரீமந்நாராயணனையே குறிப் பிட்டு அவருடைய பரத்வத்தை விவரித்தார். விஷ்ணுவைத் தானடை யும் உபாயம் யாதென்று கேட்டான் ராவணன். வைவஸ்வத மன்வந்தரத் தின் 28வது யுகத்தில் ஸ்ரீமந் நாராயணன் இந்த லோகத்தில் பிரவேசிப் பார். நீ விரும்பியபடி உனக்குக் கிடைக்கும்—என்று ஸநத்குமாரர் சொல்லியனுப்பினார். ராவணன் தன்னுடைய ஸேனை யிருக்குமிடம் போய் ஸேனையை அழைத்துக்கொண்டு இலங்கை சேர்ந்தான்.

"நாரதரும் மேருபர்வதத்தில் தேவர்களோடு வீற்றிருக்கும் பிரம்மா விடம் போய் ராவணன் சுவேத த்வீபம் போன செய்தியைச் சொல்ல,—ராவணன் பூர்வம் ஹிரண்ய கசிபுவாயிருந்து நரஸிம்மனால் வதம் செய்யப் படுகையில், உம்முடைய லோகத்தை நான் அடைய வேண்டுமென்று பிரார்த்திக்க, அவரும் அப்படியே அனுக்ரஹித்தார். ஹிரண்ய கசிபுவே இப்போது ராவணனாய்ப் பிறந்திருக்கிறான்—என்று பிரம்மா சொன்னார்.

"இப்படி பிரம்மா தனக்குச் சொன்னதை நாரதர் எனக்குச் சொன்ன ரஹஸ்யம் இது. ராமா! நீயே ராவணனை வதம் செய்வதற்காக மனுஷ்ய ரூபத்தோடு வந்த ஸ்ரீமந் நாராயணன். உன் கையினால் மரண மடைவதற்காகவே ராவணன் ஸீதையை அபஹரித்தான். லக்ஷ்மியே ஸீதையாக ஆவிர்பவித்து ஜனகராஜன் திருமகளாய் வந்தவள். ஸநத்-குமாரர் சொன்னபடியே ராவணனும் செய்தான்."

என்று சொல்லி அகஸ்தியரும் மற்றைய ரிஷிகளும் புறப்பட்டுச் சென்றனர்.]

38—ம் ஸர்கம்.

பட்டாபிஷேகத்துக்கு வந்த வேந்தர்களை ராமன் உபசரித்து அனுப்பினார்.

பட்டாபிஷேக மானவுடன் தினந்தோறும் ராமன் இப்படியே பெரியோர்களால் கொண்டாடப்பட்டும் அவர்களிடமிருந்து விநோதமான பழைய கதைகளைக் கேட்டுக் கொண்டுமிருந்தார். சில நாள் சென்றதும் ராமன் ஏராளமான ரத்தினங்களை வெகுமதியாகக் கொடுத்து ஜனகரை ஊருக்குப் பிரயாணமாக்கி, பரதனையும் அவருக்குத் துணையாகப் போகச் சொல்ல,—ஜனகர் ராமன் கொடுத்த ரத்தினமனைத்தையும் ஸீதைக்குத் தான் கொடுத்ததாய் வைத்துக் கொள்ளச் சொல்லி, தன்னிருப்பிடம் போனார். இவ்விதமே லக்ஷ்மணனுடைய துணையின்கீழ் கேகய ராஜனை யுதாஜித்தும் அனுப்பப்பட்டான். ராமன் காசிராஜனை பிரதர்தனனுக்கும் விடை கொடுத்தனுப்பினார். பட்டாபிஷேகத்துக்கு வந்திருந்த மற்றைய மூன்னூறு மன்னவர்களும் ராமனால் ஸத்கரிக்கப்பட்டு தம் தேசம் போய்ச் சேர்ந்தார்கள்,

39—ம் ஸர்கம்.

ராமன் ராக்ஷஸர்களோடும் வானரர்களோடும் விநோதமாய்க் காலம் கழித்தார்.

மன்னவர்களோடு கூடப்போன பரதலக்ஷ்மண சத்துருக்னர்கள் அந்தந்த அரசர்கள் கொடுத்த மணி முத்து பவழம் முதலியவற்றைக் கொண்டு வந்து ராமனிடம் கொடுத்தார்கள். அவை யனைத்தையும் ராமன் ஸுக்ரீவனுக்குக் கொடுத்தார். ஹனுமானையும் அங்கதனையும் மடியில் உட்கார்த்தி தானணிந்திருந்த ஆபரணங்களைக் கழற்றி அவர்களுக்குப் போட்டு, வானரவீரர்க ளனைவரையும் பார்த்து,—'என்னைத் துன்பத்திலிருந்து தூக்கி யெடுத்தவர்களன்றோ நீங்கள்'— என்று பெரிதும் பரிவு காட்டினார் ராமன். இப்படி வானரர்களோடும் ராக்ஷஸர்களோடும் ராமன் விநோதமாய்க் காலம் கழிக்கையில் சிசிர[1] ருது கழிந்தது.

---

1. ராமன் வானரர்களோடும் ராக்ஷஸர்களோடும் ஒரு வருஷம் விநோதமாய்க் காலம் கழித்ததாக இவ்விடத்தில் வியாக்கியாதாக்கள் தீர்மானிக்கிறார்கள்.

40—ம் ஸர்கம்.

ராமன் வானரர்களையும் ராக்ஷஸர்களையும் உபசரித் தனுப்பினார்.

ராமன் ஸுக்ரீவனை அழைத்து ஹநுமான் முதலானவர்களை நன்றாய்ப் பரிபாலிக்கச் சொல்லி, தர்மம் தவறாமல் இலங்கையை ஆளும்படி விபீஷணனுக்கும் சொன்னார். எல்லோரும் ராமனுடைய கல்யாண குணங்களைப் பெரிதும் புகழ்ந்து கொண்டிருக்கையில், ஹநுமான் 'மற்றொன்றையும் பற்றாது மனோபாவம்; என மனம் உம்மிடமே நிலைநிற்க வேண்டும்; ராமகதை யுள்ள வரையில் என்னுயிர் இருப்பது நிச்சயமாகையால், உம்முடைய சரித்திரத்தை எனக்கு அப்ஸரஸ்ஸுகள் எப்பொழுதும் கானம் செய்து கொண்டே யிருக்கவேண்டும்'—என்று வேண்டினார். 'அப்படியே நடக்கும்; நீர் செய்த ஓரோர் உபகாரத்துக்கும் நான் என்னுயிரைக் கொடுக்கிறேன்.'—என்று சொல்லி ராமன் தன் கழுத்திலிருந்த முத்து மாலையைக்கழற்றி ஹநுமானுடைய கழுத்தில் போட்டார்.[1] யாவரும் ராமனை விட்டுப் பிரிய மனமில்லாமல சரீரத்தை விடும் ஆத்மா போலப் புறப்பட்டுப் போனார்கள்.

41—ம் ஸர்கம்.

ராமன் புஷ்பகத்தை நினைத்தபோது வரச்சொல்லி யனுப்பினார்.

வானரர்களையும் ராக்ஷஸர்களையும் அனுப்பிவிட்டு ராமன் மந்தியானம் தம்பிகளோடு வீற்றிருந்தார். ராமனால் குபேரனிடம் அனுப்பப்பட்ட புஷ்பகம் திரும்பி வந்து ஆகாயத்திலிருந்து கொண்டே, 'ராமா! உம்மையே வஹித்துக் கொண்டிருக்கும்படி சொல்லி குபேரன் என்னைத் திருப்பி யனுப்பிவிட்டான்'—என்று சொல்லிற்று. ராமன் புஷ்பகத்தைப் புஷ்பத்தினாலும் தூபம் முதலியவைகளாலும் நன்றாய்ப் பூஜித்து—'நான் நினைக்கும்போது வருவாயாக. ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் ஸித்தர்களுக்கு உன்னால் யாதொரு கெடுதியும் நேரிடாவாறு விருப்பம் போல ஸஞ்சரி'—என்று சொல்லி யனுப்பினார். புஷ்பகம் புறப்பட்டுப் போனதும் பரதன் வந்து,—'உம்மால் பரிபாலிக்கப்படும் பிரஜைகள் யாதொரு

---

1. பட்டாபிஷேக ஸமயத்தில் ஹநுமானுக்கு ஸீதை ஒரு முத்து ஹாரம் கொடுத்தாள். இப்பொழுது ராமன் மற்றொரு ஹாரம கொடுத்தார்.

குறைவு யின்றிக் களிக்கின்றனர்; ராமனே நமக்கு நெடுநாள் ராஜனு யிருக்க வேண்டுமென்றே சொல்லிக் கொள்கிறார்கள்'—என்று தெரிவித்தான். ராமனும் இதைக் கேட்டு மகிழ்ந்தார்.

42—ம் ஸர்கம்.

ஸீதை கர்பமானாள்.

ராமன் புஷ்பகத்தை அனுப்பி விட்டு அசோகவனம் போய் ஸீதையோடு கூட விநோதமாய்க் காலம் கழித்தார். தினந்தோறும் முன்நேரத்தில் ராமன் ராஜ்ய காரியங்களைப் பார்த்துவிட்டு மத்தியானத்துக்கு மேல் அந்தப் புரத்தில் விநோதமாய் விளையாடுவது வழக்கம். ஸீதையும் முன் நேரத்தில் தேவ பூஜைகளை முடித்து மாமிகளுக்கும் சுச்ரூஷை செய்து மத்தியானம் அந்தப் புரத்தில் காத்திருப்பாள். இப்படியிருக்கையில்,[1] ஸீதை கர்பமாயிருப்பதாக ராமன் அவளுடைய முகக் குறிப்பினாலறிந்து கொண்டு அதை அவளிடம் தெரிவித்து, அவளுடைய விருப்பம் யாதென்று கேட்டார். 'கங்காதீரத்திலுள்ள புண்ணியமான ரிஷி ஆச்ரமங்களில் ஒரு நாளாவது வஸிக்க விரும்புகிறேன்'—என்றாள் ஸீதை. 'நாளை போகலாம்'—என்று சொல்லி ராமன் அந்தப் புரத்தை விட்டு நடுக் கூடம் போனார்.

43—ம் ஸர்கம்.

ராமனைப் பற்றி ராஜ்யத்தில் பரவிய நிந்தை ராமன் காதுக் கெட்டியது.

ராமன் நடுக் கூடத்திலுட்கார்ந்திருக்கையில், விநோதமாய்க் கதை சொல்லும் விஜயன், மதுமத்தன்—முதலியவர்கள் வந்து வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களுள் பத்திரன் என்பவனைப் பார்த்து—“என்னையும் நான் செய்த ராவண வதத்தையும், ஸீதை, பரதன், லக்ஷ்மணன், சத்ருக்னன், கைகேயி முதலானவர்களையும் குறித்து ஊரில் என்ன சொல்லிக் கொள்கிறார்கள்? புதிய ராஜா வந்தவுடன் ஜனங்கள் ஏதேனும் சொல்லுவது வழக்கம். அவர்கள் சொல்வதைச் சொல். தோஷத்தைத் தவிர்ந்து

1, இனி நடக்கும் விஷயம் யாவும் ராமன் பதினாயிரம் வருஷம் ராஜ்யபாலனம் செய்தபிறகென்று அபிப்பிராயப்படுவதற்கு சில ஆதார மிருக்கிறது. ஆனால் பட்டாபிஷேகமான இரண்டு மூன்று வருஷத்துக்குள் ஸீதாபரித்தியாகம் முதலிய மேல் கதை நடந்ததாகவே தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. இந்தத் தீர்மானம் ஆங்காங்கு காட்டப்படும்.

நன்மையைத் தெரிந்துகொள்கிறேன். எதுவானாலும் தைரியமாய்ச் சொல்"—என்றார் ராமன்.

"வெகு ஆச்சரியமாய் ராமன் ஸமுத்திரத்தில் அணைபோட்டு, வானரர்களையும் ராக்ஷஸர்களையும் வசப்படுத்தி ராவணனைக் கொன்று, ஸீதையையும் மீட்டு ரோஷமில்லாமல் வீட்டுக்கும் கொண்டுவந்து விட்டார். ராவணன் தன் மடியிலுட்காரவைத்துக் கொண்டு போய் ராக்ஷஸர்களிடம் ஒப்பித்த ஸீதையோடு சேர்ந்துதான் ராமனுக்கு என்ன ஸுகம்! இனி நம் பெண்டிரையும் இப்படி மன்னித்து விடலாம்."—என்று இப்படியெல்லாம் ஊரில் வார்த்தை நடப்ப தாய்ச் சொன்னான் பத்திரன்.[1] ராமன் மிகவும் மனம் வருந்தி பத்திரனை அனுப்பிவிட்டார்.

44—ம் ஸர்கம்.

ராமன் தனக்கு நேரிட்ட அபவாதத்தைத் தெரிவிப்பதற்காக லக்ஷ்மணன் முதலியவர்களை வரவழைத்தார்.

நண்பர்களை அனுப்பிவிட்டு, பரத லக்ஷ்மண சத்துருக்னர்களை அழைத்து வரும்படி ராமன் துவாரபாலர்களை அனுப்பினார். அவர்கள் வந்து வாடிய முகத்தோடு ராமன் வீற்றிருப்பதைக் கண்டு கலக்கமுற்றனர். ராமன் தாரை தாரையாய்க் கண்ணீர் சொரிந்து தம்பிகளைக் கட்டிக்கொண்டு,—"நீங்கள் கொடுத்த ராஜ்யத்தை யன்றோ நான் ஆள்வது! நீங்கள் சாஸ்திரங்களில் மிக்க தேர்ச்சி பெற்றவர்கள். எனக்கு நேர்ந்த இவ்விஷயத்தை நீங்கள் ஒன்று சேர்ந்து ஆராய்ச்சி செய்ய வேண்டும்"—என்றார். ராமன் இவ்வாறு ஆரம்பிப்பது கண்டு,—'இவர் என் சொல்லப் போகிறாரோ!'—என்று லக்ஷ்மணன் முதலானோர் மிகவும் கவலையுற்றனர்.

45—ம் ஸர்கம்.

ராமன் தனக்கு நேர்ந்த அபவாதத்தைத் தம்பிகளுக் கறிவித்து ஸீதையை அப்புறப்படுத்தச் சொன்னார்.

ராமன் தம்பிகளை உட்கார வைத்துப் பின் வருமாறு சொன்னார்:—

1, ராமனை வண்ணான் நிந்தித்ததாக சில கதைக் கூத்தர்கள் சொல்லுவதற்கு இங்கு யாதொரு ஆதாரமுமில்லை. பத்திரனும் வண்ணான் என்று தெரியவில்லை.

"எனக்கு ராஜ்யத்தில் ஏற்பட்ட அபவாதம் என் மர்மத்தைத் துளைக்கிறது. நான் மஹிமை தங்கிய இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்தவன். ஸீதையும் ஜனகர்களுடைய ஸத்குலத்தில் பிறந்தவள். தண்டகாரண்யத்தில் ஸீதையை அபஹரித்துப் போன ராவணனை நான் கொன்றதும்,—இவளை எப்படி ராஜ்யத்துக் கொண்டு போவது என்று எனக்கே யோசனை உண்டாயிற்று. பரீக்ஷையாக அவளுக்கு அக்னிப் பிரவேசம் செய்து வைத்தேன். எல்லா தேவதைகளும் ஸீதை தோஷமற்றவளென்று கொண்டாடினார்கள். ஸீதை உத்தமி யென்று என் அந்தராத்மாவுக்கும் தெரியும். அக்னி பகவான் ஸீதையை எடுத்து வந்து என் கையிலொப்பித்த பிறகே அவளை அயோத்திக்கு அழைத்து வந்தேன். இப்பொழுது இம்மாதிரி அபவாதம் ஏற்பட்டது! அபகீர்த்தி யென்பது மஹாபாபம்! அபவாதத்தை யொழிக்க நான் உயிரை விடுவேன்; உங்களையும் விடுவேன்; இந்த ஸீதை எம்மாத்திரம்! லக்ஷ்மணா! நாளைக்காலையில் ஸீதையைத் தேரிலேற்றி கங்கையின் அக்கரையில் வால்மீகி ஆச்ரமத்தில் விட்டு வா. அவளும் கங்கைக் கரையிலுள்ள ஆச்ரமங்களைப் பார்க்க விரும்பினாள். இவ்விஷயத்தில் யாரும் மறு வார்த்தை சொல்லக் கூடாது."

46—ம் ஸர்க்கம்.

லக்ஷ்மணன் ஸீதையை கங்கைக் கரைக்கு அழைத்துக்கொண்டு போனான்.

மறு நாள் பொழுது விடிந்ததும் லக்ஷ்மணன் ஸுமந்திரனை அழைத்து ராமனுடைய கட்டளையைத் தெரிவித்து, தேரைப் பூட்டச் சொல்லி, ஸீதையினிடம் போய்,—'கங்கா தீரத்தைப் பார்க்க விரும்பிய உம்மை அங்கு அழைத்துப் போகுமாறு ராமன் செய்த கட்டளைப் படியே தேர் சித்தமாயிருக்கிறது'—என்று தெரிவித்தான். ஸீதை மிகவும் களிப்புற்று, ரிஷி பத்தினிகளுக்குக் கொடுப்பதற்காக ஏராளமான வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்; புறப்படும்போது சில அபசகுனங்கள் தோன்ற,—'ராமன் க்ஷேமமாயிருக்கிறாரா?' என்று லக்ஷ்மணனைக் கேட்டுத் தெரிந்து கொண்டு தேரிலேறினாள். லக்ஷ்மணனும் தேரிலேறிக் கொண்டான். அன்று ஸாயங்காலம் தேர் கோமதீ தீரம் சேர்ந்தது. மூவரும் அன்றிரவு கோமதீ தீரத்தில் தங்கி மறுநாள் பொழுது விடிந்ததும் புறப்பட்டு மத்தியானம்

கங்காதீரம் போய்ச் சேர்ந்தார்கள். உடனே லக்ஷ்மணன் துக்கம் தாங்காமல் வாய் விட்டுக் கதறினான். "இரண்டு நாளாக ராமனை விட்டுப் பிரிந்ததால் இப்படி துக்கம் மேலிட்டதா? எனக்கும் ராமனைப் பார்க்க ஆவல் அதிகமாகிறது. அக்கரை போய் ரிஷிகளை அடிபணிந்து விரைவில் திரும்புவோம்"—என்று ஸீதை ஸமாதானப் படுத்தினாள். லக்ஷ்மணன் சற்று தேர்தலடைந்து அக்கரை போக ஓடக்காரர்களை அழைத்து ஓடத்தை சித்தப்படுத்தினான்.

47—ம் ஸர்கம்.

லக்ஷ்மணன் ராமனுடைய கட்டளையை ஸீதைக்குத் தெரிவித்தான்.

ஸுமந்திரனைத் தேரோடு கரையிலேயே இருக்கச் சொல்லி, லக்ஷ்மணன் ஸீதையை ஓடத்திலேற்றிக் கொண்டு அக்கரை சேர்ந்து கைகூப்பி நின்று கண்ணீர் சொரிந்து,—

"இம்மாதிரியான காரியத்திலா நான் ஏவப்படுவது! எனக்கு இப்பொழுது மரணமே மேலாகும்"—என்றான்.

ஸீதை—எனக்கு யாதும் விளங்க வில்லையே! ராமன் ஸௌக்கியமாயிருக்கிறாரா? உண்மையைச் சொல்லுமாறு இப்பொழுது நான் கட்டளையிடுகிறேன்.

லக்ஷ்மணன்—உம்மால் தனக்கு நேரிட்ட அபவாதத்தை ராமன் ஸபையில் கேள்வியுற்று உள்ளே பிரவேசித்தார். அவர் சொன்ன வார்த்தைகளை உம்மிடம் சொல்லமுடியாது. தோஷமற்ற உம்மை ராமன் லோகாபவாதத்துக்கு பயந்தே பரித்தியாகம் செய்கிறார். கர்பகாலத்தில் நீர் விரும்பியவாறே, ஆச்ரமத்துக் கருகில் உம்மை விட்டு வரும்படி எனக்கு உத்தரவு. தசரதருக்கு பிராண ஸ்நேஹிதராயிருந்த வால்மீகி இங்கே யிருக்கிறார். ராமனை ஸதா தியானம் செய்து கொண்டு மஹரிஷியிடம் வஸித்திருப்பீராக. உமக்கு எல்லா மேன்மையும் உண்டாகும்.

48—ம் ஸர்கம்.

லக்ஷ்மணன் ஸீதையைக் காட்டில் விட்டுத் திரும்பினான்.

லக்ஷ்மணனுடைய வார்த்தையைக் கேட்டு ஸீதை மூர்ச்சித்து வீழ்ந்து மூர்ச்சை தெளிந்ததும் சொன்னதாவது:—

"லக்ஷ்மணா! நான் துன்பத்துக்காகவே ஜன்மமெடுத்தேன்! தோஷமில்லாதவளா யிருந்தும் ராஜனால் விடப்பட்ட நான் முன்பு மனைவியை விட்டு யாரைப் பிரித்தேனோ! ராமனோடு வஸித்த ஆச்ரமங்களில் இப்பொழுது ராமனில்லாமல் எப்படி யிருப்பது! யாது காரணமாய் என்னை ராமன் தள்ளினாரென்று சொல்லுவேன்! இப்பொழுதே கங்கையில் வீழ்ந்து உயிரை மாய்ப்பது நலமாகும். அப்படிச் செய்வதால், என் வயிற்றிலடக்கம் செய்த ராஜவம்ச மன்றோ நசிக்கும். லக்ஷ்மணா! நீர் உம்முடைய கட்டளையை நிறை வேற்றும். என்னாலுண்டான அபகீர்த்திக்கு பயந்த ராமனை அபகீர்த்தியினின்றும் விடுவிக்க நானே கடமைப் பட்டிருக்கிறேன். என் சரீரத்தை நான் ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை."

லக்ஷ்மணன் யாதொன்றும் சொல்ல வாயெழும்பாமல் ஸீதை யை நமஸ்காரம் செய்து ஓடமேறி அக்கரை போய் தேரிலேறிப் புறப்பட்டான். ஸீதை தேர் போவதைப் பார்த்த வண்ணமாயும் லக்ஷ்மணன் ஸீதையை திரும்பித் திரும்பிப் பார்த்தவண்ணமாயு மிருந்தார்கள்.

49—ம் ஸர்கம்.

வால்மீகி ஸீதையைத் தம்முடைய ஆச்ரமத்துக்கு அழைத்துக் கொண்டு போனார்.

ஸீதை அழுது கொண்டிருந்ததுகண்ட சில ரிஷி குமாரர்கள் விரைவாய் வால்மீகியிடம் போய்—"யாரோ ஒரு அழகி கங்கைக் கரையில் புலம்பிக் கொண்டிருக்கிறாள்."—என்று தெரிவித்தனர். தபஸ்ஸினால் ஞானக்கண் திறக்கப்பெற்ற முனிவர் யாவற்றையும் புத்தியினாலேயே நிச்சயித்து, ஸீதையிடம் வந்து—"அம்மா! நீ தசரதருக்கு மறுமகளாயும், ராமனுக்கு மனைவியாயும், ஜனகருக்குப் புதல்வியாயுமுள்ள ஸீதை. நீ வரும்போதே உன்னை நான் அறி வேன். காரணமனைத்தும் எனக்குத் தெரியும். திரிலோகத்திலும் நடப்பன வனைத்தையும் அறிபவன் நான்.[1] உன்னிடம் யாதொரு குற்றமும் கிடையாது. என்னிடத்தில் நீ கவலையற்றிருக்கலாம்.

---

1. ஸீதையை ராமன் காட்டில் விடுவதற்கு முன்னரே வால்மீகி ராமாயணம் முழுவதையும் பிரமமாவின் அனுக்ரஹத்தினால் எழுதியவரா தலால் இப்பொழுது நேர்ந்த ஸீதாபரித்தியாகம் முதலியவை அவருக்குத் தெரிந்தவைகளாயின.

என் ஆச்ரமத்துக்கருகில் தாபஸிகள் இருக்கிறார்கள்."—என்று சொல்லி ஸீதையை அழைத்துச்சென்று தாபஸிகளிடம் ஒப்பித்தார்.

50—ம் ஸர்கம்.

ராமன் ஸீதையையும் ஸஹோதரரையும் பரித்தியாகம் செய்து விடுவார்—என்று பூர்வம் துர்வாஸர் சொன்னதை ஸுமந்திரன் லக்ஷ்மணனுக்குத் தெரிவித்தான்.

வால்மீகி ஸீதையைத் தம்முடைய ஆச்ரமத்துக்கு அழைத்துச் சென்றதும், பட்ட துன்பமெல்லாம் போதாமல் ஸீதையைப் பரித்தியாகம் செய்யும் துன்பமும் ராமனுக்கு நேரிட்டதுபற்றி லக்ஷ்மணன் ஸுமந்திரனிடம் வெகுவாய் துக்கித்தான். அப்பொழுது—"இவ் விஷயத்தில் துக்கப்படவேண்டியதில்லை. ராமன் ஸீதையையும் ஸஹோதரர்களான உங்களையும்கூட பரித்தியாகம் செய்யப்போகிறார். இது முன்னதாகவே தெரிந்த விஷயம். வஸிஷ்டருடைய முன்னிலையில தசரதருக்கு துர்வாஸர் சொன்ன ரஹஸ்யம் இது. இதை ஒருவருக்கும் சொல்லவேண்டாமென்று தசரதர் கட்டளையிட்டார். ஆயினும், லக்ஷ்மணா! உனக்குச் சொல்லுகிறேன். நீ ஒருவருக்கும் சொல்லக்கூடாது."—என்றான் ஸுமந்திரன்.

51—ம் ஸர்கம்.

விஷ்ணுவுக்கு பத்னீவியோகம் நேரிடுமாறு ப்ருகு சபித்ததை துர்வாஸர் தசரதனுக்கு விவரித்த பிரகாரம் ஸுமந்திரன் லக்ஷ்மணனுக் கறிவித்தான்.

துர்வாஸர் சொன்ன ரஹஸ்யத்தைச் சொல்லுமாறு லக்ஷ்மணன் வற்புறுத்தலும் ஸுமந்திரன் பின்வருமாறு சொல்லலானான்:—

"அத்திரி மஹரிஷியின் புத்திரரான துர்வாஸர் சாதுர்மாஸ்ய நியமத்துக்காக வஸிஷ்டாச்ரமத்தில் வஸித்துக் கொண்டிருந்தபோது தசரதர் ஒருநாள் வஸிஷ்டரைப் பார்க்கப் போனார். மத்தியானம் எல்லோரும் விநோதமாய்ப் பேசிக் கொண்டிருக்கையில், தசரதர் துர்வாஸரைப் பார்த்து—'என் வம்சம் எவ்வளவு தூரம் செல்லும்? ராமனுக்கும் மற்றைய பிள்ளைகளுக்கும்[1] ஆயுஸ் எவ்வளவு? ராமனுக்குக் குழந்தைகள் எத்தனை? அவர்களுக்கு எவ்வளவு ஆயுஸ்?'—என்று கேட்டார்."

துர்வாஸர்—

முன்பு தேவாஸுர யுத்தத்தில் தேவர்களால் விரட்டப்பட்ட

1. ராமன் பிறந்த பிறகு தசரதன் துர்வாஸரைக் கேட்ட கேள்வி இது.

ராக்ஷஸர்கள் ப்ருகுபத்தினியை சரணமடைந்தபோது அவள் அவர்களுக்குத் தன்னுடைய ஆச்ரமத்தில் இடம் கொடுத்து ரக்ஷித்தாள். விஷ்ணு கோபம் கொண்டு சக்கராயுதத்தினால் அவளுடைய கழுத்தை அறுத்து விட்டார். 'என் பத்தினியை வதம் செய்ததால் நீ மனுஷ்யலோகத்தில் பிறந்து பத்னீ வியோகத்தை[1] அனுபவிப்பாய்' என்று விஷ்ணுவை சபித்தார் ப்ருகு மஹர்ஷி ஆயினும், ப்ருகு மஹர்ஷி பச்சாத்தாபப்பட்டு விஷ்ணுவை சாந்தப்படுத்த பண்ணினபோது—'லோகஹிதமாய்க் காரியம் செய்யும் எனக்கு இந்த சாபம் உபகாரமாகும்'—என்று சொன்னார் விஷ்ணு. தசரதா! இப்படி சாபம் பெற்றதால், விஷ்ணுவே உனக்குப் பிள்ளையாய்ப் பிறந்தார். ப்ருகு சாபத்தின்படியே ராமனுக்கு எல்லா அனுபவமும் நேரிடும். ராமன் பதினோராயிரம் வருஷம் ராஜ்யபாலனம் செய்து பிரம்மலோகம் சேருவான். ஸீதை அயோத்திக்கு வெளியே இரண்டு பிள்ளைகளைப் பெறுவாள். தன்னிரண்டு பிள்ளைகளுக்கும் ராமனே பட்டம் கட்டிவைப்பான்.

"இன்னும் அந்த வம்சத்தில் நடக்கும் மற்றைய விவரங்களையும்[2] சொன்னார் துர்வாஸர். அப்போது நானும் கூட இருந்தேன். ஸீதைக்காவது ராமனுக்காவது கவலைப்பட்டு பயனில்லையாகையால், லக்ஷ்மணா! நீ தைரியமாயிரு."—என்றான் ஸுமந்திரன்.

லக்ஷ்மணனும் ஸுமந்திரனும் வழியில் இப்படிப் பேசிக் கொண்டே போகையில், ஸூரியாஸ்தமனமாயிற்று. இருவரும் ராத்திரி கேசினியில் தங்கினார்கள்.

52—ம் ஸர்கம்.

ஸீதையை விட்டு வந்த செய்தியை லக்ஷ்மணன் ராமனுக்கறிவித்தான்.

லக்ஷ்மணன் கேசினியில் இராத்தங்கி மறுநாள் உதயம் புறப்பட்டு மத்தியானம் அயோத்தி போய்ச் சேர்ந்து, ராமனைப் பார்த்து

---

1. ராமன் பதினாயிரம் வருஷம் ஸீதையோடிருந்து ஆயிரம் வருஷம் பிரிந்திருந்தால் அது ப்ருகு சாபத்தினால் ஏற்பட்ட பத்தினி வியோகமல்ல. பட்டாபிஷேகமானவுடன் ஸீதையைப் பரித்யாகம் செய்து 11 ஆயிரம் வருஷம் ராமன் தனியாயிருந்தார் என்ற பக்ஷம் தான் ப்ருகு சாபத்துக்கு சேரும்.

2. ராமனுக்கு பத்னீவியோகம் மட்டும் உண்டாம்படி ப்ருகு சபித்தார். ஸஹோதரர்களையும் ராமன் விடுவதாக வருங்கால விருத்தாந்தமறிந்த துர்வாஸரே சொல்லியிருக்க வேண்டும்.

அடிபணிந்து—ஸீதையை வால்மீகி ஆச்ரமத்தில் விட்டாயிற்றென்று தெரிவித்தான். அப்பொழுது ராமன் மிகவும் சோகித்திருந்தது கண்டு,—"செல்வம் விரயத்திலும், உயர்த்தி வீழ்ச்சியிலும், சேர்க்கை பிரிவிலும், உயிர் மரணத்திலும் முடியும். ஆதலால், மக்கள், பெண்டிர், செல்வம், நண்பர் ஒன்றிலும் பற்றுதலே கூடாது. உலகனைத்தையும் உம்மையும் அடக்கவல்ல உமக்கு இந்த சோகத்தை அடக்குவதரிதல்ல. சோகத்தை அடக்காவிடில், ஸீதையை வைத்திருந்த அபவாதம் அவளுக்காக சோகிப்பதாலும் உண்டாகும்."—என்றான் லக்ஷ்மணன்.

லக்ஷ்மணன் தன் கட்டளையின்படியே காரியம் முடித்து வந்து இவ்வாறு தைரியமும் சொல்லுவதுபற்றி ராமன் ஸந்தோஷித்து சோகத்தை அகற்றினார்.

53—ம் ஸர்கம்.

வந்தவர்களைக் காக்கவைக்காமல் ராஜ்யகாரியம் பார்க்க வேண்டுமென்று ராமன் லக்ஷ்மணனுக்கு ந்ருகோபாக்கியான மூலமாய் எடுத்துரைத்தார்.

லக்ஷ்மணன் சொன்ன தைரியத்தினால் ராமன் மிகவும் மனம் மகிழ்ந்து பின்வருமாறு சொன்னார்:—

"நாலு நாளாய்[1] ராஜ்ய காரியம் பாராமல் மனம் மிகவும் புண் படுகிறது. வெளியே காரியமாய்க் காத்திருப்போர் யாராயினும் உள்ளே அழை. தினந்தோறும் ராஜ்ய காரியம் பாராத ராஜன் கோரமான நரகத்தை அடைவான்.

"முன்பு ந்ருகன் என்ற ராஜன் புஷ்கரம் முதலிய புண்ணிய ஸ்தலங்களில் கோடிக்கணக்காய் கோதானம் செய்தான். அக்னி ஹோத்திரம் தவறாமலும் உஞ்சவிருத்தியாய் ஜீவித்துக் கொண்டிருந்த ஒரு பிராம்மணனுக்குக் கிடைத்த பசு கன்றோடு காணாமற் போயிற்று. பிராமணன் மாட்டைத் தேடித் திரிந்து நெடுநாளுக் கப்பால் கனகலம் என்ற ஊரில் ஓர் பிராமணன் வீட்டில் கண்டு பிடித்தான். அவன் செல்வமாய் வைத்த பெயரால் மாட்டை

1. நெடுநாள் ராஜ்யபாலனம் பண்ணிப் பிறகு ராமன் ஸீதையைப் பரித்தியாகம் செய்திருந்தால் இந்த ஸர்கத்தில் காணும் விஷயம் ஸீதா பரித்தியாகத்துக்கு முந்தியிருக்கவேண்டும். இந்த ஸர்கம் பின்னால் இருப்பது கொண்டே ஸீதா பரித்தியாகத்துக்குப் பிறகே ராமன் ராஜ்ய பரிபாலனத்தை ஆரம்பித்ததாக தீர்மானிக்கலாம்.

அழைத்ததும் அது ஓடிவந்தது. இத்தனை நாள் அதை வைத்துக் காப்பாற்றிய பிராம்மணன்—அது தன்னுடையது; தனக்கு ந்ருக மஹாராஜன் கொடுத்தது—என்று சொல்ல, அதனை இழந்த பிராம்மணனும் தன்னுடையதென்று சொல்ல, இருவரும் விவஹாரம் தீர்த்துக் கொள்ள ந்ருக மஹாராஜனிடம் போனார்கள்; ராஜத்வாரத்தில் நெடுநாள் இராப்பகலாய்க் காத்திருந்தும் ராஜதரிசனம் கிடைக்கவில்லை. இரண்டு பிராம்மணர்களும் கோபம் கொண்டு 'நெடுநாள் நீ கரட்டோணாகக் கிடப்பாய். வாஸுதேவன் பூலோகத்தில் அவதரிக்கும் போது உன்னை விடுவிப்பார்![1] பூபாரத்தைக் குறைக்க நர நாராயணர் கலியுகம் ஸமீபித்த போது அவதரிக்கப்போகிறார்கள்'—என்று ந்ருகனை சபித்து மாட்டை வேறொரு பிராம்மணனுக்கு தானம் செய்து போயினர். ந்ருக மஹாராஜன் இன்னும் கடும் சாபத்தை அனுபவிக்கிறான். காரியார்த்திகளின் கொடுமை அரசர்களுக்கு ஆபத்தாகும். லக்ஷ்மணா! சீக்கிரம் போய் வெளியே காரியமாய் வந்தவர்களைப் பார்."

54—ம் ஸர்கம். ந்ருகன் சாபத்தை அனுபவித்த விதம்.

லக்ஷ்மணன்—

சாபம் பெற்றவுடன் ந்ருகன் என்ன செய்தான்?

ராமன்—.

பிராம்மணர்கள் சாபம் கொடுத்துப் போனதும் ந்ருகன் மந்திரிகளை அழைத்து,—'பர்வத நாரதர்கள் இருவரும் என்னை சபித்துப் போகிறார்கள்.[2] என் பிள்ளை வஸுவுக்கு பட்டம் கட்டுங்கள். நான சாபத்தின்படியே கரட்டோணாக மாறினாலும் கோடை குளிர் இவற்றுக்குத் தக்கவாறு ஸுகமாயிருக்கும்படி எனக்கு தனித்தனி பள்ளங்களை சித்தம் செய்யுங்கள்' என்று கட்டளையிட்டு, பிள்ளையை அழைத்து,—'உன் கண் முன்பாக எனக்கு நேரிட்ட அபவாதத்தைப் பார். தர்மமாக ஜனங்களைப் பரிபாலனம் செய்'—என்று சொல்லி பள்ளத்தில பிரவேசித்தான்.

---

1. ஸ்ரீபாகவதம் 10ம் ஸ்க. 64ம் அத்தியாயத்தில் கிருஷ்ணனால் ந்ருகனுக்கு சாபவிமோசனம் ஏற்படுவது காண்க. ந்ருகனுக்கு சாபம் ஏற்பட்ட விவரம் ஸ்ரீபாகவதத்தில் வேறு விதமாயிருக்கிறது.

2. இந்த விவரம் ந்ருகனுக்கு எப்படித்தெரிந்ததென்று இங்கு புலப்படவில்லை.

55—ம் ஸர்கம்.

வஸிஷ்டர் நிமி சக்ரவர்த்தியைப் பார்க்கக் காத்திருந்தும் அவன் வராததால், அவன் சரீரத்தை இழந்து திரியும்படி சபித்தார். நிமியும் அப்படியே வஸிஷ்டரை சபித்தான்.

"லக்ஷ்மணா! இன்னொரு கதை சொல்லுகிறேன்; கேள். இக்ஷ்வாகு வம்சத்துப் பனிரண்டாம்[1] புதல்வனான நிமி சக்ரவர்த்தி கௌதமாச்ரமத்துக் கருகே வைஜயந்தம் என்னுமோர் பட்டணம் அமைத்து தன் பிதாவுக்குப் பிரியமாக யாகம் செய்ய ஆரம்பித்தான். பிதாவான இக்ஷ்வாகுவையும், அத்திரி, ஆங்கிரஸர், ப்ருகு—முதலிய ரிஷிகளையும் அழைத்து, யாகத்துக்கு புரோஹிதரா யிருக்கும்படி வஸிஷ்டரை வரித்தபோது,—'இந்திரனுடைய யாகத்தில் வரிக்கப்பட்ட நான் இந்திர யாகத்தை முடித்து வருமளவும் காத்திரு'—என்று சொல்லி வஸிஷ்டர் இந்திர லோகத்துக்குப் போய் விட்டார். நிமி தன் பட்டணத்துக் கருகே ஹிமாலயத்தி னடிவாரத்தில் கௌதமரைக் கொண்டு யாகம் ஆரம்பித்து 500 வருஷம் தீக்ஷையோடிருந்தான். இந்திரயாகம் முடிந்தவுடன் இச் செய்தி யறிந்த வஸிஷ்டர் கோபம் கொண்டு நிமியைப் பார்ப்பதற் காக ஒரு முஹூர்த்த நேரம் காத்திருந்தும், நிமி நித்திராபரவசமா யிருந்ததால், அவனுடைய சரீரம் சைதன்யமில்லாமற் போக வேண்டும்—என்று சபித்தார். நிமி தூங்கி யெழுந்து வஸிஷ்டரை யும் இம்மாதிரியே சபித்தான். ஒருவருக் கொருவர் இட்ட சாபத் தினால் இருவரும் சரீரத்தை இழந்தனர்."

56—ம் ஸர்கம்.

நிமியின் சாபத்தினால் சரீரமிழந்த வஸிஷ்டர் சரீரம் பெறு வதற்கு முயற்சி செய்தார்.

லக்ஷ்மணன்—

சரீரத்தை இழந்த நிமி-வஸிஷ்டர்களுக்கு மறுபடியும் சரீரம் எப்படி கிடைத்தது?

ராமன்

அவ்விருவரும் சாபம் பெற்று சரீரத்தை இழந்து வாயு ரூபமாய்

---

1. நிமி இக்ஷ்வாகுவின் பிள்ளை யென்று இந்த ஸர்கத்திலேயே இரண்டு மூன்று இடங்களில் தெரிகிறது. நிமியின் பிள்ளை மிதியிலிருந்து ஜனக வம்சம் என்றும் ஏற்படுகிறது. ஜனக வம்சமும் இக்ஷ்வாகு வம்சமும் ஒன்றாயிருக்கையில் ராமாதிகளுக்கும் ஜனக வம்சத்துப் பெண் களுக்கும் எப்படி விவாஹம்?—என்று ஆராய்ச்சி செய்யவும்.

மாறினர். அவர்களில் வஸிஷ்டர் பிரம்மாவிடம் போய்,—சரீரமில்லாமல் ஒரு காரியமும் செய்ய முடியவில்லையாகையால், சரீரம் தந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க,—'நீ அயோனிஜனுயேயிருக்கவேண்டியதால் மித்ரா[1] வருணர்களின் தேஜஸ்ஸில் பிரவேசி' என்றார் பிரம்மா. வஸிஷ்டர் வருணனிடம் போனுர். அப்போது ஸூரியன் வருணனிடத்தில் பிரவேசித்திருந்தான். அச்சமயம் அங்கு வந்த ஊர்வசியைக் கண்டு வருணன் காமவிடாய் கொள்ள,—'என்னை முதலில் ஸூரியன் விரும்பியதால் இந்த சரீரம் ஸூரியனுடையதாயிற்று. ஆயினும், என் மனம் உம்மை நாடுகிறது' என்று சொல்லி ஊர்வசி மறுக்க,—அடங்காத காமம் கொண்ட வருணன் தன் சக்தியை ஓர் குடத்திலிட்டு வைத்தான். பிறகு ஊர்வசி ஸூரியனிடம்[2] போனுள். தான் விரும்பிய ஊர்வசி வருணனை நாடியதால் ஸூரியன் கோபம் கொண்டு—'மனுஷ்ய ஜன்மமாய் கொஞ்சநாள் பூலோகத்திலிருந்து புதனுடைய புத்திரனும் புரூரவஸுக்கு[3] மனைவியாயிரு என்று ஊர்வசியை சபித்தான்[4]. ஊர்வசி புரூரவஸ்ஸிடம் வந்திருந்து ஆயுஸ் என்ற பிள்ளையைப் பெற்று சாபம் முடிந்ததும் இந்திரலோகம் போய்ச் சேர்ந்தாள்.

இந்திரன் வ்ருத்திராஸுரன் மீது வஜ்ராயுதத்தை பிரயோகித்து பதவியை இழந்ததால், ஆயுஸ்ஸின் பிள்ளை நஹுஷன் நூறுயிரம் வருஷம் இந்திரனுயிருந்தான்.

57—ம் ஸர்கம். நிமி வஸிஷ்டர்கள் சரீரம் பெற்ற விவரம்.

லக்ஷ்மணன்—

இருவருக்கும் சரீரம் எப்படி கிடைத்தது?

---

1. ஸூரிய வருணர்கள்.

2. ஸூரியன் வருண சரீரத்தை விட்டுப் பிரிந்த பிறகு ஊர்வசி ஸூரியனிடம் போயிருக்கக் கூடுமென்று தோன்றுகிறது. மூலத்திலும் வியாக்கியானங்களாலும் இந்த ஸர்கத்திலுள்ள கதை சரியாய் விளங்கவில்லை.

3. நிமி சக்ரவர்த்தியின் காலத்தில் புரூரவஸ் ராஜனுயிருந்தான்—என்று இந்தக் கதையால் தெரிகிறது.

4. ஊர்வசி பரதநாட்யத்தில் சரியாய் நடிக்காததால் பரதமுனியின் சாபத்தினுல் புரூரவஸஸுக்கு மனைவியாயிருந்தாளென்று காளிதாஸகவியின் விக்ரமோர்வசீய நாடகக் கதை. ஸ்ரீபாகவதம் 9ம் ஸ்க 14ம் அத்தியாயக் கதையை அனுஸரித்திருக்கிறது விக்ரமோர்வசீயம். இந்த ஸர்கத்தில் ஊர்வசிக்கு வந்த சாபம் பாகவதத்துக்கு மாறுதலாயிருக்கிறது.

ராமன்—

மித்ராவருணர்களின் தேஜஸ் வைக்கப்பெற்ற குடத்திலிருந்து முதலில் அகஸ்தியரும் பிறகு வஸிஷ்டரும் உண்டாயினர். வஸிஷ்டர் தோன்றியவுடன் இக்ஷ்வாகு அவரைத் தனக்கு புரோஹிதரா யிருக்கும்படி வரித்தான்.[1]

நிமி தேஹத்தை இழந்ததும் பிராம்மணர்கள் அந்த தேஹத்தைப் பாது காத்தனர். யாகத்தின் முடிவில் ப்ருகு மஹர்ஷி ஸந்தோஷப்பட்டு நிமிக்கு தேஹத்தைக் கொண்டு வந்து கொடுப்பதாய்ச் சொன்னர். தேவர்களும் நிமியின் யாகத்தினுல் ஸந்தோஷித்து,—"உன்னுடைய சைதன்யத்தை எங்கு வைப்ப" தென்று கேட்க, "பிராணிகளின் கண்களில் நான் வஸிக்கிறேன்" என்று சொன்னுன் நிமி. தேவர்களும் அப்படியே ஒப்புக்கொண்டு நிமியின் சைதன்யம் பிராணிகளின் கண்ணிமையில் தங்குமாறும், அதனுல் இனி பிராணிகள் இமை கொட்டுமென்றும் சொல்லிப் போயினர். ரிஷிகள் நிமி சரீரத்தில் அரணிவைத்து மதிக்கையில் ஒரு புத்திரன் உண்டானுன். மதித்தபோது உண்டானதால் அவனுக்கு மிதி என்றும், விதேஹனை நிமிக்குப் பிறந்ததால் வைதேஹன் என்றும் பெயராயிற்று. மிதியே மைதிலன் என்றும், ஜனனமானதுபற்றி ஜனகன் என்றும் சொல்லப் படுகிறுன்.[2]

58—ம் ஸர்கம்.

நிமி சக்ரவர்த்தி பொறுமையில்லா திருந்ததற்கு லக்ஷ்மணன் வியப்புற்றது கண்டு சுக்ராசாரியரால் சபிக்கப்பட்ட யயாதி பொறுமை யோடிருந்த கதையைச் சொன்னர் ராமன்.

லக்ஷ்மணன்—

நிமி யாகத்துக்காக தீக்ஷையோடிருக்கிற ஸமயத்தில் கூட மஹாத்மாவான வஸிஷ்டரிடம் க்ஷமையில்லா திருந்த தென்னே!

ராமன்—

யயாதி பொறுத்தது போல எல்லோரும் பொறுப்பார்களா?

---

1. இது முதல் தான் வஸிஷ்டர் இக்ஷ்வாகு வம்சத்துக்குப் புரோஹிதரானுர் என்று ஏற்படுகிறது.

2. மூன்று ஸர்கமாய் சொல்லப்படும் நிமி சக்ரவர்த்தி கதை ஸ்ரீ பாகவதம் 9ம் ஸ்க. 13ம் அத்தியாயத்தில் சுருக்கமாய் சொல்லப்பட்டிருக்கிறது. நிமியே தனக்கு சரீரம் வேண்டியதில்லையென்று, தேவர்களிடம் சொன்னதாக ஸ்ரீ பாகவதத்தினுல் தெரிகிறது.

நஹுஷ புத்திரனான யயாதிக்கு இரண்டு மனைவிகளுள் விருஷ பர்வனுடைய பெண் சர்மிஷ்டையே மிகவும் பிரியமாயிருந்தாள். சுக்ராசாரியருடைய பெண் தேவயானி பிரியமாயில்லை. சர்மிஷ்டையின் பிள்ளை பூருவிடம் யயாதி பிரியமாயிருந்ததுபற்றி தேவயானியும் அவளுடைய பிள்ளை யதுவும் வெகுவாய் துக்கப்பட, சுக்ராசாரியர் வந்து யயாதியைக் 'கிழவனாகக் கடவாய்'—என்று சபித்தார்.

59—ம் ஸர்கம்.

யயாதி கிழட்டுத்தனத்தைப் பூருவிடம் வைத்து அவனுடைய யௌவனத்தை வாங்கிக்கொண்டு நெடுநாள் ஸுகித்திருந்து, பூருவுக்கு ராஜ்யத்தைக் கொடுத்து, யதுவை சபித்தான்.

ராமன்—

சுக்ராசாரியர் சபித்ததும் யயாதி தேவயானியின் பிள்ளை யதுவை யழைத்து தன்னுடைய கிழட்டுத்தனத்தை வாங்கிக் கொண்டு அவனுடைய யௌவனத்தைச் சில நாள் கொடுத்து வைக்கும்படி கேட்க, யது மறுத்தான்; பூருவைக் கேட்டதும் அவன் இசைந்தான். யயாதி பூருவின் யௌவனத்தைக்கொண்டு அநேகம் ஸுகங்களை அனுபவித்து, கடைசியாய்த் தன் கிழட்டுத் தனத்தை வாங்கிக் கொண்டு, பூருவுக்கு பட்டம் கட்டி, யாதுதானர்களான ராக்ஷஸர்களைப் பிறப்பிக்குமாறு யதுவை சபித்து, காலதர்ம மடைந்தான்.

பூரு காசி தேசத்தில் பிரதிஷ்டா நகரத்தில் ராஜ்யபாலனம் செய்தான். யது ராஜவம்சத்தி லிருந்து பஹிஷ்காரம் செய்யப்பட்டு க்ரௌஞ்ச வனத்தில் ஆயிரக்கணக்கான யாதுதானர்களைப் பிறப்பித்தனன். லக்ஷ்மணா! யயாதி பொறுத்தது போல நிமி பொறுத்தானில்லை. நாம் வந்தவர்களுக்கு தரிசனம் கொடுத்துக் கொண்டு யாதொரு தோஷமு மில்லா திருப்போமாக.

இப்படி பேசிக் கொண்டிருக்கையில் இரவு வந்தது.

[அதிக ஸர்கம்—1.

அரண்மனை வாயிலில் காரியமாக வந்திருந்த ஒரு நாயை ராமன் உள்ளே அனுமதித்தார்.

மறுநாள் உதயம் ராமன் அனுஷ்டானம் முடித்து ஸபாமண்டபம் வந்து—"காரியார்த்திகள் யாரேனு முண்டோ பார்"—என்று சொல்லி யனுப்ப, லக்ஷ்மணன் வெளியே வந்து பார்த்து—"காரியார்த்திகள்

வரலாம்" என்று தானே உரக்கக் கூவினன். ராமராஜ்யத்தில் ராஜனிடம் போய்த் தெரிவிக்க வேண்டிய குறையே இல்லாமல் எல்லாம் நிறைந்து ஸுகமாயிருந்ததால், காரியார்த்தி யாரும் வரவில்லை. இதை ராமனிடம் தெரிவித்ததும் அவர் மீண்டும் போய்ப் பார்க்கச் சொன்னர். லக்ஷ்மணன் வந்து பார்த்தபோது ஒரு நாய் மட்டும் அழுது கொண்டிருந்தது. அதனை வந்த காரியம் யாதென்று கேட்க,—"ராமனிடம் ஒரு காரியமாய் வந்தேன். நீச ஜாதியிற் பிறந்த நான் உள்ளே வருவதெப்படி?"—என்று நாய் சொல்ல, ராமனிடம் போய்த் தெரிவித்தான் லக்ஷ்மணன். ராமன் நாயை உள்ளே வரவழைத்தார்.

அதிக ஸர்கம்—2.

தன்னை யடித்த ஸர்வார்த்த ஸித்தன் என்ற பிராம்மணனுக்கு நாய் கோயில் மணியம் வேலையை ராமன் மூலமாய் வாங்கிக் கொடுத்தது.

நாய் காயம் பட்ட தலையோடு உள்ளே போய் தன்னை ஸர்வார்த்த ஸித்தன் என்ற பிராம்மணன் அடித்ததாகச் சொல்லிற்று. ராமன் ஸர்வார்த்தஸித்தனை வரவழைத்துக் கேட்டதும்,—"வறுமையின் கொடுமையால் நான் ஆங்காங்கு பிச்சையெடுத்து வருந்தும்போது இந்த நாய் நான் போகுமிடமெல்லாம் என் வழியை மறித்துக் கொண்டே யிருந்தது; எத்தனை தரம் விரட்டியும் போகவில்லை. பசியின் கொடுமையால் கோபம் மிகுந்து இதை அடித்துவிட்டேன்." என்று அவன் தெரிவித்தான்.

ராமன் ரிஷிகளை வரவழைத்து பிராம்மணனுக்கு என்ன தண்டனை விதிப்பதென்று கேட்க, அவர்கள் பிராம்மணனை வதம் செய்ய சாஸ்திர மில்லையே யென்று யோசிக்கையில்,—நாய் அவனுக்குக் கோயில் மணியம் கொடுக்கும்படி சொல்லிற்று. ராமன் பிராம்மணனைக் கோயில் மணியத்தில் வைத்தார். "குற்றம் செய்தவனை தண்டியாமல் இப்படி ஆதரிப்பதென்னே?"—என்று மந்திரிகள் கேட்க,—"உங்களுக்கு நியாயதத்வம் தெரியாது. இந்த நாய்க்குத் தெரியும்." என்று சொல்லி ராமன் நாயைக் கேட்டார். "தேவபூஜையில் பங்கு கொள்ளும் கோயில் மணியத்திலிருந்துதான் இந்த ஸ்திதிக்கு நான் வந்தேன்."—என்று நாய் சொல்லிப் போயிற்று.

அதிக ஸர்கம்—3.

க்ருத்ரோலூக உபாக்யானம்—கோட்டான் கழுகு கதை. கோட்டானுடைய கூட்டைக் கழுகு ஆக்ரமித்து இரண்டும் சண்டையிட்டு ராமனிடம் தெரிவிக்க, கூடு கோட்டானுடையதென்று நிர்ணயித்து ராமன் கழுகை தண்டித்தார்.

ஒரு காட்டில் ஒரு கோட்டான் கூடுகட்டிக் குடியிருந்தது. அந்தக் கூட்டை ஒரு கழுகு ஆக்ரமித்துக் கொண்டதால் இரண்டும் சண்டையிட்டு வியவஹாரம் தீர்த்துக் கொள்ள ராமனிடம் வந்தன. "எத்தனை வருஷ மாய் இந்தக் கூடு உன்னுடைய"—தென்று ராமன் கழுகைக் கேட்டார். "பூமியில் மனுஷ்யர்கள் உண்டானது முதல் இந்தக் கூடு என் வசம் இருக்கிற" தென்று கழுகு சொல்லிற்று. "பூமியில் மரங்களுண்டானது முதல் கூடு என்னிடமிருக்கிற" தென்றது கோட்டான்.

மனுஷ்யர்களுக்கு முன்னரே மரங்களுண்டானதால், கூடு கோட்டா னுடைய அனுபவத்திலேயே நீண்டகாலமாயிருப்பதாய்க் கண்டு ராமன் கழுகை தண்டிக்கலானார். அப்பொழுது ஓர் அசரீரி வாக்கு உண்டாகி— "இந்தக் கழுகைக் கொல்லவேண்டாம். இது பூர்வம் பிரம்மதத்தன் என்ற ராஜனாயிருந்தது. அதிதியாக வந்த கௌதமருக்கு அன்னமிடுகையில் அன்னத்தில் மாமிஸம் இருந்ததால் மாமிஸம் தின்றும் கழுகாயிருக்கும்படி சபித்து, ராமனுடைய கைபட்டு சாபம் நீங்குமென்றும் விதித்தார் ரிஷி" என்று சொல்லிற்று. அப்படியே ராமன் கழுகைத் தொட்டதும் கழுகுக்கு மானிடவுருவம் உண்டாயிற்று.*]

60—ம் ஸர்கம்.

யமுனாதீரத்தில் வஸிக்கும் ரிஷிகள் ராமனைப் பார்க்க வந்தார் கள்.

ராம லக்ஷ்மணர்கள் இப்படி தினந்தோறும் பேசிக் கொண்

---

* 17ம் பக்கத்தில் சொன்ன அதிக ஸர்க ஆராய்ச்சி சுருக்கமாய்ப் பின் வருமாறு:—

அதிக ஸர்கம் பதிமூன்றும் வால்மீகி எழுதியதல்ல. வால்மீகி எழுதிய தாயிருந்தால் 36-ம் ஸர்கத்திலேயே ராமனிடம் விடைபெற்றுச் சென்ற அகஸ்தியர் முதலானோர் மீண்டும் 37-ம் ஸர்கம் முடிந்த பிறகு 5 ஸர்கம் வரையில் ராமனுக்குக் கதை சொல்ல முடியாது. இரண்டாவதான இந்த 5 அதிக ஸர்கங்களையும் 36-ம் ஸர்கம் முடிந்தவுடனேயே வைத்துப் பார்த்தாலும், ராமன் அகஸ்தியரை உபசரித்தனுப்பியதாயுள்ள 36-ம் ஸர்கம் கடைசீ வாக்கியப்படி புறப்பட்டுப்போன அகஸ்தியர் மறுபடியும் கதை சொன்னார் என்பது சேரவில்லை. ராம ராவணர்களுடைய சரித் திரத்தைச் சொல்லும் மற்றைய புராணங்களிலுள்ளவைகளாயிருக்கக் கூடும் இந்த அதிக ஸர்கங்கள். இவை இந்த ஸந்தர்பத்துக்கு சேரு மென்று நினைத்து இங்கு எடுத்து சேர்க்கப்பட்டவை—என்று மட்டும் தீர் மானிக்கலாம்.

ஷ்ருக்கையில் வஸந்த ருது வந்தது.[1] ஒரு நாள் ராமன் அனுஷ்டானம் முடித்து காரியார்த்திகளுக்காக வெளியே வந்தபோது, பார்கவச்யவனரை முன்னிட்டுக் கொண்டு நூற்றுக்கு அதிகமான ரிஷிகள் வெளியே காத்திருப்பதாய்த் தெரிவித்தான் ஸுமந்திரன். ராமன் அவர்களை உபசரித்து, வந்த காரியம் யாதாயினும் நிறைவேற்றுவதாய்ப் பிரதிக்ஞை செய்தார். "எங்கள் காரியம் மிகப் பெரிதாகையால் அநேகம் அரசர்கள் இப்படிப் பிரதிக்ஞை செய்யாமலே யிருந்தனர். காரியம் யாதென்று தெரியாமலே பிரதிக்ஞை செய்தாலும் நீர் காரியம் முடிக்கவல்லவராகிறீர். எங்களை ஆபத்திலிருந்து காப்பீராக."—என்றார் பார்கவர்.

61—ம் ஸர்கம்.

மதுவின் மைந்தனை லவணாஸுரனிடமிருந்து தங்களைக் காக்கும்படி ரிஷிகள் வேண்டினர்.

ராமன்—

நீங்கள் பயப்பட வேண்டாம். உங்கள் காரியம் யாது?

பார்கவர்—

தேசத்துக்கு ஏற்பட்ட பய காரணத்தைச் சொல்லுகிறேன்:— லோலை யென்ற ராக்ஷஸிக்கு ஜேஷ்ட புத்திரனாய்ப் பிறந்த மது என்றொருவன் கிருதயுகத்திலிருந்தான். அவன் மிகுந்த தர்மசீலன்; அநேக ஆயிரம் வருஷம் ருத்ரனைக்குறித்து தபஸ் செய்தான். ருத்ரன் திருப்தியடைந்து தன் சூலத்தினின்றுமோர் சூலமுண்டாக்கிக் கொடுத்து—"தேவர்களிடத்தும் பிராம்மணரிடத்தும் விரோதம் கொள்ளா வரையில் இந்த சூலம் உன்னிடமிருக்கும். உன்னிடம் சண்டைக்கு வருவோரை இது சாம்பலாக்கி, மீண்டும் உன்னிடமே திரும்பும்."—என்றார். "இந்த சூலம் என் வம்சத்துக்கே

---

1. 39-ம் ஸர்கத்தில் ராமன் ராக்ஷஸர்களோடும் வானரர்களோடும் காலம் கழிக்கும்போது சிசிரருது கழிந்ததாகச் சொல்லப்பட்டது. ஸீதா பரித்தியாகத்துக்குப் பிறகு ராமன் ராஜ்யபாலனம் செய்யும் இத்தருணத்தில் 'வஸந்த ருது வந்தது' என்று சொன்னதால், ஸீதா பரித்தியாகம் சிசிரருதுவின் முடிவில் நேர்ந்திருக்கவேண்டும். 39-ம் ஸர்கத்தில் சொன்ன சிசிர ருதுவுக்குப் பிறகு ராமன் ஸீதையோடு சுகித்திருந்து, அவள் கர்பம் தரித்து, கர்பம் முதிரும்போது ஒரு வருஷம் பூர்த்தியாவதால் அடுத்த சிசிர ருது முடிந்ததென்றும் ஸீதாபரித்தியாகம் பதினாயிரம் வருஷம் கழித்தல்ல, உடன்காலிலேயே நேர்ந்ததென்றும் தீர்மானிக்கலாம்.

இருக்கட்டும்"—என்று வேண்டினான் மது. "அது முடியாது. உன் கோரிக்கை வீணாகாவாறு இது உன் புத்திரனுக்கு மட்டும் இருக்கக் கடவது. இது கையிலிருக்கும் போது அவனை யாரும் வெல்ல முடியாது.[1]"—என்றார் ருத்ரன்.

மது இப்படி வரம் பெற்று பெரிய பட்டணத்தை நிர்மாணம் செய்தான். விச்வாவஸுக்கு அனலையிடம் பிறந்த கும்பீனஸி என்பவள் மதுவுக்கு மனைவியானாள். மதுவுக்கு பால்யமே தொடங்கி துஷ்டனாயிருந்த லவணன் என்றொரு பிள்ளை பிறந்தான். பிள்ளையின் பாபச் செயல்களுக்கு வருந்தி மது இந்த லோகத்தையே விட்டு வருணலோகம் சேர்ந்தனன். லவணன் சூலத்தின் சக்தியால் யாவரையும் வருத்துகிறான். நாங்கள் எந்த ராஜனிடம் போய் அபயம் கோரியும், சூலத்தின் சக்தியாலும் லவணனுடைய கொடுமையாலும் காப்போரே கிடைக்கவில்லை. ராமா! நீர் ராவணனைக் குலத்தோடு கொன்றது கேட்டு இங்கு வந்தோம். எங்களைக் காத்தருள்வீராக.

62—ம் ஸர்கம்.

சத்ருக்னன் லவணாஸுரனை வதம் செய்வதாய் ஒப்புக்கொண்டான்.

லவணாஸுரனுடைய ஆஹார ஆசாரங்கள் எப்படி? அவன் எங்கிருக்கிறான்?—என்று கேட்டார் ராமன். லவணாஸுரனுக்கு ஸகல பிராணிகளுமே ஆஹாரம். அதிலும் முக்கியமாய் மஹரிஷிகளே. கொடுமையே அவனுடைய ஆசாரமாகும். எப்பொழுதும் மது வனத்திலேயே அவனுக்கு வாஸம்—என்றார் ரிஷிகள். ராமன் அவனைக் கொல்ல பிரதிக்ஞை செய்து, "லவணனைக் கொல்லுவது பரத சத்ருக்னர் இருவரில் யாருடைய பாகமாயிருக்கட்டும்?"—என்று கேட்க, தான் வதம் செய்வதாய்ச் சொன்னான் பரதன். உடனே சத்ருக்னன் எழுந்து,—"உம்முடைய வரவுக்குக் காத்திருந்து காய் கிழங்கு தின்று அயோத்தியைப் பரிபாலித்து பெரும்

1. சூலம் கையிலில்லாதபோதிலும் மதுவுக்கு ஜயமுண்டு; அது கையிலிருந்தால் தான் அவனுடைய பிள்ளைக்கு ஜயம்; கையிலில்லாமல் வீட்டிலிருந்தாலும் அப்ஜயம் என்று பொருளாகிறது. இந்த விஷயம் 69ம் ஸர்கத்தில் தெரியலாகும்.

பாடு பட்ட பரதனுக்கு இந்த சிரமம் கூடாது.[1] நான் இருக்கையில் இந்த சிரமத்தை பரதன் ஏன் அனுபவிக்கவேண்டும்?"—என்றான். ராமன் சத்ருக்னனையே அனுப்ப விரும்பி,—"லவணாஸுரனுடைய மதுராபுரிக்கு ராஜனாக உனக்கே பட்டம் கட்டுகிறேன். மறுக்காதே[2] ஒப்புக்கொள்."—என்றார்.

63—ம் ஸர்கம்.

ராமன் சத்ருக்னனுக்கு மது ராஜ்யத்தைப் பட்டாபிஷேகம் செய்து லவணாஸுர வதத்துக்கு வேண்டிய மர்மங்களை உபதேசித்து திவ்யாஸ்த்ரத்தையும் கொடுத்தார்.

தனக்கு மதுராஜ்யத்தைப் பட்டாபிஷேகம் செய்யப் போவதாய்த் தெரிந்து சத்ருக்னன் மிகவும் வெட்கி,—"பெரியோர்கள் இருக்க சிறியவனுக்கு பட்டம் கட்டுவது உசிதமல்ல. பெரியவரான பரதன் லவணவதத்துக்கு முன்னிற்கையில் நான் முன் வந்ததன் பலனாயிற்று பெரியோரை விட்டு சிறியனான எனக்கு பட்டம் கட்டுவது. இதை மறுத்து மற்றொரு தண்டனையும் எனக்கு நேரிடாவண்ணம் நான் உம்முடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தே கிடக்கிறேன்."—என்று ராமனிடம் சொன்னான்.

ராமன் பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய தனத்தையும் சித்தம் செய்யச் சொன்னார். சத்ருக்னனுக்கு பட்டாபிஷேகமாயிற்று. லவணாஸுர வதத்துக்காக ராமனைப் பிரார்த்திக்க வந்த மஹர்ஷிகள்

1. இந்த ஸந்தர்பம் ஸீதாபரித்தியாகத்துக்குப் பிறகு நடந்ததென் பதில் ஸந்தேஹிக்க முடியாது. ஸீதாபரித்தியாகம் பட்டாபிஷேகத்துக்குப் பிறகு பதினாயிரம் வருஷம் கழித்து நேர்ந்திருந்தால், பதினாயிரம் வருஷத்துக்கு முன்பு அயோத்தியா பரிபாலனத்தினால் பரதனுக்கு நேர்ந்த சிரமத்தைப்பற்றி சத்ருக்னன் பரிவுகாட்ட இடமிராது. பட்டாபிஷேகமாகி சிறிது காலத்துக்குள் ஸீதாபரித்தியாகம், பிறகு லவண வதம்—என்று இதனாலும் தீர்மானிக்கலாம்.

2. வாலிவதத்துக்கு முன்னரே ஸுக்ரீவ பட்டாபிஷேகம் போலவும், ராவண வதத்துக்கு முன்னரே விபீஷண பட்டாபிஷேகம் போலவும் லவணவதத்துக்கு முன்னரே இங்கு ராமன் சத்ருக்ன பட்டாபிஷேகம் செய்விப்பது. கந்தர்வர்களை ஜயிக்கு முன்னரே பரதபுத்திரர்களான தக்ஷனுக்கும் புஷ்கலனுக்கும் காந்தார தேசத்தைப் பட்டாபிஷேகம் செய்து வைப்பதையும் உ.கா. 100-ம் ஸர்கத்தில் காண்க. சத்ருவை ஜயிக்குமுன் பிறருக்குப் பட்டாபிஷேகம் செய்து வைப்பதும் தனக்கு முன்னதாக நேர்ந்த பட்டாபிஷேகத்தைத் தவிர்ந்து சத்ருஜயம் செய்த பிறகே தான் பட்டாபிஷேகம் செய்து கொள்வதுமாயன்றோ இருப்பது ராமனுடைய வைபவம்!

இப்பொழுதே லவணன் வதம் செய்யப்பட்டதாகத் தீர்மானித்தார்கள். ராமன் சத்துருக்னனை மடியிலுட்காரவைத்து, அவனிடம் ஓர் பாணத்தைக் கொடுத்து—"இது மது கைடபர்களை வதம் செய்வதற்காக பகவானால் ஸ்ருஷ்டிக்கப்பட்டது. இந்த பாணத்தைப் பிரயோகித்தால் உலகம் கலங்குமென்று ராவண வதத்தில் இதை நான் எடுக்கவேயில்லை. லவணன் சிவ சூலத்தை வீட்டில் வைத்துப் பூஜை செய்து திக்கு தோறும் திரிகிறான்; யுத்தத்துக்கு யாரேனும் வந்தபோது சூலத்தை யெடுத்து வந்து சாம்பலாக்குகிறான். அவன் ஆயுதமில்லாமல் வெளியே யிருந்து ஊருக்குள் பிரவேசிக்கும் போதே அவனை யுத்தத்துக்கு அழைத்து வதம் செய்யவேண்டும். அவன் கையில் சூலமிருந்தால் அவனை வதம் செய்ய முடியாது. சிவ பெருமானுடைய காரியம் மாற்ற முடியாத தொன்றாகும்"[1] என்றார்.

64—ம் ஸர்கம்.

சத்துருக்னன் மதுபுரத்துக்குப் பிரயாணப்பட்டான்.

ஏராளமான ஸைனியம் தனம்—முதலியவற்றோடு புறப்பட்டு, அவற்றை முன்னதாக ரிஷிகளுடன் அனுப்பி, தன்னோடு யுத்தத்துக்கு வருவதாய் லவணனுக்கு ஸந்தேஹம் தோன்றுவாறு தனியாய்ப் புறப்பட்டுப்போய் வர்ஷா காலத்தில் லவணனை வதம் செய்யும்படி ராமன் சத்துருக்னனுக்கு உபாயம் சொன்னார்.

சத்துருக்னன் அப்படியே ஸைனியத்தைப் பிரயாணப்படுத்தி கௌஸல்யை முதலிய தாய்மார்களையும், ராமனையும், வஸிஷ்டரையும் நமஸ்காரம் செய்து ஒரு மாஸம் கழித்து புறப்பட்டான்.

65—ம் ஸர்கம்.

சத்துருக்னன் வால்மீகி ஆச்ரமத்துக்குப் போனான். வால்மீகி கல்மாஷபாதன் என்ற ராஜனுடைய சரித்திரத்தைச் சொன்னார்.

---

1. லவணாஸுரன் ராவணனை விடக் கொடியவன் என்று தெரிகிறது. இப்பொழுது ராமன் கொடுத்த விஷ்ணு பாணம் லவணனை ஜயிப்பதற்காகக் கொடுக்கப்பட்டதால் அது சிவ சூலத்தை வெல்ல முடியாதெனக் கருதி சைவர்கள் விஷ்ணுவைவிட சிவனுடைய மேன்மைக்கு இவ்விடத்தை ஆதாரமாகக் கொள்கிறார்கள். பிரம்மாவை கௌரவிப்பதற்காக அவர் கொடுத்த வரத்தின்படியே ராமன் ராவணனை வதம் செய்தது போல, சிவனை கௌரவிப்பதற்காக ராமன் சிவ சூலத்தை வெல்ல முயற்சி செய்யாதிருந்தார் என்று இவ்விடத்துக்கு வைஷ்ணவர்களின் ஸமாதானம். இதை அந்தந்த வியாக்கியானங்களில் காணலாம்.

சத்துருக்னன் ஒரு மாஸம் கழித்து புறப்பட்டு இரண்டு நாளில் வால்மீகி ஆச்ரமம் சேர்ந்தான்; மறுநாள் உதயம் மேற்கு திக்குக்குப் பிரயாணமாகும் வரையில் ராத்திரி அவ்விடமிருக்க விரும்பினான் வால்மீகி சத்துருக்னனை வரவேற்று உபசரித்தார். சத்துருக்னன் ராத்திரி போஜனம் செய்த பிறகு, வால்மீகியோடு பேசிக் கொண்டிருக்கையில், ஆச்ரமத்துக் கருகே ஓர் யக்ஞ பூமியைக் கண்டு அது யாருடைய தென்று கேட்டான்.

வால்மீகி—

உன் வம்சத்தைச் சேர்ந்த ஸௌதாஸனுடைய பிள்ளை வீரஸஹன் என்பவன் வேட்டைக்குப் போன போது, புலி ரூபியாய் எல்லா பிராணிகளையும் கொன்று காட்டை யழித்துக் கொண்டிருந்த இரண்டு ராக்ஷஸர்களைக் கண்டு அவற்றி லொன்றை அடித்தான். "குற்றமற்ற என் தோழனைக் கொன்ற உன்னை நான் கெடுக்கிறேன்." என்று சொல்லிப் போயிற்று மற்றொரு புலி. ஸௌதாஸன் இவ் வாச்ரமத்தில் அச்வமேத யாகம் செய்து முடிக்கையில், அந்தப் புலி ராக்ஷஸன் புரோஹிதரான வஸிஷ்டர் போல வந்து மாமிஸ போஜனம் வேண்டு மென்று கேட்க, புரோஹிதர் விரும்பிய படியே போஜனம் கொண்டு வருமாறு ஸௌதாஸன் சமையல் காரனுக்குக் கட்டளையிட்டான். மஹரிஷிக்கு மாமிஸாஹாரம் கொடுக்கும் விருப்பத்துக்காக சமையல்காரன் கலங்கியபோது, ராக்ஷஸனே சமையல்கார வேஷத்துடன் போய் மாமிஸாஹாரம் கொண்டு வந்தான். ராஜன் தன் பத்தினி மதயந்தியோடு போய் அந்த ஆஹாரத்தை வஸிஷ்டருக்குக் கொடுக்கையில், அவர் கோபித்து மாமிஸ போஜியாம்படி ராஜனை சபித்தார். ராஜனும் கோபித்து வஸிஷ்டரை சபிக்க ஜலம் எடுத்தான். அவனுடைய பத்தினி தடுத்ததால் ராஜன் ஜலத்தைத் தன் காலிலேயே விட, கால்கள் கருத்தன. அது முதல் ராஜனுக்கு கல்மாஷபாதன்—கரிகாலன் எனப் பெயராயிற்று. ராஜன் வஸிஷ்டரைப் பணிந்து, தான் மாமிஸாஹாரம் கொண்டு வந்த காரணத்தை யறிவிக்க, அது ராக்ஷஸனுடைய சூழ்ச்சியென்று வஸிஷ்டர் தீர்மானித்து பனிரண்டாம் வருஷத்தில் சாபம் நீங்குமென்று அனுக்ரஹித்தார். ராஜன் சாபத்தை அனுபவித்து மீண்டும் முன்போல ராஜ்யத்தைப் பரிபாலித்தான்.

மிகக் கொடுமையாயுள்ள இக்கதையைக் கேட்டு வியந்து சத்துருக்னன் பர்ணசாலையில் படுக்கச் சென்றான்.

66—ம் ஸர்கம்.

ஸீதைக்கு குசலவர்கள் பிறந்தார்கள். சத்துருக்னன் யமுனா தீரம் போனான்.

சத்துருக்னன் வால்மீகி ஆச்ரமம் போன வன்றிரவே ஸீதைக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. முதலில் பிறந்தவனுக்கு குசத்தினாலும், இரண்டாவதாய்ப் பிறந்தவனுக்கு லவத்தினாலும் வால்மீகி ரக்ஷை செய்து ரக்ஷையாயிருந்த வஸ்துக்களின் பெயரே அவர்களுக்குப் பெயராயிருக்கும்படி அனுக்ரஹித்தார். சத்துருக்னன் குழந்தைகளையும் ஸீதையையும் போய்ப் பார்த்தான்.

மறுநாள் உதயம் சத்துருக்னன் புறப்பட்டு ஏழு நாள் பிரயாணம் செய்து யமுனாதீரம் சேர்ந்து அங்குள்ள ரிஷிகளோடு விநோதமாய்ப் பேசிக் கொண்டிருந்தான்.

67—ம் ஸர்கம்.

சத்துருக்னன் லவணாஸுரனுடைய பராக்ரமம் எவ்விதமென்று கேட்க, அவனுடைய சூலத்தினால் மாந்தாதா சாம்பலான விதத்தைச் சொன்னார் ச்யவனர்.

சத்துருக்னன்—

லவணாஸுரனுடைய பராக்ரமம் எவ்விதம்? சூலத்தின் சக்தி யாது? அதனால் யார் யார் மடிந்தனர்?

ச்யவனர்—

லவணனுடைய காரியங்கள் கணக்கிட முடியாதவை :—

முன்பு அயோத்திக்கு அதிபதியாயிருந்த யுவனாச்வ புத்திரனான மாந்தாதா பூலோகம் முழுவதையும் தன் வசமாக்கி தேவலோகத்தை ஜயிக்கப் போனான். தேவர்கள் மிகவும் திகைத்து,—“பூலோகத்தை முற்றிலும் வெல்லாமல் தேவலோகத்தை ஜயிக்க அவஸரப்படுவதென்! பூலோகத்திலுள்ள லவணாஸுரனை இன்னும் ஜயிக்கவில்லையே!”—என்றார்கள். மாந்தாதா சேனையைத் திரட்டிக்கொண்டு போய் தூதனை அனுப்பி லவணாஸுரனை யுத்தத்துக்கு அழைக்க, லவணன் தூதனை விழுங்கி விட்டான். தூதன் வராதது கண்ட மாந்தாதா வெளியிலிருந்து பாணங்களைப் பொழிந்தான். லவணன்

சூலத்தை யெடுத்து வெளியே வந்ததும் மாந்தாதாவுடன் சேனை முழுவதும் சாம்பலாகி மடிந்தது.

நாளைக் காலையில் லவணன் சூலமில்லாதிருக்கும் போதே யுத்தத்துக்குப் போனால் அவனை எளிதில் வதம் செய்யலாம்.

68—ம் ஸர்கம்.

சத்துருக்னன் லவணனோடு சண்டைக்கு சித்தமானான்.

மறுநாள் பொழுது விடிந்தது. லவணன் ஆஹாரம் தேடுவதற்காக ஊரை விட்டு வெளியே போனான். சத்துருக்னன் யமுனையைத் தாண்டி மதுபுரம் போய் லவணன் திரும்பி வருவதற்குள் வில்லும் கையுமாய்க் கோட்டை வாசலை மறித்து நின்றான். ஆயிரக்கணக்கான பிராணிகளைக் கொன்று தோளில் தூக்கிச் சுமந்து திரும்பிய லவணன் சத்துருக்னனைப் பார்த்து,—தனக்கு நல்ல ஆஹாரம் கிடைத்த* தென்று சொல்லிக் கொண்டே வர,—“நான் தசரத புத்திரன்; ராமனுக்குத் தம்பி சத்துருக்னன்; உன்னோடு யுத்தத்துக்கு வந்திருக்கிறேன்”—என்றான் சத்துருக்னன்

“எனக்குப் பெரிய தாயார் முறையாம் சூர்ப்பநகையின் தமையனான ராவணனை ராமன் கொன்றதற்கே நான் பொறுத்தேன். இப்பொழுது சமயம் நேர்ந்தது. சற்றுப் பொறு. உள்ளே போய் ஆயுதமெடுத்து வருகிறேன்.”—என்றான் லவணன். சத்துருக்னன் வழியை மறித்து,—“ஆயுதமெடுக்க அவகாசம் கொடேன். இப்படியே சண்டைக்கு வா”—என்று சொல்லி லவணனை உள்ளே போகாமல் தடுத்து விட்டான்.

69—ம் ஸர்கம். *லவணாஸுரவதம்.*

லவணனும் சத்துருக்னனும் யுத்தத்துக்கு ஆரம்பித்தார்கள். லவணன் மரங்களைப் பிடுங்கி சத்துருக்னன் மீது வீசிக்கொண்டேயிருக்க, சத்துருக்னன் அவையனைத்தையும் பாணங்களால் சிதறடித்தான். சத்துருக்னன் கணக்கில்லாமல் பாணங்களைப் பொழிந்தும் லவணன் களைக்கவேயில்லை; சத்துருக்னனே களைத்தான். லவணன் பேரானந்தத்தோடு ஒரு மரத்தைப் பிடுங்கி சத்துருக்னனைத் தலையிலடித்துத் தள்ளினான் சத்துருக்னன் மூர்ச்சித்து வீழ்ந்ததும் அவன் இறந்ததாகவே தீர்மானித்து லவணன் உள்ளே போய் சிவ சூலத்தை எடுக்கவில்லை. சிறிது நேரம் கழித்து சத்துருக்னன் எழுந்து ராமன் கொடுத்த பாணத்தை யெடுத்தான்.

அந்த பாணத்தின் உக்ரம் தாங்காமல் தேவர்கள் திகைத்து பிரம்மாவிடம் போய் முறையிட, அவர் அதன் பிரபாவத்தைச் சொல்லி, அதனால் லவணாஸுர வதமும் லோக க்ஷேமமும் உண்டாகப் போவதாய்த் தெரிவித்தார்.

சத்ருக்னன் பாணத்தைப் பிரயோகித்து லவணனை வதம் செய்தான். லவணன் இறந்ததும் அவன் வீட்டிலிருந்த சிவசூலம் எல்லா தேவர்களும் பார்க்கும்படியாக ருத்திரனிடம் போய்ச் சேர்ந்தது.

70—ம் ஸர்கம். சத்ருக்னன் மதுராபுரியை நிர்மாணம் செய்தான்.

லவண வதமானதும் இந்திராதி தேவர்கள் வந்து மிகவும் ஸந்தோஷித்து சத்ருக்னனுக்கு வரம் கொடுக்க விரும்பினார்கள். "இந்த மதுபுரம் ரம்யமாயும் மதுரமாயுமுள்ள[1] பட்டணமாக விரைவில் விருத்தியடைய வேண்டு" மென்று வரம் கேட்டான் சத்ருக்னன். தேவர்கள் அப்படியே வரம் கொடுத்து தேவலோகம் போயினர். யமுனாநதிக்கரையில் வைக்கப்பட்ட ஸேனை சத்ருக்னனுடைய கட்டளையின் பேரில் விரைவாய் மதுபுரம் வந்து சேர்ந்தது. சத்ருக்னன் ஆவணி மாஸத்தில் மதுராபுரியை நிர்மாணம் செய்ய வாரம்பித்தான். மதுராபுரி சத்ருக்களால் யாதொரு பயமும் ஏற்படாவாறு தக்க பாதுகாப்புடன் கூடிய பெரிய ராஜதானியாயிற்று. பூமிகளில் பயிர் நன்றாய் விளைந்தது. காலத்தில் மழை பெய்தது. ஜனங்கள் ஏராளமாய்க் குடி புகுந்து ரோகமில்லாமலும் வீரர்களாயு மிருந்தனர். யமுனாதீரத்தில் அர்த்த சந்திரன் போல வளைவாய மைந்த மதுராபுரி விரைவில் பெரிய மாட மாளிகைகளாலும், நானா தேசங்களிலிருந்து வியாபாரத்துக்கு வரும் கடைத் தெருவுகளாலும், சாதுர்வர்ணியம் என்ற நாலு வர்ணாச்ரம தர்மத்தினாலும், பற்பல சோலைகளாலும் நன்றாய் செழிக்கும்படி செய்தான் சத்ருக்னன். பனிரண்டு வருஷம் மதுராபுரியிலேயே இருந்து அதை நன்றாய் விருத்திசெய்து பனிரண்டாம்[2]

---

1. மதுவினால் கட்டப்பட்டதால் இதுவரையில் மதுபுரமெனப் பெயர் கொண்டது இப்பொழுது சத்ருக்னனால் மதுரமாக்கப்பட்டு மதுராபுரி யெனப் பெயர் பெற்றது. சத்ருக்னன் காலம் முதல்தான் அதற்கு மதுராபுரி யெனப் பெயர் வந்ததென்று தெரிந்துகொள்ளவும்.

2. பனிரண்டு வருஷத்துக்குமேல் பந்துக்களைப் பாராமலிருக்கக் கூடாதென்ற தர்மசாஸ்திர விதியை சத்ருக்னன் அனுஸரித்ததாக கோ. ரா. வியாக்யானம்.

வருஷக் கடைசியில் சத்துருக்னன் ராமனை அடிபணிந்து வர விரும்பினான்.

71—ம் ஸர்கம்.

சத்ருக்னன் வால்மீகி ஆச்ரமத்தில் தங்கி அங்கு கானம் செய்யப் படும் ராமாயணத்தைக் கேட்டான்.

பனிரண்டாம் வருஷத்தில் சத்துருக்னன் அயோத்திக்குப் போக விரும்பி சில பரிவாரங்களுடன் புறப்பட்டு ஏழு, எட்டு நாளில்[1] வால்மீகி ஆச்ரமம் போய் அங்கு ராத்திரி தங்கினான். வால்மீகி அவனை வரவேற்று உபசரித்து,—"கணக்கில்லா மன்னவர்கள் லவணனோடு யுத்தம் செய்து மடிந்தனர். ராவணனை வதம் செய்ய ராமனால் பெரு முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது. நீ ஒருவனாகவே எளிதாய் லவணனை வதம் செய்தனை. லவண வதத்தினால் தேவர்களுக்கு மிகுந்த பிரீதியும் லோகத்துக்கு க்ஷேமமும் உண்டாயின. நீ லவணனோடு யுத்தம் செய்ததை நான் இந்திர ஸபையிலுட்கார்ந்து பார்த்தேன்."—என்று சொல்லி ஸந்தோஷம் தாங்காமல் அவனைக் கட்டி யணைந்து உச்சி மோந்தார்.

அங்கு அடிக்கடி ராமாயண கானம் நடந்துகொண்டிருந்தது. ஸம்ஸ்கிருதபாஷையில் எழுதப்பெற்றதும், வியாகரணம் முதலிய லக்ஷணம் தவறாததும், வீணை ஸ்வரத்துக் கேற்றதும், தாளத்துக் கொற்றதுமான ராமசரித்திரத்தைக் கேட்டான் சத்ருக்னன். நடந்த விஷயங்களைச் சொல்லும் ராமாயணத்தைக் கேட்டு அவன் கண்ணீர் சொரிந்தான்; அடிக்கடி பெருமூச்செறிந்தான். அவனுக்கு சிறிது நேரம் நினைவேயில்லாமற் போயிற்று. கடந்த விஷயமெல்லாம் கண்முன்னே காண்பன போலாயின. சத்துருக்னனுடைய பரிவாரங்களும் ராமாயண கானம் கேட்டு பெருவியப்

---

1. ராமாயணத்தைக் கேட்பதற்காக 7, 8, நாள் சத்துருக்னன் வால்மீகி ஆச்ரமத்தில் தங்கியதாக சிதிகண்ட வியாக்கியானம். இது சரியல்ல. இந்த அர்த்தம் மூலத்திலுள்ளபடி ஸ்வல்பமாயும் கிடைக்க வில்லை. வால்மீகி ஆச்ரமத்திலிருந்து யமுனாதீரம் சேருவதற்கு 7 நாளாயிற்றென்று—66ம் ஸர்கத்தில் சொன்னபடி இப்பொழுது யமுனாநதியிலிருந்து வால்மீகி ஆச்ரமத்துக்குப்போக 7, 8 நாள் பிடித்ததென்பதே மூலத்தின் அர்த்தம். சத்துருக்னன் வால்மீகி ஆச்ரமத்துக்கு முதல் நாள் போய் மறுநாள் உதயமே அதைவிட்டுப் புறப்பட்டதாயும் வியக்தமாயிருப்பதால் ராமாயணகானம் கேட்பதற்காக 7, 8 நாள் தங்கினதாகச் சொல்ல முடியாது.

பெய்தினர். "முன்பு நேரில் பார்த்த விஷயம் இப்பொழுது ஆச்ரமத்தில் கேட்கப்படுகிறதே! இதென்ன ஸங்கீதம் கலந்ததொரு ஸ்வப்னமோ!"—என்று திகைத்து அதன் விவரத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுமாறு பரிவாரங்கள் சத்துருக்னனிடம் சொன்னுர்கள். "மஹரிஷியின் ஆச்ரமத்தில் அநேகம் ஆச்சரியமிருக்குமாகையால் அது கேட்கத் தகுதியல்ல"—என்று சொல்லி சத்துருக்னன் தன் விடுதிக்குப் போய்விட்டான்.

72—ம் ஸர்கம்.

சத்துருக்னன் அயோத்தியில் ராமனைப் பார்த்து விட்டு மதுராபுரிக்குப் போனுன்.

அநேகவிதமான அர்த்தம் பொதிந்துள்ள ராமாயணத்தின் நினைவாகவே படுத்துக் கொண்டிருந்தான் சத்துருக்னன். அவனுக்குத் தூக்கம் வரவேயில்லை. ராமாயண கானம் காதில் வீழ்ந்து கொண்டிருப்பது போலவே நினைத்து சத்துருக்னன் படுத்திருக்கையில், பொழுது விடிந்து விட்டது. சத்துருக்னன் வால்மீகியிடம் விடை பெற்று அயோத்தி போய் ராமனைப் பார்த்து அடிபணிந்து, லவணனை வதம் செய்ததையும் பட்டணத்தைப் புதிதாயமைத்ததையும் தெரிவித்தான். அவனுக்கு ராமனை விட்டுப் பிரிந்திருக்க மனமில்லை. "ராஜாக்கள் அயல் நாட்டு வாஸத்தால் வருந்தக் கூடாது. க்ஷத்திரிய தர்மத்தின் படி பிரஜைகளைப் பரிபாலிப்பதே நம்முடைய கடமை. இங்கு 'ஒரு வாரமிருந்து அடிக்கடி என்னையும் அயோத்தியையும் பார்ப்பதற்காக வந்து கொண்டிரு." என்று சொன்னுர் ராமன். சத்துருக்னன் ஒரு வாரம் அயோத்தியிலிருந்து மதுராபுரிக்குப் போய்ச் சேர்ந்தான்.

73—ம் ஸர்கம்.

ராம ராஜ்யத்தில் ஒரு பிராமணக் குழந்தை அல்பாயுஸ்ஸாய் இறந்தது.

சத்துருக்னனை மதுராபுரிக்குப் பிரயாணப் படுத்தி விட்டு, ராமன் ஸந்தோஷமாய் ராஜ்ய காரியங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். சில நாள் சென்றதும், ஒரு பிராம்மணன் இறந்து போன தன்னுடைய குழந்தையை எடுத்து வந்து அரண்மனை வாசலில் போட்டு, "குழந்தாய், குழந்தாய்"—என்று துக்கத்தோடு பலவிதமாய்க் கதறினுன்.

"நான் ஜன்மாந்தரத்தில் என்ன பாபம் செய்தேனே! ஒரே பிள்ளையான உன்னை நான் இழந்தேன். என்னுடைய துன்பத்துக்காகவே ஐந்து வயதில் நீ அல்பாயுஸ்ஸானாய். உன் சோகத்தினால் நானும் உன் அம்மாவும் உயிரை விடுகிறோம். நான் ஒரு பாபமும் செய்ததாய்த் தெரியவில்லை. எனக்கு கர்மம் செய்யாமல் நீ இறந்தது என்ன பாபத்தினாலோ! ராமராஜ்யத்தில் இம்மாதிரி கோரமான காரியம் நடந்ததேயில்லை. ஜனங்களுக்கு இம்மாதிரி அபம்ருத்யு ஏற்படும்படி ராமனிடத்திலேயே ஏதோ பெரிய பாபமிருக்கிறது. வேறு ராஜ்யத்தில் இப்படி அபம்ருத்யு பயமே கிடையாது. ராமா! நீ தான் என் குழந்தையைப் பிழைப்பிக்க வேண்டும். இல்லையேல், நானும் என் மனைவியும் அரண்மனை வாசலிலேயே உயிரை விடுகிறோம். நீ பிரம்மஹத்தி தோஷத்தை அனுபவித்துக் கொண்டு தம்பிகளோடு ஸுகமாயிரு. உன் ராஜ்யத்தில் நாங்கள் ஸுகித்தது போதும். உன்னால் ரக்ஷிக்கப்படும் எங்களுக்கு இந்த துக்கம் நேரிட்டது. இக்ஷ்வாகு ராஜ்யம் ராமனை யடைந்து பால மிருத்யு ஏற்படும்படி அநாதமாய்விட்டது. ஜனங்கள் தவிப்பது ராஜ தோஷத்தினாலேயே. ராஜன் துஷ்டனானால் ஜனங்கள் அகாலத்தில் மரிப்பார்கள். ராஜ்யத்தில் ஜனங்கள் செய்யும் அக்ரமத்துக்கு ரக்ஷை ஏற்படாதபோது காலத்தினால் பயமுண்டாகும். இந்த பால ம்ருத்யுவுக்கு நிச்சயமாய் ராஜ தோஷமே காரணம்."—என்றிப்படி புலம்பிக்கொண்டே பிராம்மணன் தன் குழந்தையைக் கட்டியழுதான்.

74—ம் ஸர்கம்.

நாரதர் யுகதர்மங்களை எடுத்துரைத்து சூத்ரன் தபஸ் செய்வதால் பிராம்மணக் குழந்தை இறந்ததென்றார்.

ராமன் பிராமணனுடைய அழுகையைக் கேட்டு வருந்தி வஸிஷ்டர் முதலிய எட்டு மந்திரிகளையும் தம்பிகளையும் வரவழைத்து, பிராம்மணன் வந்து நிந்திப்பதைத் தெரிவித்தார். அப்பொழுது பின் வருமாறு சொல்லலானார் நாரதர் :—

* "கிருத யுகத்தில் பிராம்மணர்கள் மட்டுமே தபஸ்செய்தனர் பிராம்மணரல்லாதார்க்கு அந்த யுகத்தில் தபஸ் செய்ய அதிகாரம் கிடையாது.

---

* இந்த ஸர்கத்தில் சொல்லப்படும் யுகதர்மம் மற்றைய புராணங்களின் யுகதர்மத்தோடு ஒத்திருக்கிறதா! அல்லது வித்தியாஸப்படுகிறதா! என்று பார்த்துக் கொள்ளவும்.

"திரேதாயுகத்தில் க்ஷத்திரியர்களும் தபஸ் செய்ததால் க்ஷத்திரியர்களுக்கும் பிராம்மணர்களுக்கும் கௌரவம் ஸமமாயே யிருந்தது. ஆகவே, இருவருக்கும் வித்தியாஸம் தெரிவதற்காக வர்ணாச்ரமாசாரம் ஸ்தாபிக்கப்பட்டது. அதர்மத்தில் நாலிலொரு பாகம் பூமியில் பரவியது. ஜனங்களுக்கு சக்தி குறைந்தது. கிருத யுகத்தில் பூமி சாகுபடியின்றியே விளைந்ததால் அப்போது அவசியமா யிராத வேளாண்மை திரேதாயுகத்தில் அதர்மம் வந்ததால் ஜனங் களுடைய ஜீவனத்துக்கு அவசியமாயிற்று. ஜனங்களுக்கு ஆயுஸ் குறைய ஆரம்பித்ததும் அவர்கள் சுபகாரியங்களைச் செய்யலானார்கள். பிராம்மணர்களும் க்ஷத்திரியர்களும் தபஸ் செய்ததால் அவர்களுக்கு மற்றைய இரண்டு வர்ணத்தாரும் சுச்ரூஷை செய்தனர். அதிலும் வேளாண்மை முதலிய சுச்ரூஷை வைசியர்களுடையதா யிருந்தது. சூத்ரர்கள் தங்களுக்கு மேற்பட்ட மூன்று வர்ணத்தாரையும் பூஜித் துக் கொண்டிருந்தார்கள்.

"திரேதாயுகத்தின் முடிவில் அதர்மமும் ஜீவனோபாயமான வேளாண்மையும் அதிகரிக்கையில், அதர்மம் அரை மடங்காகி துவாபரயுகம் பிறந்தது. துவாபரத்தில் வைசியர்களுக்கும் தபஸில் அதிகாரம் ஏற்பட்டது. இப்படி யுகக்ரமமாயே அவரவர்களுக்கு தபஸில் அதிகாரம் ஏற்படும். சூத்ரனுக்கு கலியுகத்திலதான் தபஸில் அதிகாரமுண்டு; துவாபரயுகத்தில் சூத்ரன் தபஸ் செய் தாலும் பெரிய அதர்மம்.

"ராமா! இந்த திரேதாயுகத்தில் உம்முடைய ராஜ்யத்தின் எல்லையில் ஒரு சூத்ரன் பெரிய தபஸ் செய்கிறான். அதனால்தான் இப்படி பாலம்ருத்யு ஏற்பட்டது. ராஜாங்கத்தில் ஒருவன் அதர் மம் செய்தாலும் அது தேசத்துக்குத் தீங்கு; அதைக் கண்டியாத ராஜனும் நரகத்தையடைவான். ஜனங்களுடைய புண்ணியத்தில் ஆறிலொரு பங்கை யடையும் ராஜன் அதர்மத்தினாலுண்டாகும் ஆபத்திலிருந்து ஜனங்களை ரக்ஷியாமலிருக்கக்கூடாது. உம்முடைய ராஜ்யத்தைச் சுற்றிப்பார்த்து, அதர்மமுள்ள இடத்தில் அதிகாரத் தைச் செலுத்துவீராக. அப்படிச்செய்தால் தர்மமும் ஆயுஸ்ஸும் விருத்தியாகும். இந்த சிசுவும் பிழைக்கும்.

75—ம் ஸர்கம்.

ராமன் தபஸ் செய்யும் சூத்ரனைத் தேடிச் சென்றார்.

ராமன் நாரதருடைய வார்த்தையைக் கேட்டு, பிராம்மணனை ஸமாதானம் செய்து, இறந்த குழந்தையை அங்கம் கெடாமல் எண்ணெய்க் கொப்பரையிலிட்டு வைத்து ரக்ஷிக்கும்படி லக்ஷ்மண னுக்குச் சொல்லிப், புஷ்பகத்தை நினைத்தார். புஷ்பகம் வந்தது. ராமன் அதிலேறிப் போய் ஒவ்வொரு திக்காய்ப் பார்த்தும், அதர்மம் யாதும் தென்படாததால் தென்திசை போனார். அங்கு சைவல பர்வதத்துக்கு ஸமீபமாயிருந்த ஓர் குளத்தில் ஒருவன் தலைகீழாய்த் தபஸ் செய்து கொண்டிருந்தான். ராமன் தன்னை இன்னாரென்று தெரிவித்துக் கொண்டு, அவனுடைய ஜாதியையும் அவன் தபஸ் செய்யும் காரணத்தையும் உண்மையாய்ச் சொல்லு மாறு கேட்டார்.

76—ம் ஸர்கம்.

ராமன் தபஸ செய்த சம்புகனை வதம் செய்து, தேவர்களின் உதவியால் பிராம்மணக் குழந்தையைப் பிழைப்பித்து, அகஸ்தியாச்ரமம் போய் ஓர் ஆபரணத்தைப் பெற்றுக் கொண்டார்.

"சரீரத்தோடு ஸ்வர்கம் போவதற்காக நான் தபஸ் செய் கிறேன். நான் சூத்ரன். சம்புகன் என்று எனக்குப் பெயர்"— என்று சொன்னான் தபஸ்வி. உடனே ராமன் கத்தியை உருவி சம்புகனை சிரச்சேதம் செய்தார்[1] தேவர்கள் வந்து ராமனைக் கொண் டாடி அவருக்கு வரம் கொடுக்க விரும்பினார்கள். பிராமணக் குழந் தை பிழைக்குமாறு[2] ராமன் வரம் கேட்க,—"சம்புகனை வதம் செய்த க்ஷணத்திலேயே குழந்தை பிழைத்தெழுந்து பெற்றோரிடம் சேர்ந்தது"—என்றார் தேவர்கள்.

---

1. ராமன் செய்த சம்புக வதம் இக்காலத்துக்குத் தவறுதலாகத் தோன்றும். சம்புக வதத்தையும் விடக் கொடிய பாபமான சட்டங்களை தர்மமென்று அரசர்களும் அரசாங்கத்தாரும் நாகரீகம் முதிர்ந்ததென்று கொண்டாடப்படும் இக்காலத்திலும் செலுத்துவது அனுபவஸித்தம். ஒருவன் தன் பிறவிக்குத் தக்கபடி இன்ன காரியம் தான் செய்யலா மென்றும் மீறி நடப்பவனை ராஜன் தண்டிக்கவேண்டுமென்றும் அக் காலத்து சாஸனம். ராமன் அந்த சாஸனத்தின்படியே ராஜ்யபாலனம் செய்ய நேரிட்டதால், சம்புக வதத்தில் யாதொரு தவறுதலுமில்லை.

2. கிருஷ்ணபகவான் ஸாந்தீபினியின் பிள்ளையையும், பரீக்ஷித்தை யும், அர்ஜுனனையும் பிழைப்பித்ததற்கும் ராமன் பிராமமணக் குழந்தை யைப் பிழைப்பித்ததற்கு முள்ள வித்தியாஸத்தை கவனிக்க. இன்னொரு ஸந்தர்ப்பத்தில் இந்த வித்தியாஸம் நன்றாய் விசாரிக்கப்படும்.

பனிரண்டு வருஷமாய் ஜலத்தில் படுத்திருந்து அப்போதே எழுந்த அகஸ்தியரைப் பார்க்கப் போன தேவர்கள் ராமனையும் அழைத்துச் சென்றனர். அகஸ்தியர் தேவர்களைப் பூஜித்தனுப்பி, ராத்திரி தங்கியிருந்து உதயம் அயோத்திக்குப் போகலாம்—என்று ராமனை வேண்டினர். ராமன் சம்புகனை வதம் செய்ததற்காக, மகிழ்ந்து, ராமனே ஸகலப் பிராணிகளுக்கும் பிரபுவாயுள்ள ஸ்ரீமந் நாராயணன்—என்று புகழ்ந்து, வாங்கிய தானத்தை இன்னொருவருக்கு தானம் செய்வது விசேஷமாகையால், தனக்கு தானமாய்க் கிடைத்த தொரு ஆபரணத்தை ராமனுக்குக் கொடுக்க விரும்பினர் அகஸ்தியர். க்ஷத்திரியனுக்கு தானம் வாங்குவது, அதிலும் பிராம்மணனிடமிருந்து தானம் வாங்குவது கூடாது—என்றார் ராமன். "முன்பு கிருதயுகத்தில் தங்களுக் கொரு ராஜனைக் கொடுக்குமாறு ஜனங்கள் பிரம்மாவிடம் போய் முறையிட, பிரம்மா தன் தும்மலால் க்ஷுபன் என்றொருவனை ஸ்ருஷ்டித்து, லோகபாலர்களின் தேஜோபாகத்தைக் கொடுத்து அவனை ராஜாவாக்கினர். ராஜன் இந்திராம்சத்தினுல் பூமியை ஸம்பாதிக்கிறன்; வருணாம்சத்தினுல் போஷிக்கிறன்; குபேராம்சத்தினுல் தனத்தைக் கொடுக்கிறன்; யமனுடைய அம்சத்தினுல் தண்டிக்கிறன். ஆகையால், ராமா! நீர் இந்திராம்சத்தினுல் இந்த ஆபரணங்களைப் பெற்று என்னை உத்தரிப்பீராக"—என்று சொன்னர் அகஸ்தியர். ராமனும் ஆபரணத்தை வாங்கி யணிந்து அது அகஸ்தியருக்குக் கிடைத்த வரலாற்றைக் கேட்டார்.

77—ம் ஸர்கம்.

அகஸ்தியர் குளத்தில் பிணம் தின்னுமொரு திவ்ய புருஷனைப் பார்த்தார்.

"முன்பு கிருத யுகத்தில் மிகப் பெரியதொரு நிர்ஜனமான காட்டின் மத்தியில் ஒரு ஆச்ரமும் குளமும் இருந்தது. ஒரு ஸமயம் கோடை காலத்தில் நான் அக்காட்டின் வழியாய்ப் போய்க் கொண்டிருக்கையில், ராத்திரி அவ்வாச்ரமத்தில் தங்கி, மறுநாள் உதயம் அனுஷ்டானம் செய்வதற்காகக் குளத்துக்குப் போனேன். குளத்தில் ஒரு பிணம் இருந்தது. அது பிணமாயிருந்தும் சரீரம் வாடாமலும் அழகு குறையாமலுமிருப்பதை நான் ஆலோசிக்கையில், அநேகம் அப்ஸரஸ்ஸுகளால் உபசரிக்கப்பட்ட ஒரு திவ்ய புருஷன் அங்கு விமானத்தில் வந்து இறங்கினன். அவன் குளத்

துக்கு வந்து, பிணத்தைத் தின்று ஆசமனம் செய்து விட்டு விமானத்திலேறும்போது, நான் அவனுடைய வரலாற்றைக்கேட்டேன்.

78—ம் ஸர்கம்.

பிணம் தின்னும்படி சாபம் பெற்ற சுவேத ராஜன் அகஸ்தியரால் விமோசன மடைந்தான்.

"திவ்ய புருஷன் தன் வரலாற்றைச் சொன்னான் :—

திவ்ய புருஷன்—

முன்பு விதர்ப தேசத்தரசனாயிருந்த ஸுதேவன் என்ற ராஜனுக்கு இரண்டு மனைவிகளிடம் இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். சுவேதன் என்ற நான் மூத்தவன்; இளையவன் ஸுரதன். பிதா இறந்ததும் நான் கொஞ்ச காலம் ராஜ்யபாலனம் செய்து, ஸுரதனுக்குப் பட்டம் கட்டி, இதே காட்டில் மூவாயிரம் வருஷம் கடுமையாய்த் தவம்புரிந்து பிரம்மலோகம் போய்ச் சேர்ந்தேன். பசி தாகமில்லாத பிரம்மலோகத்திலும் என்னைப் பசி தாகம் பீடித்ததால், பிரம்மாவிடம் போய்க் கேட்டதற்கு,—"நீ தபஸ் செய்கையிலும் உன் சரீரத்தை மட்டுமே போஷித்துக் கொண்டிருந்தாய். அதிதியாக பிக்ஷைக்கு வந்த ஓர் யதிக்குக் கூட நீ அன்னமிட்டாயில்லை. ஆகையால், உன் சரீரத்தையே தின்று தான் உனக்குப் பசி தீர வேண்டும். அகஸ்தியர் வந்து உன்னை இவ்வாபத்திலிருந்து விடுவிப்பார்."—என்றார் பிரம்மா. அது முதல் இந்த நீச ஆஹாரத்தையே தின்றுகொண்டு நான் உம்முடைய வரவை எதிர்பார்த்திருக்கிறேன். இவ்வாபத்திலிருந்து என்னை விடுவித்தருளவேண்டும். நினைத்ததையெல்லாம் கொடுக்கவல்ல இவ்வாபரணத்தைப் பெற்றுக் கொண்டு என்னை விடுவிப்பீராக—என்று சொல்லி திவ்ய புருஷன் ஆபரணத்தைக் கொடுத்தான். நான் ஆபரணத்தை வாங்கிக் கொண்டபோதே பிணமாயிருந்த அவனுடைய மனுஷ்ய சரீரம் மறைந்தது. திவ்ய புருஷன் மிகுந்த ஸந்தோஷத்தோடு விமானத்திலேறிச் சென்றான்."

79—ம் ஸர்கம்.

தண்டகாரணிய விருத்தாந்தம் : இக்ஷ்வாகுவின் பிள்ளையான தண்டனுடைய கதை.

இந்தக் கதையைக் கேட்டு ராமன் ஆச்சரிய மடைந்து, சுவேதன் தபஸ் செய்த அரணியம் எப்படி நிர்ஜனமாயிற்றென்று கேட்க, அகஸ்தியர் சொல்லலானார்.

அகஸ்தியர்—

மூன்பு கிருத யுகத்தில் ராஜாவாயிருந்த மனு தன் பிள்ளை இக்ஷ்வாகுவை ராஜ்யத்தில் வைத் தனுக்ரஹித்து,—"ஜனங்களை தண்டத்தால் ரக்ஷி; அகாரணமாய் ஒருவரையும் தண்டியாதே."—என்று சொல்லிப் போனார். இக்ஷ்வாகுவுக்கு நூறு பிள்ளைகள் பிறந்தனர். கடைசிப் பிள்ளை மிகவும் துஷ்டனாயிருந்ததால் இக்ஷ்வாகு அவனை தண்டிக்க நினைத்து, தண்டனென்று அவனுக்குப் பெயர் வைத்து, விந்திய சைவல பர்வதங்களுக்கு மத்தியிலுள்ள ராஜ்யத்தைக் கொடுத்தார். அவ்விடத்தில் தண்டன் மதுமந்தம் என்றொரு பட்டணம் கட்டி சுக்ராசாரியரை ஆசாரியனாக வைத்துக் கொண்டு ராஜ்யத்தை ஆண்டு வந்தான்.

80—ம் ஸர்கம்.

தண்டன் ஆசாரிய புத்திரியான அரஜையை பலாத்காரமாய்ப் புணர்ந்தான்.

நெடு நாளாய் ராஜ்யபாலனம் செய்து கொண்டிருந்த தண்டன் ஒரு ஸமயம் அழகான சித்திரை மாதத்தில் சுக்ராசாரியருடைய ஆச்ரமத்துக்குப் போனான். அப்பொழுது சுக்ராசாரியர் ஆச்ரமத்திலில்லை. அங்கு கன்னிப்பருவத்தில் மிகுந்த அழகோடு விளங்கிய சுக்ராசாரியரின் மூத்த பெண் அரஜை என்பவளைக் கண்டு காமுற்ற தண்டன அணுகியதும், அவள் தடுத்து, பிதாவின் அனுமதியில்லாமல் இசைய மறுத்தாள். தண்டன் பலாத்காரமாய் அவளை அனுபவித்துத் திரும்பினான். அரஜை துக்கம் தாங்காமல் பிதாவின் வரவை எதிர்பார்த்திருந்தாள்.

81—ம் ஸர்கம்.

சுக்ராசாரியர் தணடன் சாம்பலாகுமாறும் அவனுடைய ராஜ்யம் மண்மாரியால் அழியுமாறும் சபித்தார்.

சிஷ்யன் மூலமாய் இச்செய்தி யறிந்த சுக்ராசாரியர் ஆச்ரமம் வந்து ஸூரிய கிரணத்தால் மங்கிய ப்ராதக்கால சந்திரன் போலிருந்த அரஜையைக் கண்டு, பசியின் மிகுதியாலும் மிக்க கோபம் கொண்டு—"இம்மாதிரி அகிருத்தியம் செய்த தண்டன் இற்றைக்கு ஏழாம் நாள் தன் பரிவாரத்தோடு நசிப்பான். அவனுடைய ராஜ்யம் முழுவதும் மண்மாரியால் அழியும். பெண்ணே! நீ இங்குள்ள குளத்துக்கருகிலேயே தபஸ் செய்துகொண்டு நல்ல காலத்தை

நோக்கியிரு.[1] இற்றைக்கு ஏழாம் நாளில் உன்னிடம் வரும் பிராணிகள் மட்டும் நசிக்காது."—என்று சொல்லித் தன் சிஷ்யர்களோடு வேறிடம் போனார்.

சுக்ராசாரியருடைய சாபத்தின்படியே தண்டன் தன்பரிவாரத்தோடு சாம்பலானான்; மண்மாரி பெய்து ராஜ்யம் அழிந்தது. அதுமுதல் தண்டனுடைய ராஜ்யத்துக்கு தண்டகாரணியம் எனப் பெயராயிற்று.

ராமா! நீர் கேட்டதனைத்தையும் சொன்னேன். ஸூரியாஸ்தமனமாகிறது. ஸந்தியா வந்தனம் செய்வீராக.

82—ம் ஸர்கம்.

ராமன் அகஸ்தியரிடம் விடை பெற்று அயோத்தி சேர்ந்தார்.

ராமன் ஸந்தியா வந்தனம் செய்ததும் அகஸ்தியர் அவருக்கு விருந்தளித்தார். மறுநாள் பொழுது விடிந்ததும், ராமன் கர்மானுஷ்டானம் முடித்து, அகஸ்தியரை அடிபணிந்து விடை கொள்கையில்—"ராமா! உம்மை நொடிப் பொழுதேனும் கண்டோர்க்குப் புண்ணியமுண்டு. உம்மை விரோதிப்பவர்க்குப் பாபமே பலிக்கும். உம்முடைய கதையைச் சொல்லுவோர் ஸித்தி பெறுவார்கள். ராஜ்யத்தை தர்மமாய்ப் பரிபாலனம் பண்ணும்."—என்று அனுக்ரஹித்தார் அகஸ்தியர்.

ராமன் புஷ்பகமேறிப் புறப்பட்டு, மத்தியானம்[2] அயோத்தி சேர்ந்து, அரண்மனையின் நடுக்கூடத்தில் புஷ்பகத்தை விட்டிறங்கி,

---

1. சுக்ராசாரியருடைய மூத்த பெண் அரஜை கலியாணமாகு முன்னரே தண்டனால் கெடுக்கப்பட்டு இந்த கதியை யடைந்தாள். இவளுக்கு நல்லகாலம் எப்பொழுது நேரிட்டதென்று புராணாந்தரங்களில் தேடிப்பார்க்கவேண்டும். இரண்டாவது பெண் தேவயானி முதலில் கசனை ஆசைப்பட்டு, பிறகு யயாதியைக் கலியாணம் செய்து கொண்டு, தன் சக்களத்தியான சர்மிஷ்டையோடு சண்டையிட்டு பர்த்தாவுக்கும் பிரியமில்லாமலிருந்தாள். சுக்ராசாரியருடைய இரண்டு பெண்களும் இப்படி வக்ரமாயினர்.

2. 52ம் ஸர்கத்தில், ரதத்தில் புறப்பட்ட லக்ஷ்மணன் கேசினியிலிருந்து புறப்பட்டு மத்தியானம் அயோத்தி சேர்ந்தான். இங்கு தண்டகாரணியத்திலிருந்து புஷ்பகத்தில் காலையில் புறப்பட்ட ராமன் மத்தியானம் அயோத்தி சேர்ந்தார். கேசினிக்கும் அயோத்திக்கும், தண்டகாரணியத்துக்கும் அயோத்திக்கும் உள்ள தூரம் எவ்வளவென்று தெரிந்தால் ரதத்துக்கும் புஷ்பகத்துக்குமுள்ள வேகம் இவ்வளவென்று தீர்மானிக்கலாம்.

அதனை அனுப்பிவிட்டு, பரதலக்ஷ்மணர்களை அழைக்குமாறு த்வார பாலனை அனுப்பினார்.

83—ம் ஸர்கம்.

ராமன் ராஜஸூய யாகம் செய்ய விரும்பினார். பரதன் ராஜஸூய யாகம் வேண்டாமென்று அறிவித்தான்.

த்வாரபாலன் பரத லக்ஷ்மணர்களை அழைத்து வந்ததும், ராமன் அவர்களைக் கட்டியணைத்து,—"ப்ராம்மண காரியத்தைப் பூர்த்தி செய்தாயிற்று. இனி தர்மத்துக்கு அணைபோன்ற உத்தமமான ராஜஸூய யாகம் செய்ய விரும்புகிறேன். அதைப்பற்றி உங்கள் யோசனை யாது? சொல்லுங்கள்"—என்று கேட்டார்.

பரதன்—

பூமண்டலத்திலுள்ள எல்லா அரசர்களையும் வீரர்களையும் வென்று செய்ய வேண்டிய தொரு ராஜஸூய யாகத்தை மன்னவராலும் பிரஜைகளாலும் பிதாவாக பாவிக்கப்படும் தேவரீர் செய்வது அடுக்குமோ! ராஜஸூய யாகத்தினால் எல்லா ராஜாக்களுக்கும் கோபமுண்டாகும்.

ராமன்—

பரதா! தர்மம் தவறாத உன் வார்த்தையின்படியே நான் ராஜஸூய யாகம் செய்வதினின்று நிவிருத்தனாய் விட்டேன்.

84—ம் ஸர்கம்.

லக்ஷ்மணன் அசுவமேத யாகத்தின் பெருமையைச்சொன்னான். தவம் செய்து கொண்டிருந்த விருத்திராஸுரனை இந்திரன் வதம் செய்ய முயன்றான்.

பரதன் இவ்வாறு பேசியதும், லக்ஷ்மணன் பேச ஆரம்பித்தான்:—

லக்ஷ்மணன்—

அசுவமேதயாகமே மிகவும் உத்தமமானது. முன்பு இந்திரன் பிரம்மஹத்தி தோஷத்திலிருந்து விடுபட்டது அசுவமேத யாகத்தினாலேயே. எப்படியெனில்,—

விருத்திராஸுரன் முன்பு உலகத்துக்கு ஹிதமாயிருந்து தர்மமாய் ராஜ்யபாலனம் செய்த பிறகு தவம் புரிகையில், இந்திரன் விஷ்ணுவினிடம் போய், "விருத்திராஸுரனை என்னால் வதம் செய்ய

முடியவில்லை. அவன் இன்னும் தபஸ் செய்தால, உலகம் முழுவதும் அவனுடைய வசமாய்விடும். விருத்திராஸுரனை வதம் செய்து தேவர்களைக் காத்தருள்வீராக."—என்று வேண்டினன.

85—ம் ஸர்கம்.

விருத்திராஸுரனை வதம் செய்ததால் இந்திரனை பிரம்மஹத்தி தோஷம் பிடித்துக் கொண்டது.

இந்திரனுடைய வார்த்தையைக் கேட்டு, விஷ்ணு—"விருத்திராஸுரன் மிகுந்த தர்மசீலனுதலால், அவனை வதம் செய்ய முடியாது. ஆனல், தேவர்களின் காரியத்தையும் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. ஆகையால், நான் என்னை மூன்று பாகமாக்கிக் கொள்கிறேன். முதல் பாகம் இந்திரனிடத்திலும், இரண்டாவது அவனுடைய வஜ்ராயுதத்திலும், மூன்ருவது பூமியிலும் இருக்கட்டும். இந்திரன் விருத்திரனை எளிதாய் வதம் செய்யலாம்."—என்ருர்.

தேவர்கள் ஸந்தோஷமாய் விடை பெற்று விருத்திராஸுரனை வதம் செய்யப் போனுர்கள். தபஸ் செய்து கொண்டிருந்த விருத்திரனுடைய தேஜஸ்ஸைப் பார்த்து தேவர்களுக்குக் கலக்க முண்டாயிற்று. இந்திரன் விருத்திரன்மீது வஜ்ராயுதத்தை வீசலும் விருத்திரன் உயிர் துறந்தான். இந்திரனை பிரம்மஹத்தி தோஷம் பிடித்துக் கொண்டது. தேவர்கள் விஷ்ணுவினிடம் போய் முறையிட்டார்கள். "என்னை உத்தேசித்து இந்திரன் அசுவமேதயாகம் செய்தால் இந்திரனைப் பரிசுத்தனுக்குகிறேன்"—என்ருர் விஷ்ணு.

86—ம் ஸர்கம்.

இந்திரன் அசுவமேதயாகம் செய்து பிரம்மஹத்தி தோஷத்தி லிருந்து விடுபட்டான்.

தேவர்கள் அசுவமேதயாகத்தை ஆரம்பித்தனர். யாகம் முடிந்ததும், பிரம்மஹத்தி தோஷம் இந்திரனை விட்டு விலகி,—'இனி நான் எங்கிருப்ப' தென்று கேட்க,—'உன்னை நாலு பாகமாக்கிக் கொள்' என்ருர் தேவர்கள்.

"பூர்ணப் பிரவாஹமாயுள்ள நதியில் ஒரு பாகத்தோடு இரண்டு மாஸ காலமும், ஒரு பாகத்தோடு பூமியிலும், யௌவன சாலியான ஸ்திரீகளிடத்தில் ஒரு பாகத்தோடு மூன்று நாளும், பிராம்மணர்களைக் கொல்லுபவர்களிடம் ஒரு பாகத்தோடும் வஸிக்

கிடும்." என்று பிரமஹத்தி சொல்லிப் போயிற்று. தேவர்கள் இந்திரனை அழைத்துக் கொண்டு தேவலோகம் போயினர்.

அசுவமேத யாகத்தின் பிரபாவம் இத்தன்மையது காணும்!

87—ம் ஸர்கம்.

இளோபாக்கியானம்: சிவபெருமானுடைய சக்தியால் ஸ்திரீயாக மாறிய இளனை ஒரு மாஸம் ஸ்திரீயாகவும் ஒரு மாஸம் புருஷனாகவும் இருக்கும்படி பார்வதி அனுக்ரஹித்தாள்.

லக்ஷ்மணன் சொல்லி முடித்த பிறகு, ராமனும் அசுவமேத யாகத்தின் பெருமையைச் சொல்லலானார்.

ராமன்—

முன்பு கர்தம ப்ரஜாபதி யின் புத்திரனான இளன் பாஹ்லீக தேசத்தை ஆண்டு வருகையில், ஒரு ஸமயம் சித்திரை மாஸத்தில் வேட்டையாடிக் கொண்டு, ஸுப்ரமணியன் பிறந்த வனத்துக்குப் போனான். அங்கு சிவபெருமான் தன்னையும், அவ்வனத்திலுள்ள ஸகல ஜீவராசிகளையும் ஸ்திரீரூபமாய் மாற்றி, பார்வதி தேவிக்கு விநோதத்தை யுண்டுபண்ணிக் கொண்டிருந்தார். எல்லாம் ஸ்திரீ மயமாயிருப்பது கண்டு வியந்த இளனும் அவ்வனம் போனவுடன், தன் பரிவாரத்தோடு ஸ்திரீயாக மாறினான். இளன் மிகவும் துக்கித்து, 'இது சிவபெருமானுடைய திருவிளையாடல்' என்று நிச்சயித்து, அவரை சரணாகதி பண்ண, அவர்—'புருஷனாவதொன்று தவிர, மற்று எதுவானாலும் கேள்'—என்றார். பிறகு இளன் பார்வதியை சரணாகதி பண்ணினான்.

"நான் கொடுக்கும் வரம் பாதி தான் பலிக்குமாகையால், ஒரு மாஸம் ஸ்திரீயாயும் அடுத்த மாஸம் புருஷனாயுமிருப்பாய். ஸ்திரீயாயிருக்கையில் புருஷனாயிருந்த நினைவும், புருஷனாயிருக்கையில் ஸ்திரீயாயிருந்த நினைவும் உனக்கு இராது"—என்றாள் பார்வதி.

88—ம் ஸர்கம்.

புதன் இளையைக் கண்டு மோஹித்தான்.

பரத லக்ஷ்மணர்கள்—

இளன் கொஞ்ச நாள் ஸ்திரீயாகவும் கொஞ்ச நாள் புருஷனாகவு மிருந்து எப்படிக் காலம் கழித்தான்.?

ராமன்—

இளை தன்னோடு மாறின பெண்களுடன் தினந்தோறும் வனத்தில் சுற்றிக் கொண்டிருந்தாள். ஒருநாள் அந்த வனத்தில் ஒரு பர்வதத்தின் பக்கலில ஒரு குளத்தில் சந்திர புத்திரனுன புதன் ஜலத்துக்குள் தபஸ் செய்து கொண்டிருந்தான். இளை தன் ஸ்திரீகளோடு அக்குளத்துக்குப் போய் விளையாடினாள். புதன் இளையின் மனோசோத்தரமான அழகைக் கண்டு காமுற்று அவளுடைய விருத்தாந்தத்தைத் தோழிகளிடம் கேட்டான். தோழிகள் சொன்னதிலிருந்து இளையின் வரலாறு விளங்கவில்லை. ஆவர்த்தனீ என்ற வித்தையால் புதன், அவளுடைய விருத்தாந்தம் முழுவதையும் தெரிந்து கொண்டு, இளையின தோழிகள் அனைவரையும் கிம்புருஷிகளாக்கி,—'உங்களுக்குக் கிம்புருஷர்கள் பர்த்தாக்களாவார்கள்'— என்று சொல்லி ஓர் மலையடிவாரத்துக்கு அனுப்பிவிட்டான்.

89—ம் ஸர்கம்.

இளை புதனுடைய ஸம்பந்தத்தால் புரூரவஸ்ஸைப் பெற்றாள்.

எல்லாப் பெண்களும் சென்ற பிறகு, புதன் இளையிடம் போய்த் தன்னை இன்னாரென்று சொலலிக்கொண்டு, அவள்மீது தனக்குண்டான காதலை யறிவித்தான். இளையும் இசைந்து புதனோடு பல ஸுகங்களை அனுபவித்தாள். முதல் மாஸம் கடந்தவுடன் இளை படுக்கையிலிருந்து எழுந்தபோது இளனாய் மாறி அருகிலிருந்த புதனைப்பார்த்து,—

நான் வேட்டைக்காக அழைத்து வந்த ஸைனியம் எங்கே?—என்று கேட்டான்.

புதன்—

இங்கு கல் மழை பெய்ததால் உன் ஸைனியம் முழுவதும் மடிந்தது. நீ மட்டும இவ்வாச்ரமத்தில் தங்கிப் பிழைத்தனை.

இளன்—

நான் ராஜ்யத்துக்குப் போய் வருகிறேன். என்னுடைய புத்திரனுன சசபிந்துவுக்குப் பட்டம கட்டவேண்டும்.

புதன்—

நீ இங்கேயே ஒரு வருஷம் இரு. உனக்கு எல்லா மேன்மையும் உண்டாகும்.

இளன் அப்படியே இசைந்து, புருஷனாயிருக்கையில் புதனுக்கு மித்திரனாயும், ராஜ்யத்தைப்பற்றியே கவலை யுள்ளவனாயும், ஸ்திரீயாயிருக்கும் மாஸங்களில் புதனுக்குப் பிரியமான காதலியாகிப் பலவித லீலா ஸுகங்களை அனுபவித்துக் கொண்டுமிருந்தான். முதல் மாஸத்திலேயே இளை கர்ப்பமாகி ஒன்பதாம் மாஸத்தில் புரூரவஸ்ஸைப் பெற்றாள்.

90—ம் ஸர்கம்.

அசுவமேத யாகத்தினால் இளனுக்குப் பெண்மை நீங்கிற்று.

பரத லக்ஷ்மணர்கள்—

ஒரு வருஷம் கழித்து என்ன நடந்தது?

ராமன்—

ஸம்வர்த்தர், ச்யவனர், அரிஷ்ட நேமி—முதலியவர்களை புதன் வரவழைத்து இளனுக்கு நேர்ந்த சாபத்தை அறிவித்தான். எல்லோரும் பேசிக் கொண்டிருக்கையிலேயே இளனுடைய பிதா கர்தமரும் மற்றவர்களும் அவ்விடம் வந்தனர். அசுவமேதயாகம் செய்தால் சிவபெருமான் பிரீதராவார்—என்றார் கர்தமர். எல்லோரும் அதை ஆமோதித்தார்கள். அசுவமேதயாகம் நடந்தது. ஸம்வர்த்தருடைய சிஷ்யனான மருத்தன் யாகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். சிவன் மிகவும் பிரீதராகி[1] மஹர்ஷிகள் பிரார்த்தித்தபடி இளனுடைய சாபத்தை நீக்கி மறைந்தார்.[2]

இளன் பாஹ்லீக தேசத்தை விட்டு மத்திய தேசத்தில் பிரதிஷ்டானம் என்றொரு பட்டணம் கட்டி அதில் ராஜ்யபாலனம் செய்துவந்தான். அவனுடைய பிள்ளை சசபிந்து பாஹ்லீக தேசத்தில் ராஜ்யபாரம் வஹித்தனன். நாளடைவில் இளன் பிரம்ம லோகம் சேர்ந்ததும் புரூரவஸ் ராஜனாகிப் பிரதிஷ்டான நகரத்தில் ராஜ்யபாலனம் செய்து கொண்டிருந்தான்.

அசுவமேதத்தினுடைய பிரபாவம் இத் தன்மையது பார்!

---

1. 85ம் ஸர்கத்தில் சொன்னபடி அசுவமேதயாகத்தினால் விஷ்ணு பிரீதராக வேண்டியிருக்க சிவன் எப்படிப் பிரீதரானார்?—இந்த சைவ வைஷ்ணவ ஆக்ஷேபத்தை இந்த ஸர்கத்தில் வியாக்கியாதாக்களே கையாடுகிறார்கள். அதில் கண்டுகொள்வது.

2. இளனுடைய சரித்திரம் ஸ்ரீபாகவதம் 9ம் ஸ்க. முதல் அத்தியாயத்தில் மாறுபட்டிருக்கிறது.

91—ம் ஸர்கம்.

ராமன் கோமதி தீரத்தில் அசுவமேதயாகம் நடத்த ஏற்பாடு செய்தார்.

ராமன் வஸிஷ்டர் வாமதேவர் முதலான ரிஷிகளை வரவழைத்து தான் அசுவமேதயாகம் செய்ய விரும்புவதைத் தெரிவித்தார். ரிஷிகள் எல்லோரும் அதை ஆமோதித்தனர்.

ஸுக்ரீவன் முதலான வானரர்களையும், விபீஷணன் முதலான ராக்ஷஸர்களையும், எல்லா மஹரிஷிகளையும், தேசாந்தரம் போயிருந்த ஸகல பிராம்மணர்களையும், ஸூத்ரதாரர்கள், நட நர்த்தகர்கள் முதலானோரையும் யாகத்துக்கு அழைத்து வருமாறு ராமன் தூதர்களை அனுப்பி,—கோமதீ தீரத்திலுள்ள நைமிசாரணியத்தில் யக்ஞவாடத்தை அமைக்குமாறும், யாகத்துக்கு வேண்டிய ஸாமக்ரி யாவற்றையும் ஸுவர்ண பிம்பமாயுள்ள தன் பத்தினி[1] ஸீதையையும், தன் தாயார்களையும், அழைத்துக் கொண்டு போகுமாறும் பரதனுக்குக் கட்டளையிட்டார்.

92—ம் ஸர்கம்.

ராமன் அசுவமேத யாகம் செய்தார்.

அசுவமேத யாகத்துக்காக ராமன் லக்ஷணம் பொருந்திய குதிரையைத் தேர்ந்தெடுத்து லக்ஷ்மணனோடு அனுப்பிவிட்டு, ஸைனியத்துடன் நைமிசாரணியம் போய்ச் சேர்ந்தார். எல்லா அரசர்களும் ராமனுக்கு வெகுமானம் கொண்டுவந்து கொடுத்தனர். ஸுக்ரீவன் முதலான வானரர்கள் பிராம்மணர்களையும், விபீஷணன் முதலானோர் மஹரிஷிகளையும், பரத சத்ருக்னர்கள் அரசர்களையும் உபசரித்தனர்கள். லக்ஷ்மணன் குதிரையை ஓட்டிக் கொண்டு போய்த் திரும்பி வந்ததும் யாகம் வெகு விமரிசையாய் நடந்தது.

93—ம் ஸர்கம்.

யாகம் நடக்குமிடத்தில் ராமாயணத்தை கானம் செய்யும்படி வால்மீகி குசலவர்களுக்குச் சொன்னார்.

ராமனுடைய யாகத்தைப் பார்ப்பதற்காக கங்காதீரத்தைவிட்டு நைமிசாரணியத்தில் தனியாக ஓர் விடுதி அமைத்துக்கொண்டு

---

1. பத்தினிக்கு பதிலாக பிரதிபிம்பத்தை வைத்துக்கொண்டு வைதிக காரியம செய்வது தர்மசாஸ்திர ஸம்மதம்.

வஸித்த வால்மீகி மஹரிஷி தம்முடைய சிஷ்யரான குசலவர்களை அழைத்து,—

"ராஜமார்கத்திலும், ரிஷிவாடங்களிலும், பிராம்மண அக்கிரஹாரங்களிலும் ராமாயணம் முழுவதையும் வீணையிலேற்றி கானம் செய்யுங்கள். மலையிலுண்டாகும் இந்தப் பழத்தை சாப்பிட்டுக் கொண்டே கானம் செய்தால் பசி களைப்பு—ஒன்றும் உண்டாகாது; ராமன் உங்களைக் கூப்பிட்டு கானம் செய்யச் சொன்னால், நான் கற்றுக்கொடுத்த மாதிரியிலேயே நாளுக்கு இருபது ஸர்கமாக கானம் செய்யுங்கள். ராமன் தனம் கொடுத்தால் வாங்க வேண்டாம். யாருடைய புத்திரர்கள் என்று கேட்டால், வால்மீகி சிஷ்யர்கள்— என்று சொல்லுங்கள்." என்றார்.

94—ம் ஸர்கம்.

ராமன் ராமாயண கானம் கேட்டார்.

குசலவர்கள் மறுநாள் நித்திய கர்மானுஷ்டானத்தை முடித்துக் கொண்டு ராமனிருக்குமிடத்துக் கருகாமையில் ராமாயணத்தை கானம் செய்யலானார்கள். யாகத்தினிடையில்[1] ராமன் குசலவர்களின் கானத்தைக் கேட்டு, அவர்களை அழைத்து கானம் செய்யச் சொல்லி அதனைக் கேட்கவல்ல பல வித்துவான்களையும் வருவித்தார். பல விதமான முகக் குறிப்பிலும் அழகிலும் ராமனையே ஒத்திருக்கும் குசலவர்களுடைய லக்ஷணத்தைக கண்டு யாவரும் வியப்பெய்தினர். முன்பு நாரதர் உபதேசித்த ஆதி ஸர்கம்முதல் ராமாயணத்தில் இருபது ஸர்கம் கானம் செய்யப்பட்டது. ராமன் ராமாயணம் கேட்டு வியந்து குசலவர்களுககு ஏராளமான தனம் கொடுக்குமாறு கட்டளையிட்டார். குசலவர்கள் அதை வாங்க மறுத்தனர்.

ராமன்—

இந்த ராமாயணம் எவ்வளவு பெரிது? இது எதுவரையில் எழுதப்பட்டது? இதை எழுதியது யார்? அவர் எங்கிருக்கிறார்?

குசலவர்கள்—

ராமாயணம் இயற்றியது வால்மீகிபகவான். அவர் இங்கு யாகத்துக்கு வந்திருககிறார். ராமாயணம் 24,000 சுலோகம், 100

---

1. யாகத்தில் மத்தியந்தின ஸவனத்துக்கும் ஸாயம்ஸவனத்துக்கும் இடையில் புண்யகீர்த்தனம் செய்யவேண்டியதாகையால் அந்த ஸந்தர்பத்தில் ராமாயணகானம் கேட்கப்பட்டது.

உபாக்கியானம், 500 ஸர்கம்,[1] முதலில் ஆறு காண்டம், கடைசியில் உத்தரகாண்டம்—இப்படி எங்கள் ஆசாரியனால் உம்முடைய சரித்திரம் அமைக்கப்பெற்றது. கதாநாயகனுடைய ஜீவகால பரியந்தமான விஷயம் இதில் அடக்கம். இதைக் கேட்க விருப்பமாகில், காரியம் முடிந்ததும் விநோதமாய்க் கேட்கலாம்.

ராமன் அப்படியே ஒப்புக்கொண்டார். குசலவர்கள் வால்மீகியிடம் போயினர்.

95—ம் ஸர்கம்.

உலகத்தாருடைய நம்பிக்கைக்காக ராமன் ஸீதையை சபதம் செய்யச் சொன்னார்.

ராமன் நெடுநாளாய் ராமாயணம் கேட்கையில், குசலவர்களை ஸீதையின் புத்திரர்களென்று அறிந்து,[2] நல்லொழுக்கமுள்ள சில தூதர்களை ஸபை நடுவே வரவழைத்து,—"ஸீதை பதிவிரதையாகில், நாளைக் காலையில் இந்த ஸபைக்கு வந்து சபதம் செய்யட்டும்"—என்று வால்மீகிக்குச் சொல்லியனுப்பினார். தூதர்கள் வால்மீகியிடம் போய் ராமன் சொன்னதை யறிவிக்கவும்,—"ஸ்திரீகளுக்கு பர்த்தாவே தெய்வமாகையால் ஸீதை ராமனுடைய சொல்படியே செய்வாள்"—என்று சொல்லியனுப்பினார் வால்மீகி. "ஸீதையின் சபதத்தைப் பார்க்க விரும்புவோர் யாவரும் நாளை இந்த ஸபைக்கு வந்து பார்க்கட்டும்"—என்று ராமன் மஹர்ஷிகளுக்கும் மன்னவர்களுக்கும் சொன்னார். யாவரும் ராமனைப் புகழ்ந்தனர். ராமன் எல்லோரையும் அனுப்பி ஸபையைக் கலைத்து உள்ளே போனார்.

96—ம் ஸர்கம்.

ஸீதை சபதம் பண்ணுவதற்காக வால்மீகியோடு ஸபைக்கு வந்தாள்.

---

1. யுத்தகாண்டம் வரைக்குந்தான் 500 ஸர்கம்.

2. உ. கா. 71ம் ஸர்கத்தில் ராமாயணகானம் செய்யும் குசலவர்களை சத்ருக்னன் பார்த்தான. ராமாயணகானத்தினிடையில் ராமன் குசலவர்களை ஸீதையின் புததிரர்களென்று தெரிந்துகொண்டதாகச் சொல்லுவதால் உ. கா. 71ம் ஸர்கத்தை கானம்செய்தபோதுதான் ராமன் தெரிந்துகொண்டிருக்கவேண்டும். பா. கா. 4ம் ஸர்கத்தில் குசலவர்கள் ராமன் போலிருந்ததாக மட்டும் சொல்லப்பட்டதேயன்றி ஸீதாபுத்திரர்களென்றாவது ராமபுத்திரர்களென்றாவது சொல்லவில்லை. ஆகையால் உ. கா. 71ம் ஸர்கம் கானம் செய்யும்போது தான் குசலவர்கள் ஸீதையினுடைய பிள்ளைகளென்று ராமன் தெரிந்துகொண்டதாகச் சொல்லலாம்.

மறுநாள் பொழுது விடிந்ததும் ராமன் ஸபைக்கு வந்தார். ஸீதையின் சபதத்தைக் காண்பதற்காக மஹரிஷிகள், மன்னவர்கள், ராக்ஷஸர்கள், வானரர்கள், பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்ரர் முதலிய யாவரும் வந்து கூடினர். வால்மீகி எல்லோரும் வந்ததை யறிந்து ஸீதையை அழைத்துக்கொண்டு புறப்பட்டார். வால்மீகியின் பின்னால் ஸீதை கைகூப்பிக் கண்ணீர் வடித்து, ராமனைத் தியானம் செய்து கொண்டே வந்தாள். பிரம்மாவைப் பின் தொடரும் சுருதி போன்ற ஸீதையைக் கண்டு யாவரும் திகைத்தனர். வால்மீகி ஸீதையோடு ஸபை நடுவே வந்து—"ராமா! இந்த மஹாபதிவிரதை அபவாத நிமித்தமாய் என் ஆச்ரமத்தருகே விடப்பட்டாள். லோகாபவாதத்துக்கு பயந்த உமக்கு இவள் இப்பொழுது நம்பிக்கையுண்டு பண்ணுவாள். ஸீதைக்கு இரட்டையாய்ப் பிறந்த குசலவர்கள் உம்முடைய பிள்ளைகளென்று நான் ஸத்தியமாய்ச் சொல்லுகிறேன். நான் வருணபகவானுடைய பத்தாவது புத்திரன். பொய்யான வார்த்தையை நான் நினைத்ததேயில்லை. ஸீதை துஷ்டையாகில், நான் நெடுநாள் செய்த தவத்தின் பலத்தை இழக்கிறேன். ஸீதை மஹாபரிசுத்தை யென்றறிந்தே நான் காட்டில் அவளை கிரஹித்தேன்."

97—ம் ஸர்கம்.

ஸீதை சபதம் செய்து பாதாளத்தில் பிரவேசித்தாள்.

வால்மீகி இவ்வாறு சொன்னதும் ஸீதையைச் சற்று உற்று நோக்கிய ராமன்—

"ஸீதையினிடம் எனக்கே நம்பிக்கையுண்டு. உம்முடைய பரிசுத்தமான வார்த்தையாலும் நம்புகிறேன். முன்பு தேவர்களின் முன்னிலையிலேயே இவள் சபதம் செய்து நம்பிக்கை யுண்டானதால்தான் வீட்டுக்கு அழைத்துவரப்பட்டாள். ஆயினும், லோகாபவாதம் பெரிதாகையால் இவளைப் பரித்தியஜிக்கலாயிற்று. குசலவர்களை என்னுடைய புத்திரர்களென்றறிவேன். ஸீதையினிடம் எனக்கு எப்பொழுதும் பிரீதி இருக்கவேண்டும்"—என்றார்.

ராமனுடைய கருத்தறிந்த தேவர்கள் யாவரும் பிரம்மாவை முன்னிட்டுக்கொண்டு அவ்விடம் வந்து கூடினர். அப்பொழுது திவ்ய பரிமளத்தோடு வாயு சுபமாக வீசிற்று. கிருதயுகத்தில் போல அங்குள்ளோருக்கு வாயுவின் உருவம் தெரிந்தது. காஷாய வஸ்திரம் தரித்து கையும் அஞ்சலியும் கவிழ்தலையுமிட்டு நின்ற ஸீதை—

"நான் ராமனையன்றி யாரையும் நினையாவிடில், எனக்கு பூமிதேவி இடம் கொடுக்கக் கடவள்.

"மனத்தாலும், செய்கையாலும், சொல்லாலும் நான் ராமனைப் பூஜித்தவளாகில், எனக்கு பூமிதேவி இடம் கொடுக்கக் கடவள்.

"நான் இப்படிச் சொல்லுவது உண்மையாகில், நான் ராமனை யல்லால் மற்றேது மறியாவிடில், எனக்கு பூமிதேவி இடம் கொடுக்கக் கடவள்"—என்றாள்.

உடனே பூமிவெடித்து நாகங்களால் தரிக்கப்பட்ட ஸிம்மாஸன மொன்று வெளிவந்தது. அதிலிருந்த பூமிதேவி ஸீதையைத் தன்னிடம் உட்காரவைத்துக் கொண்டதும் ஸீதையின்மேல் புஷ்பவர்ஷம் வர்ஷித்தது. ஸபையிலுள்ளோர் யாவரும் கலங்காநிற்கையிலேயே ஸீதை பூமியில் பிரவேசித்தாள்.[1]

ஸீதையின் கற்பு இத்தன்மையதா!—என்று யாவரும் திகைத்தனர். சிலர் ஸீதையைப் பார்த்தவாறிருந்தனர்; சிலர் ராமனைப் பார்த்தவாறுயினர். அப்பொழுது உலகமடங்கலு மொருங்க மோஹித்துக் கிடந்தது.

---

1. ஸீதை பூமியில் பிரவேசித்த விவரத்தை மணவாள மாமுனிகள் ஸ்ரீவசனபூஷண வியாக்கியானத்தில் ஸங்கிரஹத்திருக்கிறார். அது இங்கு எடுத்தெழுதப்படுகிறது.

"பெருமாள் அசுவமேதம் பண்ணியருளாநிற்கச செய்தே;—ஸ்ரீவால்மீகி பகவானுடைய நியோகத்தாலே குசலவர்கள் வந்து, ஸ்ரீராமாயணத்தைப் பாடிக்கொண்டு திரியாநிற்க;—அத்தைப் பெருமாள் திருச்செவி சாத்தி, ஸந்நிதியிலே அவர்களை யழைத்து, விசேஷக்ஞரெல்லாரையும் கூட்டி, அவர்கள்பாட்டுக் கேளாநிற்கிற நாளிலே;—அவர்களைப் பிராட்டியினுடைய பிள்ளைகளென்றறிந்தவனந்தரம் பிராட்டியளவிலே திருவுள்ளம் சென்று;—"தனக்கேற சுத்தையாகில் கடுக வித்திரளிலே நாளை வந்து பிரத்தியயமுகத்தாலே தன் சுத்தியைப் பிரகாசிப்பாளாக"—என்று தூதமுகேன பெருமாள் மஹரிஷிக்கும் பிராட்டிக்கும் அறிவித்துவிட;—அப்படியே ஸ்ரீவால்மீகிபகவானை முன்னிட்டுக்கொண்டு அந்த மஹாபரிஷத்திலே பெருமாள்ஸந்நிதியிலே வந்து ஒடுங்கி நிற்கச செய்தே;—ஸ்ரீவால்மீகிபகவான் இவள் சுத்தை யென்னுமிடம் பலமுகத்தாலும் சொல்ல;—பெருமாளும்—"இவள் சுத்தை யென்னுமிடம் நானுமறிவன். மஹரிஷி சொன்னதுவே போதும். ஆனாலும், லோகாபவாத பரிஹாரார்த்தமாக ஒரு பிரத்தியயம் இத்திரளிலே பண்ணவேணும்"—என்று திருவுள்ளமானபடியாலே.........(பிராட்டி) கையும் அஞ்சலியும் கவிழ்தலையு மிட்டுக்கொண்டு.........சபதம் பண்ண;—அவ்வளவிலே பூமியில் நின்றும் ஒரு திவ்ய ஸிம்மாஸனம் வந்து தோன்ற;—அதிலே ஸ்ரீபூமிப் பிராட்டி இவளை ஸ்வாகத ப்ரச்ன பூர்வகமாக இரண்டு கையாலு மெடுத்துக்கொண்டுபோய் வைக்க;—ஆஸனகதையாய்க்கொண்டு ரஸாதலத்தைப் பிரவேசியாநிற்கிற விவளைக்கண்டு திவ்ய புஷ்ப விருஷ்டி இடைவிடாமல் இவள் மேலே விழுந்தது.

98—ம் ஸர்கம்.

ஸீதையைக் கவர்ந்ததுபற்றி பூமியை அழிக்கப்போன ராமனை பிரம்மா ஸமாதானம் செய்தார்.

ஸீதை பாதாளத்தில் பிரவேசித்த பிறகு, கையில் கோல் பிடித்தவாறே கண்ணீர் சொரிந்து, நெடும் போதைக்கு துக்கித்துக் கொண்டிருந்த ராமன் இறுதியாய்க் கோபம் கொண்டு—

"புதியதோர் சோகம் என் மனத்தைத் தீண்டுகிறது. நான் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே ஸீதை மறைந்தாள். முன்பு ஸமுத்திரத்துக்கப்பால் லங்கையில் மறைந்தபோதே மீட்கப்பட்ட ஸீதையை இப்பொழுது பூமியிலிருந்து மீட்பதரிதாமோ! ஏ, பூமி தேவி! ஸீதையைக் கொண்டுவருவாயாக. இல்லையேல், என் ரோஷத்தைக் காட்டுவேன். நீயே எனக்கு மாமி. பூமியை உழும் போது ஜனகர் உன்னிடமிருந்தே ஸீதையைக் கண்டெடுத்தார். ஸீதையைக் கொண்டுவா. இல்லையேல், எனக்கும் இடம் கொடு. பாதாளத்திலோ ஸ்வர்கத்திலோ நான் ஸீதையோடுகூடவே வஸிக்கிறேன். ஸீதைக்காக நான் மயக்கம் கொண்டிருக்கிறேன். ஸீதையைக் கொடாவிடில், மலையும் காடுமாயுள்ள உன்னிருப்பையே நான் அழிப்பேன். பிறகு யாவும் ஜலமாககடவது."

ராமன் இவ்வாறு சொல்லுகையில் பிரம்மா சொல்லலானார்:—

"ராமா! கோபம் கொள்ள வேண்டாம். முன்பு செய்து கொண்ட யோசனையையும் உம்முடைய வைஷ்ணவ ஸ்வரூபத்தையும் நினைப்பீராக. உம்முடைய தபோபலத்தினால் ஸீதை ஸுகமாக ஸ்வர்கம் சேர்ந்தாள். உமக்கு மீண்டும் அவளோடு சேர்க்கை ஸ்வர்கத்தில் தான் கிடைக்கும். இந்த ஸபைநடுவே நான் சொல்லும் வார்த்தையைக் கேளீர்: இது நீர் பிறந்தது முதல் அனுபவித்த ஸுகதுக்கங்களையும், இனி நடககப் போவதையும், முற்றுமனைத்தையும் வால்மீகி எழுதிய உத்தம காவியமாகும். இதுவே ஆதி காவியம். ராமனைத்தவிர யாரும் காவியத்தின் பெருமைக்குத் தக்காரார். உண்மைப் பொருளமைந்த ஆச்சரியமான ராமாயணத்தை நான் முன்னமே தேவர்களோடு கேட்டிருக்கிறேன். உத்தரபாகமென்ற இக்காவியத்தின் சேஷத்தையும் கேட்பீராக."

பிரம்மா இவ்வாறு சொல்லி மறைந்தார். "ராமாயணத்தின் மிச்ச பாகத்தை நாளை கேட்கிறேன்"—என்று ராமன் வால்மீகியிடம் சொல்லி, ஸபையைக் கலைத்து, குசலவர்களை அழைத்துக்கொண்டு[1] உள்ளே சென்றார்.

---

1. இன்று முதல்தான் குசலவர்கள் ராமனிடம் வஸிக்கலாயினர்.

99—ம் ஸர்கம்.

ராமன் ராமாயணத்தின் மிச்ச பாகத்தைக் கேட்டு அயோத்தி போய் வஸித்திருந்தார்.

பொழுது விடிந்ததும், ராமன் உத்தரகாண்ட சேஷத்தை கானம் பண்ணும்படி குச லவர்களுக்குச் சொல்லி அதனை மஹரிஷி களோடு கேட்டார். ஸீதையின் நினைவாயேயிருந்த ராம னுக்கு ஸீதையில்லா உலகம் சூன்யமாயிருந்தது. யாகத்துக்காக[1] வந்தவர்களனைவரையும் கௌரவித்தனுப்பி, குசலவர்களை அழைத் துக்கொண்டு ராமன் அயோத்தி சேர்ந்தார்.

ஸீதை பாதாளத்தில் பிரவேசித்த பிறகும் ராமன் மறு விவாகம் செய்துகொள்ளவில்லை. ஒவ்வொரு யாகத்திலும் ஸீதையின் ஸுவர்ணப் பிரதிமையே பத்தினியாயிருந்தது. ராமன் பதினாயிரம் வருஷம்[2] வஸித்திருந்து அநேகம் அசுவமேதம், வாஜபேயம், அக்னிஷ்டோமம், கோஸவம்,—முதலிய யாகங்களை விமரிசையாகச் செய்து கொண்டிருந்தார்.

பிரஜைகள் ராமனுடைய கட்டளையிலேயே மிகுந்த பிரீதி யோடிருந்தனர். ராமராஜ்யத்தில் காலம் தவறாமல் மழை பெய்தது. அகாலத்தில் யாரும் மரிக்கவில்லை. பிராணிகள் வியாதியில்லாதிருந் தன. நெடுநாளுக்கப்பால், கௌஸல்யை ஸுமித்திரை கைகேயி மூவரும் காலகதியடைந்து ஸ்வர்கம் போய் தசரதனோடு சேர்ந்த னர். ராமன் பித்ருகாரியங்களையும் செவ்வையாய் நடத்திக்கொண்டு நெடுநாள் ஸுகித்திருந்தார்.

100—ம் ஸர்கம்.

கந்தர்வர்களை வதம் பண்ணுவதற்காக ராமன் பரதனை அனுப் பினார்.

சில நாள் கழித்து, கேகயராஜனான யுதாஜித்து ராமனுக்கு பஹுமானமாக அளவற்ற செல்வத்தைக் கொடுத்து, ஆங்கிரஸ புத்திரரான தன் புரோஹிதர் கார்கியரை அனுப்பினான். ராமன் கார்கியரை எதிர் கொண்டழைத்துவந்து உபசரித்து,—"மாமா என்ன சொல்லியனுப்பினார்?"—என்று கேட்டார்.

---

1. 92ம் ஸர்கத்திலேயே யாகம் பூர்த்தியானது போலத்தோன்றி னாலும் யாகம இப்பொழுதுதான் முடிந்திருக்கவேண்டுமென்று தெரிகிறது. இதைப்பற்றிய விவரம் கடைசியில் வரும் உத்தரகாண்ட விமர்சத்தில் எழுதப்படும்.

2. ஸீதை பூமியில் பிரவேசித்த பிறகு ராமன் பதினாயிரம் வருஷம் வஸித்திருந்தார்—என்று இவ்விடத்திலும் வியக்தமாகிறது.

கார்கீயர் —

"ஸிந்து நதியின் இருபுறத்திலுமுள்ள அழகிய காந்தார தேசத்தை மஹா வீரர்களான மூன்று கோடி கந்தர்வ வீரர்கள் ரக்ஷித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கு ஒருவரும் போக முடியாது.[1] அவர்களை ஜயித்து அங்கு ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டும்—என்று யுதாஜித்து சொல்லியனுப்புகிறார்."

ராமன் இவ்வார்த்தையைக் கேட்டு,—"பரதன் தன்னுடைய பிள்ளைகள் தக்ஷனையும் புஷ்கலனையும் ஸைனியத்தோடு அழைத்துக் கொண்டு போய் கந்தர்வர்களை வென்று, அந்த தேசத்தை இரண்டாய்ப் பிரித்து, இரண்டு பிள்ளைகளுக்கும் கொடுத்து என்னிடம் திரும்பி வருவான்"[2]—என்று கார்கியருக்குச் சொல்லி, தக்ஷ புஷ்கலர்களுக்கு அப்பொழுதே கந்தர்வ ராஜ்யத்தைப் பட்டாபிஷேகம் செய்து வைத்தார்.

பரதன் ஸைனியத்தோடு தன் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு கேகயராஜனிடம் போய்ச் சேர்ந்தான்.

101—ம் ஸர்கம்.

பரதன் கந்தர்வர்களைக் கொன்று தன் பிள்ளைகளை காந்தார தேசத்துக் கரசர்களாக்கித் திரும்பிவந்தான்.

பரதன் வந்தது பற்றி யுதாஜித்து பெரிதும் மகிழ்ந்து அவனையும் ஸைனியத்தையும் காந்தார தேசத்துக்கு அழைத்துக்கொண்டு போனான். பரதனுக்கும் கந்தர்வர்களுக்கும் ஏழு நாள் கடும்போர் நடந்தது. பரதன் ஸம்வர்த்தகம் என்னும் காலாஸ்திரத்தைப் பிரயோகித்து, மூன்றுகோடி கந்தர்வர்களையும் கொன்று,—தன்னுடைய பிள்ளை தக்ஷனுக்குத் தக்ஷசிலாநகரத்திலும்[3] புஷ்கலனுக்குப் புஷ்கலாவதத்திலும் பட்டம் கட்டி,—ஐந்து வருஷம் அந்த

1. கந்தர்வர்கள் மஹா பலிஷ்டர்களாயிருக்கிறார்கள் என்பதொன்று தவிர அவர்களை வதம் செய்யும்படியாக அவர்கள் கேகய ராஜனுக்குச் செய்த தீங்கொன்றும் இங்கு தெரியவில்லை.

2. சத்ருக்னனை மதுராபுரிக்கு ராஜனாய் வைத்தது போல பரதனை காந்தார தேசத்துக்கு ராஜனாக்கி அவனை விட்டுப் பிரிந்திருக்க மனமில்லாமல், பிள்ளைகளுக்கு ராஜ்யத்தைக் கொடுத்து பரதன் திரும்பி வரவேண்டுமென்கிறார் ராமன்.

3. தக்ஷன் ராஜனாயிருந்ததால் தக்ஷசிலாநகரமென்று காரணப்பெயராயிற்று. இப்படியே ராமாதி நால்வருடைய பிள்ளைகளுக்கும் கிடைத்த பட்டணங்களின் பெயர்களைக் கண்டுகொள்வது.

தேசத்திலேயே இருந்து அதைச் சீர்திருத்தி,—அயோத்திக்குத் திரும்பி வந்து ராமனிடம் யாவற்றையும் தெரிவித்தான்.

102—ம் ஸர்கம்.

லக்ஷ்மணனுடைய பிள்ளைகளுக்குக் காருபத தேசத்தை முடி சூட்டப்பட்டது.

பரதன் கந்தர்வர்களை வதம் செய்து காந்தார ராஜ்யத்தை ஸ்தாபித்த செய்தி யறிந்த ராமன் மிகவும் மனமகிழ்ந்து,—லக்ஷ்மண னுடைய பிள்ளைகளான அங்கதனுக்கும் சந்திரகேதுவுக்கும் ஒரு ராஜ்யம் அமைகக்ச் சொன்னார். காருபத தேசத்தை லக்ஷ்மண புத்திரர்களுக்குக் கொடுக்கலாமென்று பரதன் சொன்னதும், அங்கதீய பட்டணத்தை அங்கதனுக்கும் சந்திரகாந்தத்தைச் சந்திர கேதுவுக்கும் ராமன் பட்டம் கட்டி அவர்களை அந்தந்த பட்டணத் துக்குப் பிரயாணமாக்கினார். அங்கதன் மேற்கு திக்குக்கும் சந்திர கேது வடக்கு திக்குக்கும் போனார்கள். அங்கதனோடு லக்ஷ்மணனும் சந்திரகேதுவோடு பரதனும் போய் ஒரு வருஷம் இருந்து, ராஜ்யத் தை ஸ்தாபித்துத் திரும்பி ராமனை உபசரித்துக் கொண்டிருந்தார்கள். ஸஹோதரர்களுக்குள்ள ஒற்றுமையினால் காலம் போவதுகூட தெரியவில்லை. தினந்தோறும் ராம லக்ஷ்மண பரதர்கள் ராஜ்ய காரியத்தை ஒழுங்காய் நிர்வஹித்துக் கொண்டே யிருக்கையில் பதினாயிரம் வருஷம்[1] கழிந்தது.

103—ம் ஸர்கம்.

ராமனைக் காண்பதற்காக பிரம்மாவினால் அனுப்பப்பட்ட காலன் ரிஷிவேஷத்தோடு ராமனிடம் வந்தான்.

சில நாள் சென்றதும், காலன் ரிஷிவேஷத்துடன் வெகுவேக மாய் அரண்மனை வாசலுக்கு வந்து ராமனைப் பார்க்க விரும்பினான். இது லக்ஷ்மணன் மூலமாய் ராமனுக்குத் தெரியலாயிற்று. ராமன் காலனைப் பூஜித்து வந்த காரியம் வினவினார்.

"நீர் ஹிதத்தைக் கோருவீராகில், நான் வந்த செய்தியை ரஹஸியமாய்ச் சொல்ல அனுமதிக்கவேண்டும். நாம் பேசுவதை

1. ஸீதாபரித்தியாகத்துக்குப் பிறகு ராமன் பதினாயிரம் வருஷம் இருந்தார் என்பதற்கு இதுவுமொரு ஆதாரம். ஆகவே, பதினாயிரம் வருஷம் கழித்து ஸீதையை ராமன் அகற்றினாரென்ற கக்ஷிக்கு வியக்த மாணப் பிரமாணம் இல்லை.

யார் பார்த்தாலும், கேட்டாலும், அவர் உம்மால் வதம் செய்யப்படு வார்"—என்றான் காலன்.

ராமன் லக்ஷ்மணனைப் பார்த்து,—"வாசலில் இரு. துவார பாலனை அப்பால் போகச் சொல். நானும் மஹரிஷியும் பேசுவதை யார் பார்த்தாலும், கேட்டாலும், அவனை நான் வதம் செய்வேன்"—என்று சொல்லிக் காலனை வந்தகாரியம் வினவினார்.

104—ம் ஸர்கம்.

ராமன் இனி தேவலோகத்துக்கு வரவேண்டுமென்று காலன் மூலமாய் பிரம்மா சொல்லி யனுப்பினார்.

காலன்—

"உம்முடைய லோகங்களை ரக்ஷிக்க நீரே திட்டம் செய்து கொண்டிருக்கிறீர். லோகங்களனைத்தையும் மாயையினால் அடக்கிக் கொண்டு ஸமுத்திரத்தில் படுத்திருந்த நீர் முதலில் என்னையும் பிறகு ஆதிசேஷனையும் ஸ்ருஷ்டித்து ஸ்ருஷ்டிக்கும் அதிகாரத்தையும் எனக்குகொடுத்தீர். விஷ்ணுரூபியாய் லோகங்களை ரக்ஷித்துக்கொண் டிருந்த நீர் ராவணவதத்துக்காகப் பதினோராயிரம் வருஷம் பூலோ கத்தில் வாஸம் செய்யத் தீர்மானித்த காலம் பூர்த்தியாகிவிட்டது. இனி தேவலோகத்துக்கு வரவேண்டும்."—என்று பிரம்மா சொல்லி யனுப்பினார்.

ராமன் இவ்வார்த்தையைக் கேட்டு தேவலோகத்துக்கு வருவ தாய்ச் சொல்லியனுப்பினார்.

105—ம் ஸர்கம்.

ராமனும் காலனும் பேசிக்கொண்டிருக்கையில் லக்ஷ்மணன் அருகில் போய் வாசலில துர்வாஸ மஹரிஷி காத்திருப் பதைத் தெரிவித்தான்.

ராமனும் காலனும் பேசிக்கொண்டிருக்கையில், துர்வாஸர் அதிவேகமாய் அரண்மனைக்கு வந்து, உடனே ராமனைப் பார்க்க வேண்டுமென்று வற்புறுத்தினார். சற்று பொறுத்திருக்க வேண்டு மென்று லக்ஷ்மணன் சொல்ல,—"இந்த க்ஷணத்திலேயே ராம னுக்கு என் வரவை அறிவிக்காவிடில், உன்னையும், உன் குலத்தை யும், ராஜ்யத்தையும், ராமனையும் இந்த நேரத்திலேயே சபிப்பேன்" என்றார் துர்வாஸர். 'துர்வாஸரை காக்கவைத்து எல்லோரும் அழிவதைவிட, காலன் பேசிக்கொண்டிருக்கையில் குறுக்கிட்டு நானொருவன் மடிவதே மேல்"—என்று நிச்சயித்து, லக்ஷ்மணன்

ராமனிடம் போய் துர்வாஸரின் வரவைத் தெரிவித்தான். லக்ஷ்மணன் போனபோது பேசிமுடித்த காலன் ராமனிடம் விடை பெற்றுப் போனான்.

ராமன் துர்வாஸரை வரவேற்று, வந்த காரியம் விசாரித்ததும், "ஆயிரம் வருஷமாய்த் தவம் செய்து இன்றே பூர்த்தி செய்த எனக்கு அன்னமிடுவீராக"—என்றார் துர்வாஸர். துர்வாஸரை அன்னமிட்டனுப்பியதும், காலன் பேசுகையில் லக்ஷ்மணன் குறுக்கிட்டதை நினைத்து ராமன் பெரிதும் வருந்தி ஒருவாறு ஸமாதானம் செய்து கொண்டார்.

106—ம் ஸர்கம்.

ராமன் லக்ஷ்மணனைப் பரித்தியாகம் செய்தார்.

லக்ஷ்மணன் துக்கத்தோடு வீற்றிருந்த ராமனிடம் வந்து,—"இக்ஷ்வாகு வம்சத்தவர்கள் பிரதிக்ஞை தவிரக் கூடாதாகையால் என்னை இப்பொழுதே நீர் வதம் செய்யவேண்டு" மென்று வற்புறுத்தினான். ராமன் மந்திரிகளையும் ரிஷிகளையும் வரவழைத்து, காலன் வந்தது முதல் நடந்ததனைத்தையும் தெரிவித்தார். "ராமா! நீர் லக்ஷ்மணனை விட்டுப் பிரிய வேண்டு மென்பது முன்னரே தெரிந்த விஷயம். உம்முடைய பிரதிக்ஞையை நிறைவேற்றி தர்மத்தைக் காத்தருள்வீராக"—என்றார் வஸிஷ்டர்.

"ஸாதுவை வதம் செய்வதும் பரித்தியாகம் செய்வதும் ஒன்றாகையால், லக்ஷ்மணா! உன்னை நான் பரித்தியஜித்தேன்"—என்றார் ராமன். உடனே லக்ஷ்மணன் திரும்பினான்; தன்னுடைய வீட்டுக்கும் போகவில்லை; நேராக ஸரயூநதி போய் ஆசமனம் செய்து கையுமஞ்சலியுமாய் நின்றவாறே இந்திரியங்களை ஒடுக்கி சுவாஸத்தை அடக்கினான். இந்திரன் தேவர்களோடுகூட வந்து, தேவர்களால் புஷ்பவருஷம் வருஷிக்கப் பெற்ற லக்ஷ்மணனை ஒருவருமறியாமல் எடுத்துச் சென்றான். விஷ்ணுவின் நாலிலொரு அம்சம் திரும்பி வந்ததுபற்றி மஹரிஷிகள் மகிழ்ந்தனர்.

107—ம் ஸர்கம்.

ராமன் குசலவர்களுக்குக் கோஸல தேசத்தைப் பட்டாபிஷேகம் செய்து வைத்தார்.

லக்ஷ்மணனுடைய பிரிவாற்றாமல் ராமன் மந்திரிகளையும் மஹரிஷிகளையும் மற்றுமுள்ள யாவரையும் வரவழைத்து,—"இப்பொழுதே நான் அயோத்தியை பரதனுக்கு முடிசூட்டி லக்ஷ்மணன்

போன போக்கிலே போய் விடுகிறேன். பட்டாபிஷேகத்துக்கான ஏற்பாடு செய்யுங்கள்"—என்றார். இக்கடுமொழியைக் கேட்ட ஜனங்கள் துக்கித்துத் தரையில் வீழ்ந்தனர். பரதனும் வெகுவாய் துக்கித்து—"நீர் இல்லாத ஸ்வர்கலோகத்தையும் நான் விரும்பேன். குசனைக் கோஸல தேசத்துக்கும் லவனை உத்தர கோஸலத்துக்கும் அரசராக்கி, நாம் ஸ்வர்கத்துக்குப் போவோம். இதை சத்துருக்கனுக்கு விரைவில் அறிவிப்பீராக"—என்றான்.

"பூமியில் வீழ்ந்துகிடக்கும் ஜனங்களின் விருப்பத்தையும் நிறைவேற்றவேண்டும்"—என்றார் வஸிஷ்டர். ராமன் ஜனங்களை எழுப்பி, "உங்கள் மனோரதம் யாது"—என்று கேட்க,—"நாங்கள் குடும்பத்தோடு உம்மையே பின்பற்றுவோம்"—என்றனர்.

ராமனும் அதற்கிசைந்து, அன்றையதினமே குசலவர்களுக்குக் கோஸல தேசத்தையும் உத்தர கோஸலத்தையும் பட்டம் கட்டி, சத்துருக்னனுக்கு ஆள்விடுத்தார்.

108—ம் ஸர்கம்.

விபீஷணன், ஹனுமான்—முதலியவர்களை ராமன் பூலோகத்திலேயே இருக்குமாறு அனுக்கிரஹித்தார்.

தூதர்கள் வழியில் தங்காமலே வேகமாய் இரவும் பகலும் பிரயாணம் செய்து மூன்று நாளில் சத்துருக்னனிடம் போய், ராமன் லக்ஷ்மணனைப் பரித்தியாகம் செய்ததையும், அயோத்தியைக் காலியாக்கி அயோத்தி வாஸிகளனைவரையும் தம்மோடு அழைத்துச் செல்வதற்காக விந்திய பர்வதத்தின் அடிவாரத்தில் குசாவதீ பட்டணத்தைக் குசனுக்கும், ச்ராவஸ்தீ பட்டணத்தை லவனுக்கும் முடிசூட்டியதையும் தெரிவித்தார்கள். சத்துருக்னன் தன் புத்திரர்களையும் புரோஹிதரான காஞ்சன மஹரிஷியையும் வரவழைத்து அனைத்தையும் விவரமாகச்சொல்லி, ராஜ்யத்தை இரண்டாக்கித் தன் பிள்ளை ஸுபாஹுவை மதுராபுரியிலும், சத்ருகாதியை விதிசையிலும் வைத்து தேரைப் பூட்டிக்கொண்டு புறப்பட்டு வந்து ராமனை அடிபணிந்தான்.

தூதர்களின் மூலமாய் ராமன் ஸ்வர்கம் போவதையறிந்த வானரர்களும் ராக்ஷஸர்களும் ராமனோடு போவதற்காக விரைவாய் வந்து சேர்ந்தார்கள். அங்கதனுக்கு ராஜ்யத்தைக் கொடுத்துவந்த ஸுக்ரீவனை ராமன் தன்னோடு அழைத்துச்செல்ல விரும்பி, விபீஷணனைப்பார்த்து,—"சந்திரஸூரியர்களும் என் கதையும் உள்ள

நாள் வரையில் நீ லங்கா ராஜ்யத்தை ஆளவேண்டும். ஸகல தேவர்களாலும் பூஜிக்கப்படுபவனும் நான் உனக்கு கொடுத்ததாயுள்ள இக்ஷ்வாகுகுலதனமான ஜகந்நாதனை[1] நீ ஆராதித்துக்கொண்டிரு"—என்றார்.

"என்னுடைய சரித்திரம் உள்ள வரையில் நீ பூலோகத்திலிருந்து என் ஆக்ஞையைப் பரிபாலிப்பாயாக"—என்று ஹனுமானுக்குச்[2] சொல்லி, ஜாம்பவான்,[3] மைந்தன், த்விவிதன்[4] ஆக மூவரையும் கலி[5] வரும் வரையில் பூலோகத்திலேயே இருக்குமாறும் அனுக்ரஹித்து,—மற்றுமுள்ளோர் யாவரையும் தம்மோடு கூட அழைத்துச் செல்ல விரும்பினார் ராமன்.

109—ம் ஸர்கம்.

ராமன் மஹாப்ரஸ்தானம் செய்தார்.

மறுநாள் பொழுது விடிந்ததும், வஸிஷ்டர் முறைப்படி ராமனுக்கு மஹாப்ரஸ்தானம் பண்ணிவைத்தார். ராமன் வெண்பட்டு தரித்து, கையில் தர்பையுடன் புறப்பட்டு, லக்ஷ்மியையும் பூமிதேவியையும் தன் பக்கங்களில் வரவிட்டு, புருஷவேஷத்துடன் பின் தொடரும் வேதங்களோடும், ஆயுதங்களோடும், மஹரிஷிகளோடும் கால் நடையாகவே சென்றார். பரதனும், சத்ருக்னனும்,

---

1. ரங்காநாதனை என்று புராணாந்தரங்களால் வியக்தமாகிறது. ராமபட்டாபிஷேகம் ஆனவுடனேயே ரங்கவிமானம் விபீஷணனுக்குக் கொடுக்கப்பட்டதாக "லபத்வா குலதனம் ராஜா லங்காம் ப்ராயாத் விபீஷண:" என்ற சுலோகத்துக்குத் தாத்பரியம் சொல்லுவார்கள்.

2. ஹனுமான் விபீஷணன்—ஆக இருவரும் ராமனால் ஏற்பட்ட சிரஞ்சீவிகள். விபீஷணன் ரங்கவிமானத்தை ஸ்ரீரங்கத்தில் பிரதிஷ்டை செய்த நிமித்தமாக ஹனுமானும் விபீஷணனும் ஸ்ரீரங்கத்தில் ஸேனை முதலியார் ஸந்நிதியிலிருந்துகொண்டு ரங்கநாதனுடைய உத்ஸவத்தில் ஸம்பந்தப்படுகிறார்கள். ஹனுமானும விபீஷணனும் மோக்ஷத்தையும் விட்டு ரகுநாதனுடைய தனமான ரங்கநாதனை அனுபவிக்கிறார்களென்று ஸ்ரீபராசரபட்டர் ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில் அபிப்பிராயப்படுவது காண்க.

3. ஜாம்பவதியைப் பெற்று கிருஷ்ணனுக்குக் கலியாணம் செய்து கொடுப்பதற்காக ஜாம்பவான் நிறுத்தப்பட்டார்

4. த்விவிதன் நரகாஸுரனுக்கு அனுகூலனாயிருந்து பலராமனால் வதம் செய்யப்பட்டான். பாக. 10ம் ஸ்க. 67ம் அத். பார்க்க.

5. மூன்றும் சதுர்யுகத்தின் திரேதாயுகத்திலிருந்த ராமன் 'கலி வரும் வரையில்' என்று சொன்னது கிருஷ்ணாவதாரத்துக்குப் பின்புள்ள கடைமுதல் 28வது கலியைக் குறிக்கிறது.

அயோத்தியா வாஸிகளான ஸகல ஜீவராசிகளும் ராமனைப் பின் தொடர்ந்தன.

110—ம் ஸர்கம்.

ராமன் விஷ்ணுசரீரத்தில் பிரவேசித்தார். ராமனைப் பின் தொடர்ந்தோர் யாவரும் ஸாந்தானிக லோகம் சேர்ந்தார்கள்.

ராமன் எல்லா ஜனங்களோடும் ஸரயூநதிக்குப் போய் ஜலத்தில் இறங்கினார். அநேகம் விமானங்களோடு அவ்விடம் வந்தார் பிரம்மா தேவர்கள் புஷ்பவர்ஷம் வர்ஷித்தனர். மங்கள வாத்தியங்கள் முழங்கின. காற்று ஸுகமாய் வீசிற்று. பிரம்மா ராமனைத் தம்பிகளோடு பூர்வசரீரத்தில் பிரவேசிக்கச் சொன்னார். விஷ்ணுவின் சரீரத்தில் பிரவேசித்தார் ராமன். தன்னை பக்தியோடு பின் தொடர்ந்த ஜீவராசிகளுக் கொரு லோகம் கொடுக்கும்படி விஷ்ணு பிரம்மாவிடம் சொல்ல, பிரம்மா அவர்களுக்கு ஸாந்தானிக லோகம் கொடுத்து, "விஷ்ணுவை தியானித்து சரீரத்தை விடுபவர்களுக்கு ஸாந்தானிக லோகம் கிடைக்கும்"—என்றார்.

வானரர்கள் முன்பு எந்த தேவசரீரத்திலிருந்து உண்டானார்களோ அந்தந்த சரீரத்தில் பிரவேசித்தார்கள். ஸுக்ரீவன் எல்லோருமறிய ஸூரிய மண்டலத்தில் பிரவேசித்தான். மற்றுமுள்ளோர் யாவரும் ஸரயூநதியில் கோப்ரதாரம் என்ற துறையில் நீராடியெழுந்து தேவசரீரம் பெற்று விமானத்திலேறினார்கள். எல்லோரையும் பிரம்மா ஸாந்தானிக லோகத்தில் சேர்த்துவிட்டுத் தம்மிருப்பிடம் போனார்.

111—ம் ஸர்கம்.

ஸ்ரீராமாயண மஹிமை.

வால்மீகியினால் எழுதப்பட்ட இந்த ராமாயணம் பிரம்மாவினாலும் பூஜிக்கப்பட்டது. தேவர்கள் இந்தக் காவியத்தை தினந்தோறும் கேட்டுக் களிக்கிறார்கள். ராமாயணத்தை சிராத்த காலங்களிலும் மற்றெக்காலத்திலும் படித்தால் பல ஸுகிருதங்களுமுண்டாகும். அயோத்தி நெடுநாள் சூன்யமாயிருந்து ருஷபனுடைய காலத்தில் மறுபடியும் ராஜதானியாயிற்று. இந்தப் புண்ணிய காவியம் யாவருக்கும் மங்களகரமானது.

உத்தரகாண்ட விமரிசம்.

1. ராமாவதாரகாலம்—

இப்பொழுது இருபத்தெட்டாவது சதுர்யுகத்தில் கலியுகம் நடக்கிறது. ராமன் ஐந்தாம் சதுர்யுகத்தில் திரேதாயுகத்தில் அவதரித்தார்.

ஸ்ரீரங்கமாஹாத்மியம் தசாத்யாயி 8ம் அத்தியாயம் பார்க்க.

2. ராமாதிகள் அனுஷ்டித்த தர்மம்—

ராமாயண புருஷர்கள் நால்வரும் நாலு தர்மத்தை அனுஷ்டித்தார்கள்:

ராமன் பித்ருவாக்கிய பரிபாலனம் முதலான ஸாமன்யதர்மத்தை அனுஷ்டித்தார.

பகவானுக்குச்சேதனன் சேஷமாயிருக்கும் விசேஷ தர்மத்தை அனுஷ்டித்தான் லக்ஷ்மணன்.

பரதன் ராமன் வைத்தவிடத்மேத யிருந்து பாரதந்திரியமென்ற விசேஷதர தர்மத்தை அனுஷ்டித்தான்.

பகவச்சேஷத்வத்தின் எல்லையான பாகவத சேஷத்வத்தில் ஊன்றின சத்துருக்னன் ராமனை விட்டு, பரதனுக்கே அடிமைசெய்துகொண்டு விசேஷதமமான ததீய சேஷத்வத்தை அனுஷ்டித்தான்.

மதுரகவிகள் அருளிய **கண்ணிநுண் சிறுத்தாம்பின்** வியாக்கியானத்தில **நஞ்சீயர்** முதலானோர் இவ்வர்த்தம் நிர்வஹித்திருப்பது காண்க.

3. ஸீதாபரித்யாக காலம்—

ராமன் ஸீதையை கர்பகாலத்தில் விலக்கியது அபவாதத்தைப் போக்குவதற்காக. புதிதாய் வந்த ராஜனைப் பற்றி ஜனங்கள் ஏதேனும் சொல்வார்கள்—என்று நிச்சயித்தே, தன்னையும், ஸீதை, கைகேயி—முதலானவர்களையும் ஜனங்கள் என் சொல்கிறார்களென்று ராமன் தூதனைக் கேட்டதால், அவருக்கு அபவாதம் தெரியலாயிற்று. (உ. கா. 43ம் ஸர். 6ம் சுலோ—பார்க்க) ராமன் ராஜ்யபாலனம் செய்ய ஆரம்பித்தபோதுதான் ஜனங்களின் பேச்சைத் தெரிந்துகொள்ள விரும்புவாரேயன்றி, நெடுநாள் கழித்து விரும்பார். ஆகையால், ஸீதை கர்பமானதும் அவளைப் பரித்தியாகம் செய்ததும் பட்டாபிஷேகமாகி, இரண்டு வருஷத்துக்குள். ஏனெனில்,—

வஸந்தருதுவில் பட்டாபிஷேகமானபிறகு, ராமன் ராக்ஷஸர்களோடும் வானரர்களோடும் விநோதமாய்க் காலம் கழிக்கையில் சிசிரருது கழிந்ததென்று உ. கா. 39ம் ஸர். 28வது சுலோகத்தில் சொல்லியிருப்பதால் அது ஒரு வருஷம். ராமன் ஸீதையின் கர்பத்தைத் தெரிந்துகொள்கையில் சிசிரருது கழிந்ததென்று 42ம் ஸர். 28ம் சுலோகத்தில் சொல்லியிருப்பது இரண்டாவது சிசிரருதுவாகையால் அது ஒரு வருஷம்—ஆக இரண்டு வருஷமென்பது நிச்சயம்.

ராமாயணகானம் நடந்த அசுவமேதம் ராமனே செய்த முதல் யாகம். அதற்குப்பின் பதினாயிரம் வருஷம் கழிந்ததென்று 99ம் ஸர். 9வது சுலோகத்திலும், 102ம் ஸர். 16ம் சுலோகத்திலும் வால்மீகியே வாய்விட்டுச்சொல்கிறார். ஸீதையின் கர்போத்பத்தியைச் சொல்லுமுன்னமே 42ம் ஸர் 29ம் சுலோகத்தில் ராமனும் ஸீதையும் பதினாயிரம் வருஷம் பலவித ஸுகங்களை அனுபவித்ததாகச் சொல்

லியிருப்பது உண்மைக்கு விரோதமாகையால், இந்த 29ம் ச்லோகம் தவறிவிழுந்ததாகக் கொள்ளவேண்டும் திலகரும் இப்படியே அபிப்பிராயப்படுவதை இந்த ச்லோக வியாக்கியானத்தில் காண்க.

4. ஸீதாப்ரபாவம்—

இதிஹாஸ ச்ரேஷ்டமான ஸ்ரீ ராமாயணத்தால் சிறையிருந்தவளேற்றம் சொல்லுகிறது.

—பிள்ளைலோகாசாரியார்.

தேவதேவ திவ்ய மஹிஷியான தன் பெருமையையும் சிறையிருப்பின் தண்மையையும் பாராதே, தேவஸ்திரீகள் சிறையை விடுவிக்கைக்காகத் தான் சிறையிருந்தது தயா பரவசையாயிறே. பிரஜை கிணற்றில் விழுந்தால் ஒக்கக் குதித்தெடுக்கும் மாதாவைப்போலே, இச்சேதனர் விழுந்த ஸம்ஸாரத்திலே தானுமொக்க வந்து பிறந்து இவர்கள் பட்டத்தைத் தானும் பட்டு ரக்ஷிக்கையாலே, நிருபாதிக மாத்ருத்வ ஸம்பந்தத்தால் வந்த நிரதிசய வாத்ஸல்யத்துக்கும் பிரகாசகமிறேயிது. கர்மநிபந்தனமாகிலிறே சிறையிருப்பு தண்மையாகும். ஆசிரிதரான தேவஸ்திரீகள் சிறையை விடுவிக்கைக்காகத்தன் அனுக்ரஹத்தாலே தானே வலியச்செய்ததாகையாலே ஏற்றத்துக்குடலாமித்தனையிறேயிது. இத்தை ராவண பலாத்காரத்தாலே வந்ததாக நினைப்பார் இவள் சக்திவிசேஷமறியாத க்ஷுத்ரரிறே.

ஸ்ரீராமாயணமெல்லாம் இவளுடைய ஏற்றம் சொல்லுகிறதென்னுமிடம் "**காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்னம் ஸீதாயாச்சரிதம் மஹத்**" என்று ஸ்ரீவால்மீகி பகவான் தானே வாயோலையிட்டு வைத்தானிறே. —மணவாளமாமுனிகள்

5. ஸீதாவியோகதத்துவம்—

பிராட்டி முற்படப் பிரிந்தது தன்னுடைய கிருபையை வெளியிடுகைக்காக.

நடுவில் பிரிந்தது பாரதந்திரியத்தை வெளியிடுகைக்காக.

அநந்தரம் பிரிந்தது அநந்யார்ஹத்வத்தை வெளியிடுகைக்காக. —பிள்ளைலோகாசாரியார்.

முதல் பிரிவு—

தேவஸ்திரீகள் சிறையை விடுவிக்கைக்காகத் தான் சிறையிருக்கையாலும்,—

அவ்விருப்பிலே தன்னை அல்லும் பகலும் அருவித்தின்ற க்ரூர ராக்ஷஸிகள், ராவணன் பராஜிதனாகவும் பெருமாள் விஜயிகளாகவும் திரிஜடை ஸ்வப்னம் கண்டத்தாலே பீதபீதைகளாய் நடுங்குகிற தசையிலே "**நீங்கள் நோவுபடும ஸமயத்துக்கு நானிருந்தேனே. நீங்கள் அஞ்சவேண்டா**" என்று அபயப்ரதானம் பண்ணியருளுகையாலும்;—

அது உக்திமாத்ரமாய்ப் போகாமே, ராவணவதாநந்தரம் தனக்கு சோபனம் சொல்ல வந்த திருவடி இவர்களைச் சித்ரவதம் பண்ணும்படி காட்டித்தரவேணும் என்ன, அவனோடே மன்றாடி, தான் அடியில் பண்ணின பிரதிக்ஞானுகுணமாக ஆர்த்ராபராதைகளை ரக்ஷிக்கையாலும், தன்னுடைய கிருபையை வெளியிட்டாளிறே.

இரண்டாவது பிரிவு—

கங்கைக் கரையேறின வனந்தரம், இளையபெருமாள் கனக்க க்லேசப்பட்டுக்கொண்டு, பெருமாள் திருவுள்ளமாய் விட்டருளின காரியத்தை விண்ணப்பம் செய்ய, அத்தைக் கேட்டு மிகவும் பிரலாபித்து கங்கையில்விழ நினைத்தாலும் வயிற்றிலுள்ள குழந்தையைக் காப்பதற்காக அது செய்தாளில்லை. இத்தால், ஆற்றாமையின் கனத்தாலே முடிந்து பிழைக்கை தேட்டமாயிருக்கச் செய்தேயும், அது செய்யமாட்டாதே, பெருமாள் நினைவைப் பின்சென்று தன் பிராணனை நோக்கிக் கொண்டிருக்க வேண்டும்படியான பாரதந்திர்யத்தையிறே பிரகாசிப்பித்தது. பிறர்க்காக ஜீவிக்கவேண்டும் பரதந்திரர்க்கு முடிவு தேட்டமானாலும் முடியப்போகாதே. பிரதமவிச்லேஷத்தில் பத்து மாஸத்துக்குள்ளே படுவதெல்லாம் பட்டவள் பதி சித்தானுவிதானமே தனக்கு ஸ்வரூபமென்னும் பாரதந்திரிய புத்தியாலேயிறே அநேக ஸம்வத்ஸரம் பாடாற்றியிருந்தது. ஆக, இப்படி இவ்விருப்பிலே தன்னுடைய பாரதந்திரியத்தை வெளியிட்டாளிறே.

மூன்றும் பிரிவு—

அநந்யா ராகவேணுஹம் பாஸ்கரேண ப்ரபா யதா—அநந்யா ஹி மயா ஸீதா—என்று உபயாநு ஸம்மதமான தன்னுடைய அநந்யத்வப்ரயுக்தமான அநந்யார்ஹத்வத்தை ஸர்வஸம்மதமாம்படி பிரகாசிப்பிக்கை.

—மணவாளமாமுனிகள்

6. அசுவமேதயாகம்—

அசுவமேதம் மூன்று நாள் யாகமென்று பா. கா. 14-வது ஸர். 40ம் சுலோகம். ஆனாலும், வேதத்தில் சொல்லிய ஸகல யாகங்களையும் இதற்கு அங்கமாகச் செய்யலாமாகையால், நாளுக்கு 20 ஸர்கமாக 648 ஸர்கமாயுள்ள ராமாயணத்துக்கு வேண்டிய 33 நாளும் அசுவமேதமே தொடர்ந்ததென்று கொள்க.

7. ராமாயணகானம்—

ஸீதை சபதம் செய்த தினத்தில் ராமாயணகானம் நடைபெறவில்லை. அவள் பாதாளத்தில் பிரவேசித்தபிறகு காவியத்தின் சேஷத்தைக் கேட்கும்படி பிரம்மா சொல்லியும், ராமன் 'நாளைகேட்கிறேன்' என்றதால், (98ம் ஸர். பார்க்க) அன்று ராமாயணகானம் நிறுத்தப்பட்டது) ஆகவே 34வது நாளில்தான் ராமாயணம் பூர்த்தியாயிருக்க வேண்டும்.

8. ராமன் குசலவர்களை அறிந்த ஸந்தர்பம்—

செவியால் ராமாயணம் கேளாநிற்கையில் ராமன் குசலவர்களை ஸீதையின் பிள்ளைகளென்று தெரிந்துகொண்டதால், (95ம் ஸர்கம் பார்க்க) ஸீதைக்குக் குழந்தைகள் பிறந்து ராமாயணகானம் செய்வதை சத்துருக்னன் கூட ராமனுக்குத் தெரிவிக்கவில்லையென்று வியக்தமாகிறது. குசலவர்களைத் தெரிந்துகொண்டவுடனேயே ராமன் ஸீதையை வரவழைக்க, ஸீதை மறுநாள் வந்து பாதாளத்தில் பிர

வேசித்தவுடன் பிரம்மா காவியத்தின் சேஷத்தைக் கேட்கும்படி சொன்னதால், உத்தரகாண்டத்தினிடையில்தான் ராமன் குசலவர்களைத் தெரிந்துகொண்டார். அது தானும் எந்த ஸர்கம் கானம் செய்யப்படுகையில்? என்றால்,—71ம் ஸர்கத்திலென்று முன்பு காட்டப்பட்டது, ஸீதைக்குக் குழந்தைகள் பிறந்ததைச் சொல்லும் 66ம் ஸர்கம் கானம் செய்யப்படும்போதே ராமன் குசலவர்களை இன்னாரென்று தெரிந்துகொண்டிருக்கலாம். ஆகையால் ராமாயணத்தின் சேஷமென்பது உ,கா. 67ம் ஸர்கத்துக்கு மேற்பட்ட பாகமென்று கொள்ளவேண்டும். உத்தரகாண்டம் முழுவதையும் ராமன் கேட்டதால் அசுவமேதத்துக்குப்பிறகான பவிஷ்யத் விருத்தாந்தம் மட்டில் ராமனுக்கு ராமாயணமூலமாய்த் தெரியலாயிற்று,

9. ராமாயணம் எழுதிய காலம்—

"ப்ராப்த ராஜ்யஸ்ய ராமஸ்ய சகார சரிதம் ருஷி:" என்ற பா. கா. 4ம் ஸர்கம் முதல் சுலோகத்தால் ராமபட்டாபிஷேகமான பிறகு ராமாயணம் எழுதப்பட்டதென்று தெரிகிறது. தமஸா நதிக்கரையில் ராமாயணம்எழுதிய வால்மீகி ஸீதை கங்கைக்கரையில் பரித்யஜிக்கப்படுவாள் என்று ராமாயணம் எழுதும்போதே தெரிந்து கொண்டு கங்கைக் கரைக்கு ஆச்ரமத்தை மாற்றியதால், ஸீதாபரித்தியாகத்துக்கு முன்னமே ராமாயணம் எழுதிப் பூர்த்தியாயிருக்க வேண்டும். ஆகவே, ஸீதாபரித்தியாகத்துக்குப் பிறகுமுள்ள உ. கா. 41ம் ஸர்கத்துக்கப்பாலாயுமுள்ள பவிஷ்யத் விருத்தாந்தம் மட்டும் வால்மீகிக்கு முன்னதாகவே தெரிந்ததாயிற்று.

10. இறந்தவரைப் பிழைப்பித்தல்—

இக்காரியம் ராமாவதாரம் கிருஷ்ணவதாரம் இரண்டிலும் நடந்தேயாயினும், கிருஷ்ணன் தன் சக்தியாலேயே

பிழைப்பித்தார். 'பிராமணக் குழந்தையின் அகால மரணத்துக்குக் காரணமான சம்புகனைமட்டும் ராமன் தன் சக்தியால் வதம் செய்தாரேயன்றி, குழந்தை பிழைக்குமாறு தேவர்களிடம் வரம் கேட்டார். உ. கா. 76ம் ஸர்கம் பார்க்க.

11. கதையின் தொடர்ச்சி—

ராமாயணம் முழுவதும் தொடர்ச்சியான கதை: பட்டாபிஷேகமான வுடனேயே ஸிதாபரித்தியாகம். உடனே லவணாசுரவதம். சத்துருக்னன் மதுராபுரியிலிருந்து அயோத்திக்கு வந்துபோனவுடனேயே சம்புகவதம். உடனே அசுவமேதம். இப்படி 102ம் ஸர்கம் முடிய யாவும் அடுத்தடுத்து நடந்த கதை. காலன் பிரவேசிக்கும் 103ம் ஸர்கம் முதல் கடைசி வரையில் தொடர்ச்சியான கதை. 102ம் ஸர்கத்துக்கும் 103ம் ஸர்கத்துக்கும் இடையில் பல்லாயிரம் ஆண்டுகள் கடந்தாலும், யாதொரு விசேஷமும் நடவாததால் அவ்வாண்டுகளில் நடந்த ஸாமான்ய காரியங்கள் 102ம் ஸர்கத்தின் கடைசியில் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டன.

12. ராமாயணத்தின் ஆதயந்தங்கள்—

பாலகாண்டம் 5வது ஸர்கத்திலிருந்து ராமாயண கதை ஆரம்பித்தாலும் ஸங்க்ஷேபராமாயணத்திலிருந்தே ராமாயணம் ஆரம்பிக்கிறது. (உ. கா. 94ம்ஸர்கம் பார்க்க) உ. கா. 98ம் ஸர்கப்படி உத்தரகாண்டம் முடிவுவரையிலும் ராமாயணம். பாலகாண்டம் முதல் நாலு ஸர்கமும் உத்தரகாண்டமும் அவால்மீகியமென்று சில நவீனர் சொல்வார்கள். அப்படியாகில், காயத்ரீ ராமாயணத்துக்கு வேண்டிய முதல் சுலோகமான ராமாயணம் முதல் சர்கம முதல் சுலோகமும், 24-வது சுலோகமான உ. கா. 66-ம் ஸர் முதல் சுலோகமும் கிடைக்காமற்போய் ராமாயணம் காயத்ரீபரமென்ற தத்துவமும் பேதிக்கும்.

13. பொய்க்கதைகள்—

குசலவர்கள் ராமனுடைய யாகக்குதிரையைக் கட்டிப் பிடித்து ராமனோடு எதிரம்பு கோத்தது முதலான கதைக ளெல்லாம் இந்த உத்தரகாண்டத்தில் காணப்படவில்லை யாகையால், அவால்மீகீயங்களென்றும் அஸங்கதங்களென் றும் கொள்க.

14. உத்தரகாண்டத்தில் கண்ட அதிசயங்கள்—

ஸர். 4. யக்ஷிப்பவர் (பக்ஷிப்பவர்) யக்ஷர்கள், ரக்ஷிப்ப வர் ராக்ஷஸர்கள்—என்று யக்ஷ ராக்ஷஸர்களின் பிரிவு.

ராக்ஷஸப்பெண்களுக்கு உடனே கர்பம், உடனே பிர ஸவம், பிறக்கும்போதே குழந்தைக்கு தாய்க்கு சமமான வயஸு.

ஸர். 9: ராக்ஷஸர்களில் கூட பால்ய விவாஹம்.

ஸர். 23: க்ஷீராப்தி ஸுரபியின் பாலினால் நிரம்புகிறது.

ஸர். 97: ஸீதை சபதம் செய்யும்போது வீசிய காற்று கிருதயுகத்திலேபோல கண்ணுக்குத் தென்பட்டது.

15. ராவணவம்சம்—

பித்ருவம்சம்		மாத்ருவம்சம்
1. பிரம்மா		1. ஹேதி *
|		2. வித்யுத்கேசன்
2. புலஸ்தியர்		3. ஸுகேசன்
|		4. ஸுமாலி
3. விச்ரவஸ்	———	5. கைகஸி

* 4, 5-ம் ஸர்கங்களில் இவர்களுடைய விவரம் காணலாம்.

ராவணன், கும்பகர்ணன், சூர்பநகை, விபீஷணன்.

இடமில்லாக்குறையினால், விமர்சிக்கவேண்டிய இடங் களில் மாதிரிக்கு சிற்சில விஷயங்களே காட்டப்பட்டன.

மணவாளமாமுனிகளின் வியாக்கியானம் சுருக்கப்பட்டது.

16. 53-ம் ஸர்கக் குறிப்பில் ராமன் ஸீதாபரித்தியாகத்துக்குப் பிறகே ராஜ்யபாலனம் பண்ணினதாகத் தீர்மானித்தது தவறு. அபவாதத்தைக்கேட்டு ஸீதையைப் பரித்தியஜித்த பிறகு லக்ஷ்மணன், வருமளவும் நாலுநாள் ராஜ்ய காரியத்தை ராமன் கவனிக்கவில்லையென்று அந்த ஸர்கத்தின் தாத்பரியம்.

17. அயோத்தியாகாண்டத்தில் ராமன் காட்டுக்குப் போகும்போதும், உத்தரகாண்டத்தில் லக்ஷ்மணன் ஸீதையைக் காட்டில் விடும்போதும், கங்கைக்கரையில் ரதத்தை விட்டிறங்கினதாகச் சொல்லப்படுகிறது. இதனால், மத்தியிலுள்ள கோமதீ முதலிய நதிகளுக்கு அக்காலத்திலேயே பாலம் இருந்து, ரதம் பாலத்தின் மேல் போயிருக்கவேண்டுமென்று ஊஹிக்கலாம்.

18. ருஷபன்—

ராமன் பரந்தாம யாத்திரை செய்தபோது அயோத்தி வாஸிகள் யாவருக்கும் ஸாந்தானிக லோகம் கொடுத்த பிறகு, ருஷபனால் அயோத்தி மறுபடியும் பட்டணமாகப் போகிறதென்று உ. கா. 111ம் ஸர்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ருஷபனுடைய காலமும் இவன் யாருடைய பிள்ளை யென்பதும் ஸுலபமாய்த் தெரியவில்லை.

ஊர்களின் விவரம்.

ஸர்கம்.

18. உசீரபிஜதேசம்—மருத்தன் என்ற அரசனுடையது. ஹிமாலயத்துக் கருகிலிருப்பதாய்த் தெரிகிறது.

31. மாஹிஷ்மதீ—கார்த்த வீரியார்ஜுனனுடைய பட்டணம். இண்டூர் ஸமஸ்தானத்துக்குத் தெற்கில் 40மைல் தூரத்தில் நர்மதா நதிக்கரையிலுள்ளது. மஹேசுவரம்—என்று இப்போதைய பெயர்.

52. கேசினீ—கோமதீ நதிக்குத் தெற்கிலுள்ள ஒரு ஊர். (விவரம் தெரியவில்லை.

55. வைஜயந்தம்—கௌதமாச்ரமத்துக் கருகில் நிமிச்சக்ரவர்த்தி அமைத்த பட்டணம். (விவரம் தெரியவில்லை.)

79. மதுமந்தம்—விந்திய பர்வதத்துக்கு அருகிலுள்ள பட்டணம். இக்ஷ்வாகுவின் நூறுவது புத்திரனான தண்டனால் அமைக்கப் பெற்றது.

81. தண்டகாரணியம்—விந்திய பர்வதத்துக்கும் சைவல பர்வதத்துக்கும் மத்தியில் தண்டன் ஆண்ட ராஜ்யம். சுக்ராசாரியருடைய சாபத்தினால் ஆரணியமாகி தண்டகாரணியமெனப் பெயராயிற்று. சைவல பர்வதம் யாதென்று தெரியவில்லை.

87. பாஹ்லீகதேசம்—இளன் ஆண்ட தேசம். காகயத்துக்கு வடகிழக்காக பீஸ் ஸத்லிஜ்—என்ற இரண்டு இடங்களுக்கும் மத்தியிலுள்ளது.

90. பிரதிஷ்டாநகரம்—இளன் புதிதாக மத்திய தேசத்தில் அமைத்த பட்டணம். மத்திய தேசமென்பது காசி தேசம்.—59-ம் ஸர்கம் பார்க்க.

91. நைமிசாரணியம்—சாண்டிலா ஸ்டேஷனிலிருந்து 24 மைல் தூரத்திலுள்ளது.

100. காந்தார தேசம்—கூனர், ஸிந்து—இரண்டு நதிகளுக்கு நடுவிலும் காபூல் நதியோரமாயுமுள்ளது. ஸிந்து நதியின் இருபுறத்திலுமுள்ளதாக 100ம் ஸர்கத்தில் சொல்லப்படுகிறது.

101. தக்ஷசிலா நகரம்—பரதனுடைய பிள்ளை தக்ஷன் ஆண்ட பட்டணம். ஜீலம் நதிக்கரையில் ராவல் பிண்டிக்கும் அட்டக்குக்கும் மத்தியில் கலகசிராவுக்கு வடகிழக்காய் ஒரு மைல் தூரத்திலுள்ளது.

புஷ்கலாவதம்—பரதனுடைய இரண்டாவது பிள்ளை புஷ்கலன் ஆண்ட பட்டணம். இப்போதைய பெயர்-பெஷாவார்.

102. காருபத தேசம்—மேற்கிலுள்ள தேசமென்று கோவிந்தராஜர். விவரம் தெரியவில்லை.

அங்கதீயம்—லக்ஷ்மணனுடைய பிள்ளை அங்கதன் ஆண்டது.

சந்திரகாந்தம்—லக்ஷ்மணனுடைய பிள்ளை சந்திரகேது ஆண்டது. இவ்விரண்டு பட்டணங்களும் காருபததேசத்திலுள்ளவை.

108. குசாவதி—விந்தியமலைக்கருகிலுள்ளது. ராமனுடைய பிள்ளை குசன் ஆண்ட பட்டணம்.

சிராவஸ்தி—லவன் ஆண்டது. இவ்விரண்டின் விவரம் தெரியவில்லை.

விதிசை—சத்ருக்னனுடைய பிள்ளை சத்ருகாதி ஆண்ட பட்டணம்.

புஸ்தகம் கிடைக்கும் இடம்:—

திருவரங்கம் பெரிய கோயில்

காரியாலயம்,

282, வடக்குச் சித்திரை வீதி,

ஸ்ரீரங்கம் (திருச்சி)

வீ. கே. ஸ்ரீரங்காசாரியார்

29, சோலையப்ப முதலி வீதி

மைலாப்பூர் (சென்னை)